பக்கங்கள் : இருபது+IV=24

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 மார்கழி 04 ஞாயிற்றுக்கிழமை (19.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 23

# புலிகளின் யோசனையைப் பரிசீலித்து

# பேச்சை ஆரம்பிக்க சு. கட்சி ஆதரவு

## தீர்மானம் எடுக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் மத்திய குழுவின் அவசரக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு,டிசெம்பர்19

**நோர்வே ஊடாக விடுதலைப் புலிகள் வழங்கியிருக்கும் யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழ ஜனாதிபதிக்கு முழு ஆதரவு தெரிவித்திருக்கின்றது.**

**புலிகளின் தகவல்களைப் பரிசீலித்து அதனடிப்படையில் பேச்சுக்களை உரிய நேரத்தில் ஆரம்பிப்பதற்கான தீர்மானத்தை எடுக்கும் அதிகாரத்தைக் கட்சித் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவுக்கு வழங்குவது என்றும் மத்தியகுழ முடிவு செய்திருக்கின்றது.**

ஜனாதிபதி செயலகத்தில் வெள்ளியன்று இரவிரவாக நடைபெற்ற கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்திலேயே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

நாட்டின் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அபிப்பிராயத்தைப் பெறுவதற்காக அக்கட்சியின் தலைவியும், ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்த மத்தியகுழுக் கூட்டத்தைக் கூட்டியிருந்தார்.

வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகிய கூட்டம் அன்று நள்ளிரவு தாண்டி நேற்று அதிகாலைவரை நீடித்தது.

சமாதான முயற்சிகளின் தேக்கநிலை மற்றும் அது தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்துக் கூட்டத்தில் நீண்ட நேரம் விரிவாக ஆராயப்பட்டது.

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக மத்திய குழுவின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி இந்தக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான அடிப்படையாக விடுதலைப் புலிகள் சமர்ப்பித்திருக்கும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் தொடர்பாகக் கூட்டத்தில் வாதப்பிரதி

(18ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட்டுடன் கைதானவர் மறியலில்

மட்டக்களப்பு,டிசெ.19

வாழைச்சேனை காயாங்கேணியில் நாவலடி பொலீஸ் சோதனை நிலையத்தில் இரு கிரனேட்டுகளுடன் கைதுசெய்யப்பட்ட இளைஞன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கல்மடுவைச் சேர்ந்த வெள்ளைக்குட்டி தர்மகுமார் (வயது-25) என்பவர் நேற்றுமுன்தினம் இரு கிரனேட்டுக்களுடன் கைதுசெய்யப்பட்டிருந்தார். இவர் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டபோது விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (3)

## களுவங்கேணியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு,டிசெ.19

மட்டக்களப்பு மாவட்டம் களுவங்கேணியில் நேற்றுமுன்தினம் இரவு 8மணியளவில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

களுவங்கேணியைச் சேர்ந்த சிவகுரு தியாகராசா (வயது-24) என்பவரே உயிரிழந்தவராவார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## பௌத்த பிக்குகளை அரசியலில் இருந்து ஒதுக்கச் சதி செய்கிறார் ஜனாதிபதி!

### ஹெல உறுமய கடுஞ்சீற்றம்

கொழும்பு,டிசெ.19

பௌத்த சாசன ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பௌத்த பிக்குகளை அரசியலில் ஈடுபடுவதினின்றும் தடுப்பதற்கு ஜனாதிபதி சதிசெய்கின்றார் என்று ஜாதிக ஹெல உறுமய குற்றஞ்சாட்டியிருக்கின்றது. இந்த விடயத்தால் அரசுக்கும் ஹெல உறுமயவுக்கும் இடையே புதிய பிணக்கு ஒன்று ஏற்பட்டிருக்கின்றது.

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் பௌத்த பிக்குகளின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனேயே மேற்படி அறிக்கையை நடை

(18ஆம் பக்கம் பார்க்க)

### இசை நிகழ்ச்சி குண்டு வெடிப்புச் சம்பவம்:

## இந்தியாவிடம் தனது கவலையை வெளியிடுகிறது ஹெல உறுமய

கொழும்பு,டிசெ.19

கொழும்பில் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இந்திய அரசிடமும் இந்திய மக்களிடமும் ஜாதிக ஹெல உறுமய தனது கவலையை வெளியிட்டிருக்கின்றது.

ஹெல உறுமயவின் பிரதித் தலைவர் வண. ஓமல்கே சோபித தேரர் கொழும்பில் உள்ள இந்தியத் தூதருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நீண்டகால உறவைக் கொண்ட இலங்கை - இந்திய உறவுகளைச் சீர்குலைக்க மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல்களுக்கும் தங்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து நடத்தி

(18ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் தமிழ்நாடு செல்வர்

கொழும்பு,டிசெ.19

இலங்கையில் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில் ஏற்பட்டிருக்கின்ற இழுபறி நிலைக்கான காரணங்கள் குறித்து தமிழகத் தலைவர்களுக்கு விளக்கும் முகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்

(18ஆம் பக்கம் பார்க்க)

## மல்வத்த மகாநாயக்கர் அரசுக்குப் பாராட்டு!

கொழும்பு,டிசெ.19

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு இப்போது சரியான பாதையிலே சென்றுகொண்டிருப்பதாக மல்வத்தபீட மகாநாயக்கர் அதி சங்கைக்குரிய புத்தட்டுவாவே ஸ்ரீசித்தார்த்த சுமங்கள தேரர் அரசுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மா தட்டுப்பாடு குறித்து செயலகக் கூட்டத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம்,டிசெ.19

குடாநாட்டில் கோதுமை மாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்க யாழ். செயலகம் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதத்துக்கு வழங்கப்பட்ட கோட்டா அளவு கோதுமை மாவே நவம்பர் மாதத்துக்கும் வழங்கப்பட்டதால், மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது என்று யாழ். செயலக அதிகாரிகள் கூறுகின்றனர்.

மாவுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாடு மற்றும் அதனால் ஏற்பட்டிருக்கும் நிலைமை என்பன

(18ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு-அம்பாறையில் வெள்ளத்தினால் பாதிப்புற்றோருக்கு உதவிப்பொருள்கள்

கொழும்பு,டிசெ.19

மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்க எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நிவாரணப் பொருள்கள் எடுத்துச்செல்லப்படவிருக்கின்றன.

கொழும்பு, மலையகம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் சேகரித்த பொருள்கள் அங்கு எடுத்துச்செல்லப்பட்டு வழங்கப்படவிருக்கின்றன.

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் நேற்று

(18ஆம் பக்கம் பார்க்க)

## பண்டாரவளையில் மண்சரிவு

கொழும்பு,டிசெ.19

பண்டாரவளை ரயில் நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் மண்சரிவு ஏற்பட்ட காரணத்தினால் பண்டாரவளைக்கும் பதுளைக்கும் இடையிலான ரயில் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.

இந்த மண்சரிவின் காரணமாக பண்டாரவளைக்கும் பதுளைக்குமிடையிலான சில பகுதிகளில் ரயில் பாதைகள் மண்ணினால் மூடப்பட்டுள்ளன.

மாவட்ட ரயில்வே பொறியியலாளர் ஜி.எம். எஸ்.பி.கே.டிகல இதுபற்றிக் கூறுகையில் - மண்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதியில் 100அடி நீளமான தற்காலிக பாலம் அமைக்கப்படும் என்று தெரிவித்தார். இந்த வேலைகளை முழுதாக முடிப்பதற்கு மேலும் ஒருவாரகாலம் எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## சிவாஜிலிங்கத்தின் கொழும்பு வதிவிடத்துக்கு மின் துண்டிப்பு

கொழும்பு,டிசெ.19

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் கொழும்பு வாசஸ்தலத்துக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

ஜாவத்தை அரச மாடித்தொகுதியில் அமைந்துள்ள அவரது வாசஸ்தலத்துக்கே மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்து வந்த ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான தி.மகேஸ்வரனின் வாசஸ்தலத்துக்கும் மின்சாரம் அண்மையில் துண்டிக்கப்பட்டது தெரிந்ததே.

கடந்த மூன்று நாள்களாக சிவாஜிலிங்கத்தின் வாசஸ்தலத்துக்கான மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-70)

## நாவற்குழிப் பாலத்தில் உள்ள 12 வான் கதவுகள் திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.19

கடும் மழையையடுத்து தென்மராட்சி மற்றும் கோப்பாய் பிரதேசங்களில் தேங்கிய வெள்ளம் வடிந்தோட வசதியாக நாவற்குழிப் பாலத்தில் உள்ள 12 வான் கதவுகள் நேற்றுத் திறந்துவிடப்பட்டன.

கடந்த சில நாள்களாகப் பெய்த மழையினால் தென்மராட்சி மற்றும் கோப்பாய்ப் பகுதிகளில் பெரும் வெள்ளம் தேங்கியதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இதையடுத்து, யாழ். அரச அதிபரின் வழிகாட்டலில், நாவற்குழிப் பாலத்தில் அமைந்துள்ள 43 கதவுகளில் 12 கதவுகள் நேற்றுத் திறக்கப்பட்டன.

இதேவேளை -

வான் கதவுகளைத் திறப்பதற்கான பணியில் ஈடுபட்டவர்களில் எஸ்.எல்மோர் என்பவர் காயங்களுக்கு இலக்கானார். (ஐ-3)



2ஆம் லெப். மாலதி படையணியின் உருவாக்கத்தில் 'வரலாறு தந்த வல்லமை' பாடல் ஒலிப்பேழை அறிமுகவிழா நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் சுவீடன் உப்சாலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் சார்க், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழியிடமிருந்து சிறப்புப் பிரதியைப் பெறுவதையும் மாவீரர் அமுதினியின் தந்தை சிவசுப்பிரமணியம் பொதுச்சுடரினை ஏற்றுவதனையும் -

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா, யாழ். மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, மாலதி படையணித் தளபதி தமிழ்ச்செல்வி, மாவீரர் அமுதினியின் தந்தை சிவசுப்பிரமணியம், மாலதி படையணிப் போராளியும் பாடலாசிரியருமான தமிழவள், ஆதிலட்சுமி சிவகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# பாடசாலை முகாமைத்துவ சபை முறைமை ஜே.வி.பி. எதிர்த்தாலும் அமுல் செய்யப்படும்!

## கல்விசார் தொழிற்சங்கவாதிகள் மத்தியில் ஜனாதிபதி சூளுரை

"நாட்டின் கல்வித்துறையை மேம்படுத்த வேண்டுமாயின் பாடசாலைக் கல்வித் தராதரத்தை மேம்படுத்தவேண்டும். இதற்காகப் பாடசாலை மட்ட முகாமைத்துவ சபை முறையை அறிமுகப்படுத்த நான் முயற்சிகள் எடுத்துள்ளேன். இதற்கு ஜே.வி.பியினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். யார் எதிர்ப்புத் தெரிவித்தாலும் அந்தக் கொள்கைத் திட்டத்தை நடைமுறைப் படுத்தியே தீருவேன்."

- ஜனாதிபதி மாளிகையில் அனைத்துக் கல்விசார் தொழிற்சங்கங்களைக் கடந்த வியாழன் சந்தித்தபோது இப்படி அடித்துக் கூறினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அரச பாடசாலைகளை முகாமைத்துவம் செய்ய வெளியாரைக் கொண்ட முகாமைத்துவச் சபைகள் அமைக்கப்படுவது பாடசாலை நிர்வாகத்தில் தனியார் தலையிட வழி செய்யும். இது அரச பாடசாலைகளையும் தனியார் மயப்படுத்த எடுக்கப்படும் முதல் நடவடிக்கை எனத் தெரிவித்து, அதைக் குறைகூறி, அம்முறை நடைமுறைப்படுத்தப்படுவதைக் கடுமையாக எதிர்க்கிறது ஜே.வி.பி. இந்த எதிர்ப்பையே தாம் பொருட்படுத்தப்போவதில்லை என்று ஜனாதிபதி குமாரதுங்க கூறியிருக்கின்றார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், தரப்படுத்தப்பட்ட அதிபர் சேவைச் சங்கம், மலையக ஆசிரியர் முன்னணி உட்பட பத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களுடன் இரண்டு மணிநேரம் ஜனாதிபதி உரையாடினார்.

தொழிற்சங்கங்களின் பிரச்சினைகளை விரிவாகக் கேட்டறிந்த ஜனாதிபதி, இதற்காகத் தாம் எடுத்திருக்கும நடவடிக்கைகளைத் தனித் தனியாக விவரித்தார்.

கல்வித்துறை மறுசீரமைப்பில் முக்கியமானதாகக் கருதப்படும் பாடசாலை முகாமைத்துவ முறையை ஜே.வி.பி. எதிர்த்தாலும் அதை நடைமுறைப்படுத்தத் தாம் தீர்மானித்துள்ளார் எனவும் அவர் கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட உறுதி மொழிகள் பின்வருமாறு:-

★ இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் இரு தடவைகள் நடத்தப்பட்ட மட்டுப் படுத்தப்பட்ட பரீட்சை முடிவுகளின்படி நேர்முகப் பரீட்சைகளை நடத்தி நியமனங்களை வழங்குதல்.

★ கல்வி நிர்வாக சேவைக்கு, சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையிலான நேர்முகப்பரீட்சையை ஜனவரியில் நடத்துதல்.

★ போட்டிப் பரீட்சைகளின் அடிப்படையில் அதிபர் பதவியுயர்வுகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

★ கல்விசார் சம்பள முரண்பாடுகள் தொடர்பான விடயங்களைத் தீர்மானிக்கும் பொறுப்பை திஸ்ஸ தேவேந்திர ஆணைக்குழுவிற்கு வழங்குதல்.

★ கல்வி நிர்வாக சேவையின் வடக்கு - கிழக்கு உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை, திறந்த போட்டிப் பரீட்சை ஆகிய இரண்டு முடிவுகளையும் வெளிப்படுத்தல்.

★ கல்வி நிர்வாக சேவையின் மூன்றாம் வகுப்புப் பதவியுயர்வுகளுக்கான நேர்முகப் பரீட்சைகளை எதிர்வரும் 28,29ஆம் திகதிகளில் கல்வியமைச்சில் நடத்துதல்.

★ அதேபோல, முதலாம் தரத்திற்கான பதவியுயர்வுகளுக்குரிய பரீட்சையை ஜனவரியில் நடத்துதல்.

இவை போன்ற தீர்மானங்கள் இங்கு எடுக்கப்பட்டன. (க-3)

# யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்த வகைகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்த வகைகளுக்குத் தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவி வருவதாக இரத்த வங்கி அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர்.

கடந்த சில நாள்களாக இரத்தத் தட்டுப்பாடு குறித்து பத்திரிகைகள் மூலம் தெரியப் படுத்தப்பட்டதையடுத்து சிலர் முன்வந்து இரத்தம் கொடுத்திருக்கிறார்கள் என்றும் -

எனினும், இரத்த வகைகளுக்கான தட்டுப்பாடு தொடர்ந்தும் நிலவுவதால் இரத்தம் வழங்குவோர் அவசரமாகத் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இரத்ததானம் செய்யவிரும்புவோர் 077 6527639 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் என்றும் இரத்த வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். (4)

# அரியாலையில் இன்று மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.லயன்ஸ் கழகமும்,அரியாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இரத்த அழுத்தம்,நீரிழிவு பொதுமருத்துவப் பரிசோதனைகளை யாழ்.பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி டாக்ரர் திருமதி ஜே.ஸ்ரீகந்தராசா தலைமையிலான மருத்துவக் குழுவினர் மேற்கொள்வர் இலவச மருந்து வகைகளும் வழங்கப்படும்.

இம் மருத்துவ முகாமில் எரிக்கணேஸ் ஸ்தாபனத்தின் உதவியுடன் இலவச கண் பரிசோதனையும் நடைபெறும். (3-202)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் பொழுதுபோக்கு மையத் திறப்புவிழா

கிளிநொச்சி,டிசெ.18

கிளிநொச்சி 'இசட் ஓ ஏ' நிறுவனத்தால் அமைக்கப்பெற்ற நோயாளர் பொழுதுபோக்கு மையத்தின் திறப்புவிழா நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பிற்கு உள்ளான நோயாளர்களிற்கான அறிவுரைகள் என்னும் நூல் வெளியீடு, ஒளிவிழா மற்றும் மருத்துவமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கௌரவிக்கும் நிகழ்வு என்பன இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிகளு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நடைபெறவுள்ளன.

மருத்துவ சங்கத் தலைவர் டாக்டர் டிபிறைறன் தலைமையில் நடைபெறவுள்ள அந்த நிகழ்வுகளுக்கு பிரதமவிருந்தினராக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும் சிறப்பு விருந்தினராக 'இசட் ஓ எ' நிறுவன திட்ட இணைப்பாளர் கரல்ட்வேர்ப்பும் கௌரவவிருந்தினர்களாக யாழ். போதனா வைத்திய சாலையின் பொது வைத்திய நிபுணர் டாக்டர் த.பேரானந்தராஜா, வணிகர் ஒன்றியத தின் தலைவர் சொ.ஜெயராஜ் ஆகியோரும் கலந்துகொள்வர். (3-202)

# 'வரலாறு தந்த வல்லமை' ஒலிப்பேழை யாழ்ப்பாணத்தில் நேற்று அறிமுகம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

2ஆம் லெப்டினன்ட் மாலதி படையணியின் உருவாக்கத்தில் இசைவாணர் கண்ணனின் இசையமைப்பில் உருவான 'வரலாறு தந்த வல்லமை' என்ற பாடல் ஒலிப்பேழை நேற்று அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று மாலை திருமதி ஆதிலக்சுமி சிவகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த அறிமுக விழாவில், யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி கலைவிழி முதற்பிரதியை வெளியிட்டு வைக்க, 1991ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆனையிறவு முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் அமுதினியின் தாயார் திருமதி சிவசுப்பிரமணியம் ஞானேஸ்வரி பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை கப்டன் அமுதினியின் தந்தையார் சிவசுப்பிரமணியம் ஏற்றிவைத்தார். ஒலிப்பேழையின் அறிமுக வுரையை எழுத்தாளரும், வானதி வெளியீட்டகத்தைச் சேர்ந்தவருமான போராளி தமிழவள் நிகழ்த்தினார்.

மாலதி படையணித் தளபதி தமிழ்ச்செல்வி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

சுவீடன் உப்சாலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் சோக் மற்றும் போராளிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (3-5)

# 'சமாதானத்தின் எதிர்காலம்' இன்று பகிரங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

விழுது மனித வள அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சமாதான நடவடிக்கையின் எதிர்காலம் தொடர்பான பகிரங்கக் கூட்டமொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அரசமைப்பு விவகாரக் குழுவின் அங்கத்தவரும் சமாதான செயலகத்தின் சட்டப் பிரிவுப்பணிப்பாளருமான டாக்டர் லக்ஷமன்மாரசிங்க, பேராதனைப் பல்கலைக் கழக அரசியல் விஞ்ஞானத்துறைப் பேராசிரியா ரஞ்சித் அமரசிங்க ஆகியோரின் உரைகள் இடம்பெறும்.

தொடர்ந்து இனப்பிரச்சினை தொடர்பானதும் அதன் மாற்றங்கள் தொடர்பானதுமான 'ஒதுக்காதி ஒதுக்கன்' என்ற இசையுடன் கூடிய வீதி நாடகமும் இடம்பெறும். (3-203)

# வீதி எல்லைக் கோட்டுக்குட்பட்ட கட்டடத்தை அகற்றுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ். மாநகர சபையின் அனுமதியின்றியும் வீதி எல்லைக்கோட்டுக்குள்ளும் நல்லூர் அரசடி வீதியில் கட்டப்பட்டுள்ள கடையின் வீதி எல்லைக கோட்டுக்குள் வரும் பகுதியை எதிர்வரும் ஜனவரி மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் அகற்றுமாறு கட்டட உரிமையாளருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்டுள்ளது.

அவ்வாறு அவர் அகற்றத் தவறும் பட்சத்தில் மாநகர சபை அவற்றை உடைத்து அப்புறப்படுத்தலாமெனவும் -

அதற்கான செலவை சம்பந்தப்பட்ட கட்டட உரிமையாளரே செலுத்தவேண்டுமெனவும் - நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதேவேளை -

கடந்த மாதம் யாழ். பிறவுண் வீதியில் அங்கீகாரமின்றிக் கட்டப்பட்ட கட்டடம் ஒன்றை அகற்றுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டதும், எதிராளியால் மேன்முறையீடு செய்யப்பட்டு, இடைநடுவே வழக்கு வாபஸ் பெறப்பட்டதும் குறிப்பிடத்தக்கவை என்று மாநகர ஆணையாளர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-202)




சாருஹான் பங்குபற்றிய இசை நிகழ்வில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 'லங்காதீப' பத்திரிகையின் படப்பிடிப்பாளர் லங்கா ஜெயசுந்தர கொல்லப்பட்டமையைக் கண்டித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதைப் படங்களில் காணலாம்.

# வன்முறையைக் கைவிட்டால் மட்டுமே பலஸ்தீனத்துக்கு தனிநாடு அந்தஸ்து

## இஸ்ரேலியப் பிரதமர் ஷெரோன் தெரிவிப்பு

ஹெர்ஸ்லியா,டிசெ.19

இஸ்ரேலுக்கு எதிரான வன்முறையை நிறுத்தினால் பலஸ்தீனத்துக்குத் தனிநாடு அந்தஸ்து அளிப்பது குறித்து ஆராயப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் தெரிவித்தார்.

ஆனால், இது ஒன்றும் புதிய அறிவிப்பு இல்லை என்று பலஸ்தீனிய அதிகாரிகள் கருத்துக் கூறியுள்ளனர் .

யஸீர் அரபாத்தின் மறைவுக்குப் பிறகு மிகுந்த நம்பிக்கையுடன் இஸ்ரேலில் பேசிய போது ஷெரோன் இதை கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

இருப்பினும் காஸா குன்றுப் பகுதிகளில் வெள்ளிக்கிழமையும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தன.

இஸ்ரேலில் வியாழக்கிழமை ஷெரோன் பேசியதாவது:-

அமைதிப் பேச்சுக்கு முக்கிய தடையாக அரபாத் இருந்து வந்தார். தற்போது தடை நீங்கியுள்ளதால் 2005ஆம் ஆண்டு அமைதிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு 'நம்பிக்கைக்கான' ஆண்டாக விளங்கும். இந்த வாய்ப்பை நாம் இழந்து விடக்கூடாது.

பலஸ்தீனத்துக்கு தனிநாடு அந்தஸ்து அளிப்பது குறித்து இஸ்ரேல் ஆராயும். ஆனால் இஸ்ரேலுக்கு எதிரான வன்முறையை பலஸ்தீனர்கள் முதலில் கைவிடவேண்டும் என்றார்.(8)



மும்பையில் கடந்த 16ஆம் திகதி திருமதி இந்திய அழகிப்போட்டி நடந்தது. திருமதி இந்திய அழகியாக ஜீவிகா ஷா தேர்வுசெய்யப்பட்டார். அருணிமா தத்தா(வலது) இரண்டாவது இடத்தையும் சப்னா சர்மா(இடது) மூன்றாவது இடத்தையும் பெற்றனர். அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி திருமதி உலக அழகிப்போட்டியில் இவர்கள் பங்கேற்கவுள்ளனர். (8)

# கோபி அனானுக்கு 114 நாடுகள் ஆதரவு

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செய்லாளர் பொறுப்பில் இருந்து கோபி அனான் விலகவேண்டும் என்று அமெரிக்க செனட்டர்கள் சிலர் கோரியுள்ள நிலையில் 114 நாடுகளை உறுப்பினராகக் கொண்டு அணிசேரா இயக்கம் அனானுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

அனானின் தலைமையில் முழு நம்பிக்கை இருப்பதாக அணிசேரா நாடுகளின் சார்பில் அவருக்கு வியாழக்கிழமை அனுப்பப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

தற்போது ஐ.நாவுக்கு ஏற்பட்டுள்ள மிரட்டல்களையும் சவால்களையும சந்தித்து அமைப்பின் கொள்கைகளைப் பாதுகாக்கவேண்டும். அண்மைக்கால சம்பவங்கள் எவ்வகையிலும் உங்கள் கவனத்தைச் சிதறடிக்காது என்று நம்புகிறோம்' என்று கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (8)

# இந்தியா - சீனா இருதரப்பு வர்த்தகம் 1000 கோடி ரூபாவைத் தாண்டியது

பீஜிங்,டிசெ.19

இந்தியா - சீனா இடையேயான வர்த்தகம் 1000கோடி ரூபாவை எட்டி புதிய சாதனை படைத்துள்ளது.

இதுகுறித்து சீன சுங்கத்துறையின் புள்ளி விவரங்களில் கூறப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஜனவரி முதல் ஒக்ரோபர் மாதம் வரையிலான காலத்தில் இந்தியா - சீனா இடையேயான இரு தரப்பு வர்த்தகம் 1000 கோடி ரூபாவைத் தாண்டியுள்ளது. இதன்மூலம் இரு நாடுகளின் வ்த்தகத்தில் புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தக வளர்ச்சி வீதம் கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் 82.53 சதவீதம் அதிகம். இதன் மூலம் சீனாவுடன் அதிக அளவில் வர்த்தக உறவு வைத்துள்ள முதல் பத்து ஆசிய நாடுகள் பட்டியலில் இந்தியாவும் இடம்பிடித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஒக்ரோபர் மாதம் வரையிலான காலகட்டத்தில் சீனாவிற்காக இந்தியாவின் ஏற்றுமதி 60 ஆயிரம் கோடி ரூபாவைத் தாண்டியுள்ளது. கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் இது 90 சதவீதம் அதிகம். சீனாவிலிருந்து இந்தியாவின் இறக்குமதி 40 ஆயிரம் கோடி ரூபாவைத் தாண்டியுள்ளது. இது கடந்த ஆண்டை விட 72 சதவீதம் அதிகம்.

- இவ்வாறு சீன சுங்கத்துறையின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

# பிரிட்டனில் தேர்தல் நெருங்குகிறது பிளயருக்கு செல்வாக்கு அதிகரிப்பு

லண்டன்,டிசெ.19

பிரிட்டன் தேர்தலில் தற்போதைய பிரதமர் ரொனி பிளயருக்கு அமோக வெற்றி கிடைக்கும் என்று கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.

பிரிட்டனில் அடுத்த ஆண்டு மே மாதம் தேர்தல் நடக்கவுள்ளது. ஆளும் தொழிலாளர் கட்சி சார்பில் தற்போதைய பிரதமர் ரொனி பிளயர் மீண்டும் தேர்தலில் போட்டியிடுகிறார். வழக்கம் போல் கன்சர்வேட்டிவ் கட்சி பிளயரை எதிர்த்துக் களம் இறங்குகிறது. இந்தக் கட்சியின் சார்பில் மைக்கேல் ஹோவார்ட் என்பவர் போட்டியிடுகிறார். இரு கட்சிகளுக்கும் உள்ள செல்வாக்குக் குறித்து இப்போதே கருத்துக்கணிப்புகள் தொடங்கிவிட்டன. இது குறித்து டெய்லி டெலிகிராப் பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பில் தெரிவித்ததாவது:-

பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பில் முக்கிய எதிர்க்கட்சி வேட்பாளர் மைக்கேலுக்கு 32சதவீத ஆதரவே கிடைத்துள்ளது. ஆனால், பிரதமர் ரொனி பிளயர் மீது மக்கள இன்னும் நம்பிக்கை வைத்துள்ளனர். அவருக்கு 35 சதவீத ஆதரவை மக்கள் தெரிவித்துள்ளனர். கடந்த ஆண்டு நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பிலும் இதேபோல் பிளய்ருக்கு ஆதரவு அதிகமாகக் காணப்பட்டது. ஈராக் மீது போர் தொடுக்க ரொனி பிளயர் பெரும் ஆதரவு அளித்தார். மேலும், பிரிட்டன் படைகளையும் அந்த நாட்டுக்கு அனுப்பிவைத்தார். அதற்கு பிரிட்டனில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. எனினும், தேர்தல் விஷயத்தில் பிளயருக்குத்தான் ஆதரவு அதிகமாகக் காணப்படுகின்றது.

- இவ்வாறு டெய்லி டெலிகிராப் கூறியுள்ளது. (8)

# ஆயுர்வேத மருந்துப் பொருள்களில் நச்சுத்தன்மையுள்ள உலோகங்கள்

ஆயுர்வேத மூலிகை மருந்துப்பொருள்கள் சிலவற்றில் நச்சுத் தன்மை ஏற்படுத்தும் அளவுக்கு உலோகங்கள் கலந்திருப்பதால், இறக்குமதி செய்யப்படும் அனைத்து ஆயுர்வேத மருந்துப் பொருள்களையும் கட்டாயம் பரிசோதிக்க வேண்டும் என அமெரிக்க டாக்டர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உலோகங்களால் ஏற்பட்டுள்ள பாதிப்பைக் கண்டறிவதற்கு இந்த மருந்துப்பொருள்களை சாப்பிடும் அமெரிக்கர்கள் அனைவரும் டாக்டர்களைக் கலந்தாலோசிக்குமாறு அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

ஆயுர்வேத மூலிகை மருந்துப் பொருள்களை பகுப்பாய்வு செய்ததில், அவற்றில் 20 சதவீதப் பொருள்களில் காரீயம், பாதரசம், ஆர்செனிக் போன்ற உலோகங்கள் அடங்கியிருப்பது கண்டறியப்பட்டது.

இவற்றில் அடங்கியுள்ள அளவுக்கு உலோகங்களை நேரடியாக உட்கொண்டால் அது நச்சுத் தன்மையை உருவாக்கி உடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்த ஆய்வு முடிவு அமெரிக்க மருத்துவ சங்க பத்திரிகையின் டிசெம்பர் 15ஆம் திகதி இதழில் வெளியானது.

பொஸ்ரன் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியைச் சோந்த ராபர்ட் பி சாபரும் அவரது சகாக்களும் இந்த ஆய்வைச் செய்திருந்தனர்.

தெற்கு ஆசியாவில் தயாரிக்கப்பட்டு பொஸ்ரன் நகரில் கடைகளில் விற்பனை செய்யப்படும் 70 வெவ்வேறு ஆயுர்வேத மூலிகை மருந்துப் பொருள்களை இவர்கள் ஆய்வு செய்தனர்.

இவற்றில் 14 பொருள்களில் காரீயம், பாதரசம், ஆர்செனிக் உலோகங்கள் நச்சுத் தன்மையை ஏற்படுத்தும் அளவுக்கு கலந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. (8)

# ஜி-4 நாடுகளுக்கு வீட்டோ அதிகாரத்துடன் நிரந்தர உறுப்புரிமை அளிக்கமுடியாது

## ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான்



ஜி-4 நாடுகளுக்கு(இந்தியா, ஜப்பான், பிரேஸில், ஜேர்மனி) வீட்டோ அதிகாரத்துடன் கூடிய நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து அளிப்பது கடினம் என்று ஐநா. பொதுச் செயலாளர் கோபி அனான் கூறியுள்ளார்.

வாஷிங்ரனில் கோபி அனான் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் பதவி கோருவதைத் தவறு என்று யாராலும் கூறமுடியாது. அவர்கள் எந்த மாதிரியான கோரிக்கையை வைக்கிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் அது உள்ளது.

ஐ.நா.சீர்திருத்தக் குழு தெரிவிக்கும் ஏதாவது ஒன்றை மட்டுமே உறுப்பு நாடுகள் தேர்ந்தெடுக்கவேண்டும்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் 6 உறுப்பு நாடுகளுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து அளிக்கலாம். ஆனால், அவற்றுக்கு வீட்டோ அதிகாரம் வழங்க முடியாது என்று அக்குழு பரிந்துரைத்திருந்தது.

பாதுகாப்பு கவுன்ஸிலில் நிரந்தர உறுப்பினர்களை அதிகரித்தால் முக்கிய முடிவுகளை எடுப்பதில் தாமதம் ஏற்படும் என்று சில நாடுகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. முக்கிய முடிவுகளை எடுப்பதற்குத் தாமதம் ஆனாலும் பரவாயில்லை. அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்று ஜனநாயக முறைப்படி பாதுகாப்புச் சபை இயங்க வழிவகை செய்யவேண்டும்.

21ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துள்ள நிலையில் 1945இல் உள்ளது போல அல்லாமல் புத்துணர்வு பெற்ற அமைப்பாக ஐ.நா. எதிர்காலத்தில் செயற்படவேண்டும் - என்றார். (8)

நத்தார் நற்சிந்தனை

சியோனில் இருந்து அவர் மீட்பராக வருவார் யாக்கோப்பில் தீயதனைத்தையும் போக்கிடுவார் நான் அவர்களுடைய பாவங்களை அகற்றிவிடுவேன்

குட்வில் கொம்னிக்கேசன்

48, சென்பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம். T.P: 021 222 5636,3332

(C/39807)

உங்கள் விமானப் பயணத்திற்கு!

Aero Lanka

In Domestic Operation

New way of flying

Head Office
No.500, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel:2505632 - 3 Fax:2500626

Jaffna Office
No.86, PointPedro Road, Jaffna. Tel.:021-2226242
Fax:021-2225600

Trinco Office
No.47, Kandy Road, Trincomalee.
Tel.:026-2221519
Fax:026-2221519

Branch
No. 295, Jampettah Street, Colombo-13 Tel. 2430782 Fax:2430782

கொழும்பு - யாழ். | யாழ். - கொழும்பு

# நடிகர், நடிகை நெருக்கமாக இருக்கும் படத்தால் என்ன செய்தி புலனாகிறது?

## பத்திரிகைகளிடம் உச்ச நீதிமன்றம் கேள்வி

புதுடெல்லி,டிசெ.19

இரண்டு ஹிந்தி நட்சத்திரங்கள் நெருக்கமாக இருக்கும் படத்தை பத்திரிகைகள் வெளியிட்டதற்கு இந்திய உச்ச நதிமன்றம் வேதனை தெரிவித்தது. இப்படத்தினால் பொதுமக்களுக்கு என்ன நன்மை, செய்தி கிடைத்துவிடப் போகிறது என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் வை.கே.சபர்வால், டி.எம்.தர்மாதிகாரி ஆகியோர் அடங்கிய குழு கேள்வி எழுப்பியது.

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 499ஆவது பிரிவை எதிர்த்து 'தி ஹிந்து' பத்திரிகை ஆசிரியர் என்.ரவி தாக்கல் செய்த மனுவை ஏற்ற இக்குழு மேற்படி கருத்தை வெளியிட்டது.

இச்சட்டப்பிரிவின்படி முக்கியமான நபர்கள் குறித்த செய்திகளை வெளியிடுவதால் ஏற்படும் விளைவுகளை பத்திரிகைகள் சந்திக்கவேண்டும்.

இச்சட்டப் பிரிவு பத்திரிகை சுதந்திரத்துக்கு எதிரானது. ஒரு பிரபலம் குறித்த செய்தி உண்மையாக இருந்தாலும் பத்திரிகை மீது அவமதிப்பு வழக்குத் தொடர அவருக்கு உரிமை வழங்கப்படுவது தவறாகும் என்று ஹிந்துவின் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஹரீஷ் சால்வே, அபராஜிதா சிங் வாதாடினார். (8)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

மிகவும் நல்ல இன லவ்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ப.குகன், பாக்கஸ் லேன், உடுவில் வீதி, மானிப்பாய். (39684)

உடைத்த கட்டடக் கற்களும் பாரிய H இருப்புக்கேடர்களும் முருகைக்கற்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: இணுவில் மக்லவுட் வைத்தியசாலை, இணுவில். (C/39829)

நல்ல நிலையிலுள்ள போட்டோப்பிரதி எடுக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: R.சிறிதரன், இல.964, கே.கே.எஸ். வீதி (நாச்சிமார் கோயிலடி), யாழ்ப்பாணம். T.P: 021 222 2541 (C/39831)

## வீடு விற்பனைக்கு

உருப்பிராய் சந்தியில் இருந்து மருதனார் மடம் றோட்டில் 100 யார் தூரத்தில் 4 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு (தரகர்கள் தேவை இல்லை). தொடர்பு:- எஸ். சிவராஜா, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் T.P:021 222 5929 (39825)

## வீடு, காணி விற்பனைக்கு

ஆலயங்கள், குருத்துவக்கல்லூரி அமைந்துள்ள சூழலில் சகலவசதிகளுடனும் கூடிய வீடும் 7 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணிக்குப் பின்னரும் கிழமை நாள்களில் மாலை 4.00 மணிக்குப் பின்னரும் தொடர்புகொள்ளலாம். தரகர் தேவையில்லை. தொடர்புகளுக்கு:22, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (39436)

## காணி விற்பனைக்கு

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்துக்கு அண்மையில் 2பரப்புக்காணி (சுற்றுமதிலுடன்) விற்னைக்குண்டு. தொடர்பு: காலை 8.00 - மாலை 5.00மணி வரை. T.P: 021 222 5604, 0777 495229. (39818)

யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத்தெருவில் 130 இலக்கம் கொண்ட காணி பரப்பு 5உம் 3குளியும், யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 83ஆம் இலக்கம் கொண்ட காணி 3பரப்பும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: த.தம்பித்துரை, முதலாம் ஒழுங்கை, உரும்பிராய் தெற்கு(சந்தி) T.P: 222 6919, 077-6589163.

**Hair Formula**
**Supplement Capsules**

தலைமயிர் உதிர்தல், இளநரையையும் தடுத்து ஆரோக்கியமான கரும் நிற கூந்தல் வளர்ச்சிக்கும், முகத்தில் கறும்புள்ளி முகப்பறுக்களை தடுத்து சருமத்திற்கு பளபளப்பையும் கொடுக்கவல்லது.
Hair Formula Supplement Capsules

With 15 Vitamins & Minerals Including Vitamin E, Biotin, Calcium-Pantothenate.

Hair Formula என்றே கேட்டு வாங்குங்கள்

CCS

சாப்பிட்ட உடன் ஒரு வில்லை

யாழ் நகரில் விநியோகஸ்தர்கள் தேவை

K.S.P. International Pharmacy Tel : 2449766

## மரவேலைகள்

சமையலறை பான்றிக்பேட் மற்றும் அனைத்து வித மரவேலைகளும் குடா நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் வந்து செய்து தரப்படும். தொடர்பு:- கண்ணன் 077 6655931. (39796)

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு, கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம் இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். தொடர்பு:
**BIO TEC INTERNATIONAL**
இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 021- 4590907.
(39297)

## விற்பனையாளர்கள் தேவை

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழகவிரும்புபவர்களும் தேவை.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:
த.குமாரசாமி அன்சன்ஸ்
248/1, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (39812)

## சிறப்புத் தள்ளுபடி

தாயகப் பாடல்கள் மற்றும் தாயகத் திரைப்பட CD மற்றும் கசெற் அனைத்தும் மாபெரும் சிறப்புத் தள்ளுபடியில் விற்கப்படுகின்றன.

உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்:
**இசைத்தென்றல் கணனி தொழில்நுட்ப நிறுவனம் (I.C.S)**
A-9 சாலை கிளிநொச்சி
(மக்கள் வங்கி அருகில்) (C/39826)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 15 SRI XXX தொடரிலக்கமுடைய Maroon நிற, MAZDA FAMILIA கார் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். T.P: 0777 238288 (1986 ஆம் ஆண்டு தயாரிப்பு) (39814)

## கடைகள், காணி விற்பனைக்கு

யாழ்.பிரதான வீதி, முதலாம் குறுக்குத் தெருச் சந்தியில் 4 பரப்புக் காணியும் யாழ். கன்னாதிட்டி வீதியில் 3 கடைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு : 021 222 5572, 077 6736860 (39817)

## மாடி வீடு விற்பனைக்கு

யாழ்.கொட்டடி, ஆஸ்பத்திரி வீதியில் சுற்றுமதிலுடன் கூடிய 2½ பரப்புக் காணியும், சுற்றுமதிலுடன் சேர்ந்த3½ பரப்புக் காணியில் அமைந்த மாடி வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 077 6736860, 021 2225572(39819)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

1½ மாதம் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 17,சிவப்பிரகாச மகா வித்தியாலயம் அருகில், தும்பளை பருத்தித்துறை. T.P: 077 6701503 (C/39682)

அழகான Great Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர்), முத்திரைச்சந்தையடி, நல்லூர். (39831)

## மணமகன் தேவை

1971இல் பிறந்த, கொழும்பில் பொறியியலாளராகக் கடமையாற்றும், யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லக்கினத்தில் செவ்வாயுள்ள மணமகளுக்குப் பொருத்தமான மணமகன் தேவை. டாக்டர், எஞ்ஜினியர், விரிவுரையாளர், எக்கவுண்டன் ஆகியோர் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: விளம்பர இல.2453, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (39419)

## தவறிவிட்டது

ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த நிசாந்தினி வையித்தியநாதனின் தேசிய. அ.அ.(இல.74 8641254V), வேலணையைச் சேர்ந்த கோபாலன் விமலேந்திரனின் தேசிய அ.அ(இல.693501555V) என்பன யாழ்.நகர் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 835, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (39797)

சாரதி அனுமதிப்பத்திரம், நிரந்தர அனுமதியட்டை ஆகியன முகமாலைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் 12.12.2004 காலை 9மணியளவில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் விக்கினேஸ்வரா களஞ்சியம், புத்தூர்ச்சந்தி, மீசாலை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (39800)

## கைமாறிவிட்டது

திருநெல்வேலி சிவன்கோயிலுக்கு முன்பாகவுள்ள விநாயகர் விலாஸ் உணவகத்தின் வாயிலில் கடந்த 23.11.2004 அன்று நிறுத்தப்பட்டிருந்த பெண்கள் சைக்கிள் ஒன்று தவறுதலாக மாறி எடுத்துச்செல்லப்பட்டுவிட்டது. கைமாறி எடுத்தவர்கள் தயவுசெய்து விநாயகர் விலாஸுடன் தொடர்புகொள்ளவும். (39684)

## வாடகைக்கு உண்டு

பகுதி வீடு கீழ்க்காணும் முகவரியில் வாடகைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: 32, பிரப்பங்குளம் றோட், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்

### மின்சாரம் கிடைத்தது

பண்டத்தரிப்பு கேணிக்கட்டு வீதிக்குக் கடந்த வாரம் இலங்கை மின்சார சபையின் சித்தன் கேணி மின் அத்தியட்சகர் பணிமனையினரால் மின்சார விநியோகம் வழங்கப் பட்டுள்ளது.(எ-135)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான, இருமுறை தடுப்பு மருந்தூட்டப்பட்ட Prima Original குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 20-12-2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பரு.நெல்லியடிக் கிளையிலும் சூட்டிபாம்-வட்டுக்கோட்டை R.S.K பாம்-உடுவில், சுன்னாகம், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன்- சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19,முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (39386)

## அறைவாடகைக்கு

உரும்பிராய் சந்தி, முதலாம் ஒழுங்கையில் த.தம்பித்துரை என்பவரின் வீட்டில் எல்லா வசதிகளையும் கொண்ட அறை வாடகைக்கு உண்டு. தொடர்பு: 222-6919, 077-6589163. (39827)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 200/= சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் கோழி எரு குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: NEW R.S.K. FARM மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் மற்றும் மானிப்பாய் வீதி, பெரிய மதவடி, உடுவில். (39715)

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தஞ்செய்து பெற்றுக் கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39829)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 20 - 10 - 1922

இறைவன் அடியில் 30 - 12 - 2003

### அமரர் முத்தையா அழகரத்தினம்

(சுவாமி அழகானந்த ஜோதி)

திதி: அட்டமி 19.12.2004

மனிதருள் மாணிக்கமாய்
மாண்புடன் வாழ்ந்திருந்து
புனித வாழ்வு வாழ்ந்து இறையடி சேர்ந்த
எமது தந்தையின் ஆத்மா ஈசனுடன்
இணைந்திருக்க இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

மூத்தநயினார் கோயிலடி,
ஆனைக்கோட்டை. (39828) (24-14-19) - குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நெஞ்சில் நீங்கா நினைவில்...



அன்னை மடியில் 06 - 11 - 1938

ஆண்டவன் அடியில் 11 - 12 - 2002

### அமரர் கிருஷ்ணபிள்ளை செல்லத்துரை

திதி: பூர்வபக்க அட்டமி

ஆலமர விருட்சம்போல் நிழல் தந்தாய்
ஆறாத துயரமதைத் தந்து சென்றாய்
போன இடம் தெரியாது வாடுகின்றோம்
சோர்ந்து நிதம் உன் நினைவு எந்நாளுமுண்டு!

*என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:*
மனைவி - மகேஸ்வரி,
மகள் - ஜெயராணி (கனடா),
மருமகன் - விஸ்வலிங்கம் (கனடா),
பேரப்பிள்ளைகள் - சுதந்திரதாஸ், பவிதா, ஜெபிதா, வியஜபிரகாஷ், விதுஷன்.

"ஜெயபதி"
அல்வாய் வடக்கு,
மகாத்மா வீதி,
அல்வாய். (29823)(24-14-19)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

### செல்லையா பரமநாதன்

(சிரேஷ்ட தாதி உத்தியோகத்தர்
அரசினர் வைத்தியசாலை, சங்கானை)

மலர்வு 02.07.1947 உதிர்வு 20.11.2004

கண்கள் குளமாகக் காதினுள்
இடியென்று இறங்கிய செய்திகேட்டு
மாதம் ஒன்று கடந்ததோ இன்றும்
மனமும் ஆறவில்லை மறக்கவும் முடியவில்லை
மரணமே நீ ஏன் மரணிப்பதில்லை?
மாசற்ற மனிதரை மண்ணினுள் மறைக்கவா
இன்முகம் காட்டி இனியமொழி பேசி
வந்தோரை வரவேற்கும் பண்பாளனே!
பரணியிலே உன்புகழ் என்றும் நிலைக்க
பரம்பொருளை என்றென்றும் வணங்கிடுவோம்.

எமது குலதெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.12.2004) ஞாயிற்றுக்கிழமை கீரிமலையில் நடைபெறும். நாளை (20.12.2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்வதோடு, தொடர்ந்து நிகழ்கின்ற மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு உடனே வந்து ஆறுதல் கூறி அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபந் தெரிவித்து, கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்துத் துக்கம் பகிர்ந்துகொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசைபுரிந்து துக்கத்தைப் பகிர்ந்து அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் வருந்தி நிற்கும்:
**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்மார், உற்றார், உறவினர்கள்.**

காலையடி,
பண்டத்தரிப்பு.
(சி-39830) (24-14-19)

உதயன்

# எழுச்சிப் போர் நடத்த பொங்கி எழுவோம்!

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் தடைப்பட்டுப் போயிருக்கின்றன.

ஒரு புறத்தில் அமைதி முயற்சிகளை ஆரம்பிக்காமல் சாக்குப் போக்குச் சொல்லி இழுத்தடிக்கும் அரசு, மறுபுறத்தில் இராணுவத் தயார்ப்படுத்தலில் மும்முரமாக ஈடுபடுகின்றது; தமிழர் தரப்பைப் பலவீனப்படுத்தும் திட்டமிட்ட செயல்களையும் தீவிரமாக முன்னெடுக்கின்றது.

இந்தநிலைமை தொடர்வதைத் தமிழர் தரப்பு அனுமதிக்க முடியாது. இது தமிழர் தரப்பைப் பெரிதும் பலவீனப்படுத்திவிடும்.

இதையே தலைவர் பிரபாகரன் தமது மாவீரர் தின உரையின் ஆரம்பத்தில் திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

''தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு ஓர் இக்கட்டான, சிக்கலான சூழ்நிலையை நாம் இன்று எதிர்கொண்டு நிற்கின்றோம். போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்பு நிலையுமின்றி, இடைக்காலத் தீர்வுமின்றி, இனப்பிரச்சினைக்கு முடிவுமின்றி நாம் ஓர் அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்துவருகின்றோம். இந்த அரசியல் சூனிய நிலை நீடித்தால், அது எமது இலட்சியப் போராட்டத்திற்குப் பெரும் பங்கத்தை ஏற்படுத்திவிடும் என்பது திண்ணம்'' - என்றார்.

''இந்த அரசியல் இழுபறி நிலை நீடிக்க அனுமதிக்க முடியாது. 'பொறுத்தது போதும்; பொங்கியெழுவோம்! என்ற நிலைக்கு நாம் வந்துவிட்டோம் என்பதையே மாவீரர் தின உரை ஊடாகத் தலைவர் பிரபாகரன் வெளிப்படுத்தியிருக்கின்றார்.'' - என்று தலைவரின் உரையை ஒட்டி அதே நாள் லண்டனில் மாவீரர்தின நிகழ்வில் உரையாற்றி மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் கூறியிருந்தார்.

ஆக, இந்த அரசியல் சூனிய நிலைமை நீடிக்க அனுமதிக்க முடியாது; அனுமதிக்கக்கூடாது. அப்படி அனுமதிப்பது தமிழர் தரப்பைப் பாதிக்கும்.

அப்படியானால், இந்த நிலைமையைச் சமாளிக்கத் தமிழர் தரப்பு என்ன செய்யவேண்டும்?

எடுத்த எடுப்பில் பொறுத்தது போதும், பொங்கி எழுவோம் என்று கூறிக்கொண்டு போருக்குப் போவதா?

இல்லை, நாம் போர் வெறியர்கள் அல்லர். சமாதான விரும்பிகள் என்று இதுவரை சர்வதேச சமூகத்துக்குக் காட்டிய உண்மையை இன்னும் சற்றுக்காலம் நீடித்து நிரூபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அதேசமயம், சமாதானத்தை விரும்பும் தமிழர் தரப்பின் நியாயப்போக்கை இலங்கை அரசுத் தரப்பு அநியாய வழியில் தனக்குச் சாதகமாக்கிப் பயன்படுத்துகின்றது என்ற உண்மையையும் நாம் சர்வதேச சமூகத்துக்கு இடித்துரைக்கும் வகையில் எடுத்துரைக்க வேண்டும்.

பொங்கி எழுந்து இதனைப் புலப்படுத்த ஒரு வழியுண்டு.

உடன் பொங்கி எழுந்து போர் செய்வதை விடுத்து, பொங்கி எழுந்து அதனை மக்களின் எழுச்சிப் போராட்டமாக முரசறைந்து, சர்வதேச சமூகத்தின் மனக் கதவைத் தட்டித்திறக்க அதைப் பயன்படுத்தலாம். அதனைச் செயல்வடிவில் தமிழர் தாயகம் எங்கும் மிகப் பரவலான அளவில் தொடர்ச்சியாக மேற்கொள்வதில் எவ்வித காலதாமதமும் ஆகாது. தென்மராட்சியில் நாளை தொடங்கும் மனித சங்கிலிப் போராட்டம், இடைவிடாத போராட்டமாகத் தொடரட்டும்.

அனைத்துத் தமிழ் மக்களும் தங்கள் பூரண பங்களிப்பை நல்க உறுதி பூணவேண்டும்.

தமிழ் மக்களின் மனநிலை அந்தத் திசையில்தான் செல்கின்றது என்பதைக் கடந்த புதனன்று கிளிநொச்சியில் நோர்வே சமாதானத் தூதர் எரிக்சொல்ஹெய்மைச் சந்தித்த பின்னர், செய்தியாளர்களுக்குத் தவகவல் வெளியிடுகையில் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கோடிட்டுக் காட்டினார்.

''அரசு சாதகமாகப் பதில் தராவிட்டால் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று தலைவர் கூறியுள்ளார். ஆனால், அரசு சாதகமாகப் பதில் தரவில்லை. இந்நிலையில் யுத்தம் இல்லாமல் விடுதலைப் பேராட்டத்தை எப்படி முன்னெடுத்துச் செல்ல முடியும்?'' - என்ற சாரப்பட செய்தியாளர்கள் தமிழ்ச்செல்வனிடம் கேள்வி எழுப்பினர்.

''யுத்தம் இல்லாமல் விடுதலைப் போராட்டத்தைக் கொண்டுசெல்வது எங்களின் கைகளில் இல்லை. ஏனெனில், தமிழர் தாயகப் பிரதேசத்தில் பல பகுதிகளில் இராணுவம் ஆக்கிரமித்து நிற்கிறது. மக்கள் மீது இராணுவத்தின் நெருக்குவாரங்கள் அதிகரித்திருக்கின்றது. இந்தச் சூழலில் மக்கள் தங்கள் எதிர்ப்புகளைத் தங்களின் கருத்துகளை - வெளிப்படுத்த முயல்வது இயல்பே.''

''மக்கள் போராட்ட முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறார்கள். இது மறுதலிக்கப்பட்டு, இராணுவம் வன்முறையில் இறங்குமாக இருந்தால் நிலைமை மோசமடையும். அந்த நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் சில தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படும் என நம்புகிறேன்.'' - என்று பதிலளித்திருக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

அர்த்தமும், ஆழமும் பொதிந்த கருத்துக்கள் இவை.

தமிழ் மக்கள் எழுச்சிப் போராட்டங்களுக்குத் தயாராகி வரும் காலமிது.

அந்தப் போராட்டங்களின் தொடர்ச்சி - விளைவு - பெறுபேறு - எப்படி அமையப்போகின்றது, திசைதிரும்பப் போகின்றது என்பதற்கான சமிக்ஞை இக்கருத்தின் வரிகளுக்கு இடையே தொக்கி நிற்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

''தமிழர் தாயகம் எங்கும் எழுச்சிப் போராட்டங்கள் தைத் திங்களில் வெடிக்கும்! யுத்தத்தை அரசு திணிக்குமானால் தமிழ்மக்கள் அதை எதிர்கொள்ளவும் தயார்'' என்ற தொனியில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கூஉரைத்திருப்பதும் இந்த வழியை ஒற்றியதே என்பதும் தெளிவாகின்றது.

ஆகவே, தமிழ் மக்களின் எழுச்சிப் போர் உரிய காலத்தில் - இயல்பாகவே - தன் போக்கிலேயே - அதற்குரிய திசையில் திரும்பும்; நகரும். அது உறுதி.




இலத்திரனியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று கடந்த 5 ஆம் திகதி கொக்குவிலில் இயங்கும் திறந்த பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமதி சிவசேகரா உரைநிகழ்துவதையும் – கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். எந்திரி ஆர்.ஞானேந்திரன் முதலாவது படத்தில் உள்ளார். (படங்கள்: அலுவலகப்படப்பிடிப்பாளர்.)

# பெருமழையால் வலி.மேற்கில் 15 ஹெக்டயர் நெற் பயிர் அழிவு

வலி.மேற்கு.டிசெ.19

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் அண்மையில் பெய்த கனத்த மழையினால் சுமார் 15 ஹெக்டயர் நிலப்பரப்பில் செய்கைபண்ணப்பட்டிருந்த நெற்பயிர்கள் முற்றாக அழிந்துள்ளன.

அராலி, சுழிபுரம், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள வயல் நிலங்களில் அண்மையில் பெய்த பெருமழையினால் 15 ஹெக்டயர் நிலப்பரப்பில் நெற்பயிர்கள் முற்றாக அழிந்துவிட்டது என்றும் -

தொடர்ந்து மழை பெய்தமையால் உரத்தின் பயன் அதிகளவில் நெற் பயிருக்குக் கிடைக்கவில்லை என்றும் -

எதிர்பார்க்கப்பட்ட நெல் விளைச்சல் விவசாயிகளுக்கு கிடைக்கமாட்டாது எனவும் -

தொல்புரம் கமநல சேவை நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் சுமார் ஆயிரத்து 220 ஹெக்டயர் நிலப்பரப்பில் நேற்செய்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(எ-175)

# பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள்

## செவ்வாயன்று கொழும்பில் வைபவ ரீதியான நிகழ்வு

பட்டதாரிப் பயிலுநர்களை அரச பதவிகளில் நியமிக்கும் திட்டத்தின் கீழ் பட்டதாரிப்பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங்கிக் கௌரவிப்பார்.

இந்நிகழ்விற்கு ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகள் கலந்துகொள்வர் அதற்கமைய யாழ்.மாவட்டதிலிருந்து 50 பட்டதாரிப் பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ்பெற அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

பயிற்சிபெற்று வரும் ஏனைய பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறியப்படுகின்றது. (எ-202)

# பரிசாரகர் வெற்றிடங்களை நிரப்ப மாகாண அமைச்சு நடவடிக்கை

## சுற்றறிக்கை மூலம் அறிவிப்பு

வலிதென்மேற்கு.டிசெ.19

யாழ்.மாவட்டத்தில் அரசினர் வைத்தியசாலைகளில் நிலவிவரும் பரிசாரகர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது.

வைத்தியசாலைகளிலும், சுகாதார திணைக்கள நிறுவனங்களிலும் கடமையாற்றி வரும் ஐந்து வருட சேவையை பூர்த்தி செய்த பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட சிற்றூழியர்கள் பரிசாரகர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என்று யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய சாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இவர்கள் 8 ஆம் வகுப்பு சித்தி பெற்றவர்களாகவும் சிறந்த தேகாரோக்கியமுள்ளவராகவும் இருக்கும் பட்சத்தில் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் மேற்படி சுற்றிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-135)

# இந்திய மீனவரின் ஊடுருவலைக் கண்டித்து சுழிபுரம் மீனவர்கள் தொடர் பகிஷ்கரிப்பில்

வலிமேற்கு.டிசெ.19

சுழிபுரம் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் றோலர்கள் மூலம் அத்துமீறி மீன்பிடித்து வருகின்றனர். இதனால் இப்பகுதி மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லாமல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த சில நாள்களாக பெரும் எண்ணிக்கையிலான இந்திய மீனவர்கள் சுழிபுரம் கடற்பரப்பில் அத்து மீறி றோலர்கள் மூலம் மீன்பிடித்து வருகின்றனர் என்றும் - இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே தாம் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும்- மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக சுழிபுரம் ஐயனார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் சம்பந்தப்பட்ட அனைவரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

சுழிபுரம் கடற்பரப்பில் முன்னரும் பல தடவைகள் இந்திய மீனவர்கள் றோலர்களைப் பயன்படுத்தி மீன்பிடித்துக்கொண்டிருந்த சமயம் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்ததமை குறிப்பிடத்தக்கது. (எ-175)

# விளையாடச் சென்ற சிறுவன் மறுநாள் கேணிக்குள் இருந்து சடலமாக மீட்பு

வடமராட்சி,டிசெ.19

விளையாடச் சென்ற சிறுவன் ஒருவன் மறுநாள் கேணி ஒன்றுக்குள் இருந்து சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டார்.

வியாபாரி மூலையைச் சேர்ந்த தேவராஜா தேவகுமார் (வயது 13) என்ற மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மேற்படி சிறுவன் விளையாடச் செல்லும் வேளைகளில் பேர்த்தியார் வீட்டில் தங்கிவருவது வழக்கம். சம்பவதினம் விளையாடச்சென்றவர் திரும்பிவராமையினால் அவர் பேர்த்தியார் வீட்டில் தங்கியுள்ளதாக பெற்றோர் எண்ணி இருந்தனர் எனக் கூறப்பட்டது.

இந்நிலையில் மறுநாள் குளிக்கச் சென்ற பெண் ஒருவர் கேணிக்குள் சிறுவன் சடலமாக இருப்பதைக் கண்டதை அடுத்து அவரது சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பாக பருத்தித்துறையில் நீதிவான் ந.தங்ராசா விசாரணை நடத்தி சடலத்தை பெற்றோரிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். (எ-173)

# சுகாதாரத் தொழிலாளர் 59 பேருக்கு ஜனவரியில் மாவட்டத்துக்குள் இடமாற்றம்

வலி.தென்மேற்கு.டிசெ.19

யாழ்.மாவட்டத்தில் அரசினர் வைத்தியசாலைகளிலும், சுகாதாரத் திணைக்களங்களிலும் கடமையாற்றிவரும் சுகாதார தொழிலாளர்கள் 59 பேர் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மாவட்டத்திற்குள் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை - சாதாரண ஆண், பெண் தொழிலாளர்கள் 39 பேருக்கும் எதிர்வரும் ஜனவரிமாதம் முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான இடமாற்ற அறிவித்தல் கடிதங்கள் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்குக் கடந்த வாரம் யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இடமாற்றம் செய்யப்பட்டிருக்கும் ஊழியர்கள் தமது இடமாற்றம் பற்றி மேல் முறையீடு செய்ய விரும்பினால் அதற்கான தகுந்த காரணங்களுடன் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என்று யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். (எ-135)

## நாளை

மார்கழி 05
திங்கட்கிழமை
(20.12.2004)
திதி: நவமி
பி.ப. 03.03
நட்சத்திரம் : ரேவதி
பின்னிரவு 04.13
சுபநேரம்: 12.24 - 01.54
ராகுகாலம்: 07.54 - 09.24
(பழையநேரப்படி)

# மாணவர் பேரவை அலுவலகத்தில் அதிக அளவிலான விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.19

வேலையற்ற பட்டதாரிகளின் நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் குவிந்துள்ளதாகப் பேரவையின் பொறுப்பாளர் ந.கண்ணன் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வேலை தேடிக் கொண்டிருக்கும் பட்டதாரிகளுக்கு தமிழர் தாயகப் பகுதியில் நீதித்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை, கலைத்துறை ஆகியவற்றில் வேலைவாய்ப்பு வழங்கவுள்ளதாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் குவிந்த வண்ணமுள்ளதாகவும் இவர்களுக்குரிய நேர்முகப் பரீட்சைகள் அடுத்த மாத முற்பகுதியில் நடத்தப்பட்டு உடனடியாக வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளதாகவும் -

அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10-13)

## உதயவாக்கு

பயன் கருதா நல்வினைகள்
மனத்தைத் தூய்மையாக்கும்.

## தென் இந்தியத் திருச்சபை யாழ். ஆதீனம் சுப்பிரமணியம் கனகம் ஞாபகார்த்த "மகிழ்ச்சி இல்லம்" (Pleasant Cottage)

இணுவில் மக்லவுட் வைத்தியசாலையில் இன்பகரமான சூழலிலும் பாதுகாப்பான இடத்திலும் இவ்வயோதிபர் இல்லம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மகிழ்ச்சி இல்லத்தில் தங்கள் முதுமைக் காலத்தை இன்புடன் கழிக்க முதியோர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இங்கு அறவிடப்படும் மாதாந்தக் கட்டணம், உணவு வசதி, வைத்திய வசதி, தாதியர் பராமரிப்பு, பொழுதுபோக்கு வசதிகளை அடக்கியுள்ளது.

- 2005ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் முதியோர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

ஏனைய விவரங்களை 20-12-2004ஆம் திகதிக்குப் பின் நேரடியாகவோ தொலைபேசி மூலமாகவோ அறிந்துகொள்ளலாம்.

**Ms. Ann watson**
நடத்துநர்,
மக்லவுட் வைத்தியசாலை,
இணுவில்.

*தொ.பேசி எண்:* 222 - 7669 (சி-39828)(26-14-17-24)


## 25 ஆயிரம் பனம் விதைகள் வடமராட்சி கிழக்கில் நடுகை

வடமராட்சி,டிசெ.19

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் 25 ஆயிரம் பனம் விதைகள் அடுத்த ஆண்டில் நடுகைசெய்யப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் மேற்கொண்டுள்ளார்.

இதன் பிரகாரம் குடத்தனைப் பகுதியில் 8 ஆயிரம் பனம் விதைகளும் மாமுனைப் பகுதியில் 10 ஆயிரம் பனம் விதைகளும் புதிதாக அமைக்கப்பட்ட குடத்தனை - மணல்காடு வீதியின் இருமருங்கிலும் 2 ஆயிரம் பனம் விதைகளும், ஏனைய பொது இடங்களில் 5 ஆயிரம் பனம் விதைகளும் என்ற அடிப்படையில் பனம் விதைகள் நடுகைசெய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-173)

## சித்தாந்த பண்டிதர் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ். சைவ பரிபாலன சபை நடத்தும் சைவ சித்தாந்த பண்டிதர் பட்டப் பரீசைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சை அடுத்த ஆண்டு மே மாதம் முதல் வாரத்தில் நடைபெறும் என்றும் - பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 31ஆம் திகதிக்கு முன்னர் தேர்வுச் செயலாளர், 66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவேண்டுமென சைவபரிபாலன சபையின் தலைவரும் சபையின் பரீட்சைச் செயலாளருமான சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.(எ)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு செவ்வாயன்று


யாழ்ப்பாணம்,டிசெ.19

பற்றிஷன் தொழிற் பயிற்சி நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். சென். பற்றிக்ஸ் வீதியிலமைந்துள்ள அகவொளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிப்பார்.

(எ-202)

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 - 09 - 1941 | 04 - 12 - 2000 |

அமரர் **கார்த்திகேசு வேலாயுதபிள்ளை**
(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன முன்னாள் லிகிதர்)

காலன் கவர்ந்து சென்றாலும்
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
'அப்பா' என்ற அகல் விளக்கு
அணையாது ஒளிரும் - எம்
நெஞ்சங்களில்.....!

*சந்தை வீதி,*
*கொடிகாமம்.* (39820) (24-11-19) - குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1985 - 09 - 06 | 2004 - 11 - 19 |

## இந்துஷா லிங்கநாதன்
**(ஆஷா)**
(யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி)

*பண்பான குணமுடைய பாசமிகு ஆஷாவே!*
*பஞ்சனைய மனதுடனே பாசப்பறவையாய் வாழ்ந்தாயே!*
*காலமெல்லாம் ஒன்றாக வாழ்வோமெனக்*
*கண்டிருந்த கனவுகளைக் கலைத்துவிட்டு*
*கண்மணியே! எமைவிட்டுக் காற்றாய்ப் பறந்தாயோ?*
*நோயுற்ற காலம்முதல் உனை நொடிப்பொழுதும் பிரியாமல்*
*கண்ணை இமைகாப்பது போலக் காத்தோமே ஆஷா!*
*உன் இறுதி மூச்சு நீங்கியதை அறியாமல்*
*அயர்ந்த எம் கண்களை என் செய்வோம்?*
*நித்தம் நினைக்கவிட்டு சித்தம் கலங்கவிட்டு*
*நிலையான நினைவுகளாய் நிலைத்துவிட்டாய் கண்மணியே!*

*478/3, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.* (39816) (24-19)

தகவல்:
அப்பா, அம்மா,
சகோதரர், சகோதரி.

## மரண அறிவித்தல்



### தம்பிப்பிள்ளை நடராசா

இருபாலை, பழம் றோட்டைப் பிறப்பிடமாகவும் முல்லாத்தனை, தெல்லிப்பழையை நிரந்தர வதிவிடமாகவும் தற்போது கொக்குவில் கிழக்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் (இ.போ.ச.) தம்பிப்பிள்ளை நடராசா அவர்கள் 17.12.2004 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - ஆசசிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரனும் காலஞ் சென்ற தெய்வநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - நல்லமுத்துவின் மருமகனும் காலஞ்சென்ற தவராசா, காலஞ்சென்ற யோகராசா மற்றும் சிவராஜா (வீதி அபிவிருத்தித் திணைக்களம், வவுனியா), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் மனோரஞ்சிதமலர் (கனடா), தவமணிதேவி (வவுனியா), றூபாவதி (கச்சேரி, வவுனியா), வசந்தகுமாரி (லண்டன்), வசந்தராசன் (கனடா), வசந்தயோகினி (கொக்குவில்), காலஞ்சென்ற திருச்செல்வி, காலஞ்சென்ற ஜெயராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகாம்பிகை (இந்தியா), கனகநாயகி, ராஜநகுலேஸ்வரி, சகுந்தலாதேவி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சுந்தரலிங்கம், விஜயராஜ் (இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், வவுனியா), பத்மநாதன் (இந்தியா), சாந்தலிங்கராஜா (இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெனோதினி, நிலோஜினி, மயூரன், வனஜா, அனுஜா, வினோதன், நிரோஜன், நிரஞ்சினி, கோகுலன், நிசாந்தினி, சர்மிலா, கமிலா, மயூலா, சித்திரா, கங்கா, சுரேன், கஜேன், பத்மராஜ், பாலராஜ், திலீபன், திவாகர், ஷிறாணி, கார்த்திகா, கஜிபன், பிரதீப், சஜிதா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் கனகம்மா (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சேவையர் தம்பு, காலஞ்சென்ற செல்லத்துரை, மற்றும் வள்ளிநாயகி (டென்மார்க்), காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற சத்திவேற்பிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2004) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16, கோயில் வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (39815) (24-19)

தகவல்:
T.N.*சிவராஜா* (மகன்), *யோகினி* (மகள்),
*சுந்தரலிங்கம்* (மருமகன்).


## Foundation Degree Programme for Higher Education / Career

உடனடித் தொழில் வாய்ப்பொன்றை பெற வேண்டும் ஆனால் போதிய தகைமையில்லை.

பல்கலைக்கழக வாய்ப்பினை இழந்த நீங்கள் கணனி, வணிகம் போன்ற துறைகளில் உள்நாட்டில் பட்டப்படிப்பினை தொடர வேண்டும். ஆனால் அடிப்படை ஆங்கில, கணனி பற்றிய அறிவு போதுமானதாக இல்லை.

UK, Canada, Australia, Newzealand போன்ற நாடுகளில் உயர் கல்வியை தொடர வேண்டும். ஆனால் இந்நாடுகளுக்கான Student Visa க்களை பெற்றுக்கொள்ள போதிய தகுதியில்லை.

நிச்சயமாக நீங்கள் இவற்றுள் ஏதாவது ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுப்பீர்கள். கவலை வேண்டாம். Foundation Degree Programme for Higher Education / Career எனும் 3 மாத கால பாட நெறியை பயில்வதன் மூலம் உங்களை ஒரு தகைமை வாய்ந்தவராக மாற்றிக்கொள்ள முடியும்.

கற்கை நெறிக்கான அடிப்படை தகைமை: G.C.E. O/L

பாடப்பரப்பு: ஆங்கிலம், ஆளுமை விருத்தி, கணனி ஆகிய துறைகளில் அடிப்படை முதல் மிக விரிவான கற்கை நெறி முறை.

பாடநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்கள்

வெளிநாட்டு உயர்கல்விக்கான Student Visa க்களைப் பெற்றுக் கொள்ள அடிப்படை முதல் Visa க்களைப் பெறும் வரையிலான பூரண வழிகாட்டுதல்கள்.

LIFE LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
27, Hospital Road, Dehiwela. Tel: 011 5518666, 0777 715788
Fax: 011 5515387 E-mail: edulife@sltnet.lk



# ஜனவரியில் ஈராக் தேர்தலுக்கு எல்லாம் தயார்! ஒருவருடகால வன்செயல்களுக்கு ஓய்வு கிடைக்குமா?

ஈராக்கில் ஒரு வருடகால வன்செயல்களும், புரட்சிப் போராட்டங்களும் வருட முடிவுக்குள் ஓய்வுபெற்றுவிடுமா என்ற கேள்வி மிகப் பெரிதாக உலகக்கண்களுக்கு முன் பலகையில் எழுதிவைத்தாற்போல பிரமையூட்டிக் கொண்டிருக்கும் அதேவேளை, அந்த நாட்டை வெளியார் ஆக்கிரப்பிலிருந்து விடுவிப்பதற்கான முயற்சி என்ற வகையில் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்திமுடிக்க ஈராக்கில் இடைக்கால அதிகாரசபையும் அமெரிக்காவும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

கடந்த 12 மாதங்களாகத் தற்கொலைத் தாக்குதல்கள், கார்க்குண்டுகள், கிளர்ச்சியாளர் தாக்குதல் என்று வன்முறைச் சம்பவங்கள் ஈராக்கை அமைதியற்ற பூமியாக உருவங்கொள்ளச் செய்து விட்டன. சுனி முஸ்லிம்களின் பகுதியான பக்தாத்தின் வடபகுதி எண்ணிறைந்த வன்முறைத் தாக்குதல்களுக்குள்ளாகி அங்குள்ள சாதாரண பொதுமக்கள் தம் உயிர்களைக் கையில் பிடித்துக் கொண்டு சதா அச்சத்துடன் வாழும் நிலைமையை உருவாக்கிவிட்டன.

கடந்த ஜனவரியிலிருந்து நடந்துள்ள வன்செயல்களில் 800 அமெரிக்க இராணுவத்தினர் கொல்லப்பட்டிருப்பதாகப் பென்ரகன் அறிவித்துள்ளது. 2003ஆம் ஆண்டு அமெரிக்காவின் தலைமையிலான கூட்டுப்படைகளின் ஆக்கிரமிப்பின் பின்னர் 17 ஆயிரம் சாதாரண மக்கள் இந்தப் படைகளின் நடவடிக்கைகளுக்குப் பலியாகியுள்ளார்கள். இந்தத் தகவலை சுதந்திர இணையத்தளம் ஒன்று 'வெளியிட்டுள்ளது.

பொதுவில் தேசிய காவல் துறையினரும் உள்ளூர் பொலீஸ் ஆளணியினரும், படையினருமே கிளர்ச்சியாளர்களின் முக்கிய குறியாக இருந்துவருவது வெளிப்படையாகக் காணக்கிடைக்கின்றது. இதேசமயம் வெளிநாட்டவர்களைக் கடத்துவதன் மூலமும் இவர்கள் தமது செயற்பாடுகளுக்கு ஊடகத்துறை விளம்பரங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார்கள். இந்த வகையில் கடந்த காலத்தில் 100 இற்கு மேற்பட்ட வெளிநாட்டவர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள். இவர்களில் அதிகமானவர்கள் துருக்கிய அல்லது ஆசிய கனரக வாகன ஓட்டிகளாவர்.

இந்தச் சிக்கலான நிலையிருந்து ஈராக்கும் ஈராக்கிய மக்களும் எவ்வாறு விடுவிக்கப்படப் போகிறார்கள் என்பது விடையளிக்கமுடியாத கேள்வியாக இருந்தபோதிலும், ஈராக்கில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஓர் அரசு அமையும்போது அந்த அரசுக்கு சட்டபூர்வமான ஓர் உறுதிப்பாடு ஏற்படும், அதன்மூலம் நாட்டின் பாதுகாப்பையும் உறுதிபடுத்த முடியும் என்று கருதப்படுகின்றது.

சதாம் ஹுசனைப் பதவியிலிருந்து அகற்றி ஈராக்கில் மக்கள் ஜனநாயகத்தை ஏற்படுத்தப் போவதாகக்கூறிக்கொண்டு அமெரிக்காவின் தலைமையில் ஈராக்கினுள் புகுந்த ஆக்கிரமிப்புப்படைகள் ஒருவருடகாலமாக ஈராக்கியரின் கடும் எதிர்ப்புக்களைச் சந்திக்க நேர்ந்தது. அதேசமயம் எதிர்ப்புத் தோன்றிய பகுதிகள் மீது கூட்டணிப் படைகள் ஒன்றன்பின் ஒன்றாக பெரும் எடுப்பில் தாக்குதல்கள் நடத்தவும் தவறவில்லை.

பலூஜா நகரம் ஏப்ரல் மாதத்தில் பெரும் தாக்குதலுக்குள்ளானது. ஒக்ரோபரில் சமாராவுக்கும் அதேகதி ஏற்பட்டது. மீண்டும் பலூஜா மீது நவம்பரில் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. அதேசமயம் மொசூல் மீதான தாக்குதல் நிறுத்தப்படவில்லை.

### ஷயிட்டுகளின் எதிர்ப்பு

இதற்கிடையில், இந்தப் பல்தேசிய கூட்டணிப் படைகள் ஈராக்கின் தென் மத்திய பகுதியில் ஷயிட் முஸ்லிம்களின் கிளர்ச்சியையும் சுமார் 5 மாத காலம் இவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. இந்த எதிர்ப்புப் போருக்கு மெக்ரடா சதார் என்ற தீவிரவாத சமயத் தலைவர் தலைமை தாங்கினார். இந்த எதிர்ப்பியக்கம் ஷயிட்டுகளின் பெரும் மதிப்புக்குரிய முதிய சமயத் தலைவர் அயத்தொல்லா -அலி -அல் -சிஸ்ரானியின் முயற்சியால் ஒரு முடிவுக்கு வந்தது.

இந்தநிலையில் அமெரிக்க ஏற்பாட்டில் பதவிக்கு வந்த இடைக்கால அரசு ஜனவரியில் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தி ஈராக்கில் சட்டபூர்வமான அரசொன்றை நிலைநாட்டப் போவதாக அறிவித்து அதற்கான பணிகளை ஆரம்பித்தது.

இருந்தபோதிலும் சுனி முஸ்லிம் தலைவர்கள் ஆக்கிரமிப்புப் படைகளின் கீழ் நியாயமான தேர்தல் நடைபெறுவது சாத்தியமில்லையெனக் கூறி, தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இந்தநிலைமையில் அடுத்த மாதம் நடத்தப்படவிருக்கும் பொதுத்தேர்தல் வெற்றியளிக்குமா அல்லது ஈராக்கில் நிலவும் அமைதியின்மையும் வன்செயல்களும் இரத்தகளரியும் இன்னும் பல மாதங்களுக்குத் தொடர்ந்து நீடிக்குமா என்பது இனிவரும் காலம்தான் வெளிப்படுத்தவேண்டும்.

## தாக்குதல்களின் பின்னால் ஈ·ரானியரின் கை?

### ஈரான்தான் சூத்திரதாரி!

அணு ஆயுதப் பரிசோதனைகளை நிறுத்திவிட ஈரான் ஐரோப்பிய யூனியன் நாடுகளுடன் உடன்பாடு ஒன்றை செய்துகொண்டுள்ள இந்த வேளையில் ஈராக்கியப் பாதுகாப்பு அமைச்சர் ஹாசெம் ஷாலன் ஈரான் மீது பாரிய குற்றச்சாட்டு ஒன்றை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

'ஈரான்தான் ஈராக்கின் பெரிய அபாயகரமான எதிரி' என்பது அவர் கூறியுள்ள குற்றச்சாட்டு.

ஈராக்கில் இடம்பெற்றுவரும் வன்செயல்களுக்கெல்லாம் ஈரான்தான் மூலகாரணம். சதாமின் ஆதரவாளர்களுடன் சேர்ந்துகொண்டு ஈரானிய உளவாளிகள் ஈராக்கில் வன்செயல்களைத் தூண்டி வருகிறார்கள் என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஈராக்கிய பயங்கரவாதிகளுக்குப் பயிற்சியும் நிதியுதவியும் ஈரானில் இருந்தே கிடைக்கின்றன என்று ஷலான் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சதாம் ஹுசைன் ஆட்சியிலிருந்துபோது- 1980 ஆம் ஆண்டிலிருந்து எட்டு ஆண்டுகள் ஈராக்கும் -ஈரானும் மிகப் பயங்கர யுத்தமொன்றில் ஈடுபட்டிருந்தன. யுத்தம் முடிந்தாலும் இரு நாடுகளுக்கும் இடையில் பிணக்குத் தொடர்ந்து இருந்தே வருகின்றது. ஈராக்கை அழித்தொழிப்பதற்கு ஈரான் முயன்று வருவதாக ஈராக்கியர்களில் அநேகர் இன்றும் நினைக்கிறார்கள்.

ஈராக்கியத் தீவிரவாதிகளுக்கு ஈரானில் இருந்து மட்டுமல்ல சிரியாவிலிருந்தும் உதவிகள் கிடைத்து வருகின்றனவென்று அமைச்சர் ஹாசம் ஷாலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஈராக் விவகாரத்தில் ஈரான் தலையிட்டு வருவதாக ஈராக்கிய அரசும் அமெரிக்காவும் அடிக்கடி குற்றஞ்சாட்டிவருவது இங்கு குறிப்பிடக்கூடியது. ஈராக்கிலுள்ள பெரும்பான்மையான முஸ்லிம்கள் ஈரானிய குடியரசின் ஷியத் இஸ்லாமிய மதப்பிரிவைப் பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள்.

ஜனவரி 30 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தலில் போட்டியிடுவதற்கான தேர்தல் வேட்பாளர் பட்டியல் ஒன்றை ஈராக்கிய ஷியத் பிரிவினர் தாக்கல் செய்துள்ளனர். இந்தப் பட்டியல் ஈரானியரால் தயாரிக்கப்பட்ட ஒன்று என்று அமைச்சர் ஷாலம் கடுமையாகக் கண்டித்திருக்கிறார். இந்தப் பட்டியலில் காணப்படும் ஹுசைன் அல்- ஷாஹ்ராஸ்டானி என்பவர் ஈரானியரின் கையாள் என்று அவர் சாடியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், 1991 ஆம் ஆண்டு இந்த அணு விஞ்ஞானி காவலில் இருந்து விடுவிக்கப்பட்டதன் பின்னர், இரண்டு ஆண்டுகள் ஈரானிய அணு ஆய்வுத்திட்டத்தில் பணியாற்றியுள்ளார். இப்பொழுது தேர்தலின் மூலம் ஆட்சிக்கு வரலாம் என்று கனவு காண்கின்றார். ஆனால், நாம் இதை அனுமதிக்கப்போவதில்லை என்று அவர் கூறினார்.ஷாஹ்ராஸ்டானி பற்றிய மேலும் விவரங்கள் வெளியாகியுள்ளன.

இரசாயனத்துறையில் ரொறன்ரோ பல்கலைகழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவரான ஹுசைன் அல்- ஷாஹ்ராஸ்டானி 1979 ஆம் ஆண்டு வரையில் ஈராக்கிய அணுசக்தி ஆணைக்குழுவில் பணிபுரிய மறுத்த இவர் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். இப்பொழுது பெரும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ள அபு- கிறாயிப் சிறையிலிருந்து 1991ஆம் ஆண்டு வெளியில் வந்தார்.

பிரிட்டனுக்கு இடம்பெயர்ந்து அங்கு பல்கலைக்கழக மொன்றில் விரிவுரையாளராகப் பதவி ஏற்பதற்கு முன்னதாக அவர் தனது மனைவியுடன் ஈரானுக்குச் சென்றார்.

## ஆயுதங்களைக் கீழேவைக்க பலஸ்தீனர்கள் தயாரா?

### ஆயுதங்களை கீழே போடுங்கள்

பலஸ்தீன மக்கள் தமக்கென ஒரு நாட்டை உருவாக்குவதற்காக கையில் எடுத்துள்ள ஆயுதங்களை கீழே போடவேண்டும் என்று பலஸ்தீனத் தலைவர் மஹ்மூத் அப்பாஸ் அறிவித்திருப்பதாவது இஸ்ரேலுடன் அமைதியை ஏற்படுத்திக்கொள்ளும் பலஸ்தீன நிலைப்பாட்டில் பாரிய திருப்பம் ஒன்றை உருவாக்கும் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

யஸீர் அரபாத் மறைவுக்குப் பின்னர் தோன்றியுள்ள ஒரு புதிய நிலைப்பாடு இதுவாகும்.

மே மாதத்திற்குப் பிறகு பலஸ்தீன தீவிரவாதிகள் இஸ்ரேலுக்கெதிராக நடத்திய பயங்கர தாக்குதல் நடைபெற்ற இரு தினங்களுக்குப் பின்னர், இக்கருத்தை அப்பாஸ் வெளியிட்டார். ஜனவரி 9 ஆம் திகதி அரபாத் வகித்த அதிபர் பதவிக்கு நடைபெறவிருக்கும் தேர்தலில் அப்பாஸ் நிச்சயமாக வெற்றிபெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மஹ்மூத் அப்பாஸ், பலஸ்தீனியர் கடந்த 4 ஆண்டுகளாக நடத்திவரும் எழுச்சிப் போராட்டத்தை அவ்வளவாக ஆதரிக்காதவர். ஆயுதத் தாக்குதல்களை அவர் எதிர்த்தும் கருத்து வெளியிட்டுள்ளார். ஆனால், அரபாத்தின் மறைவுக்குப் பின்னரே இவ்வளவு அழுத்தமாக அதைப் பற்றிக் கருத்து வெளியிட்டிருக்கிறார் என்று கருதப்படுகின்றது. பலஸ்தீன எழுச்சியை அவர் குறைகூறவில்லை, அதைக் கைவிடவும் அப்பாஸ் விரும்பவில்லை. ஆயுதத்தாக்குதல்களையே கைவிடும்படி கோரியுள்ளார்.

பலஸ்தீன எழுச்சியானது ஆயுதங்களிலிருந்து ஒதுங்கி நிற்கவேண்டும். ஏனென்றால், ஆக்கிரமிப்பை நாம் எதிர்க்கிறோம் என்பதை மக்கள் ஆதரவுபெற்ற சமூகவழிகளின் மூலம் வெளிப்படுத்துவது எமது மக்களின் சட்டப்பூர்வமான உரிமையாகும் என்று அரபு பத்திரிகையொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

### தாக்குதலும் எதிர்த்தாக்குதலும்

ஆயுதப் பிரயோகம் அழிவையே கொண்டு வருகின்றது. அதை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்று அப்பாஸ் கூறியுள்ளார்.

அப்பாஸின் நிலைப்பாடு இவ்வாறு இருந்த போதிலும். ஆக்கிரமிக்கப்பட்ட காஸாப் பகுதியில் உடனடியாக அமைதி திரும்பும் என்று கூற முடியாமலிருக்கின்றது. கடந்த ஞாயிற்றுக் கிழமை தீவிரவாதிகளின் தாக்குதலுக்குள்ளாகி ஐந்து இஸ்ரேலியப் படையினர் மரணமானதை யடுத்து தீவிரவாதிகளின் நிலைகள் மீது இஸ்ரேலிய படைகள் தாக்குதல்களை முடுக்கி விட்டுள்ளன.

இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் ஷாவுல் மோமார் இதுபற்றிக் கூறுகையில் "பயங்கரவாதத்துக்கு எதிராக வேறு யாரும் போர் தொடுக்கும்வரை நாங்கள் தொடர்ந்து தாக்குவோம்" - என்று கூறினார்.

இஸ்ரேலிய, யூத அரசை அழித்தொழிப்பதற்கு சபதமெடுத்துள்ள ஹமாஸ் அமைப்பு இந்தத் தாக்குதல்களை நடத்துவதாக தெரியவந்துள்ளது.

"யூதக் குடியிருப்புக்களில் பணிபுரியும் வெளிநாட்டவர்களை வெளியேறும்படி கேட்டுக் கொள்கின்றோம். இல்லையென்றால், அவர்களும் மோட்டார் மற்றும் றொக்கட் தாக்குதல்களுக்குள்ளாவார்கள்" என்று ஹமாஸ் இயக்கம் அறிவித்துள்ளது.

ஜனவரி 9 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தலைப் பஷ்கரிக்கும்படி ஹமாஸ், பலஸ்தீனிய மக்களைக்கேட்டுள்ளது.

★ ★ ★

### பெண்களுக்கும் சொத்துரிமை

கூட்டுக் குடும்பங்களின் பொதுச் சொத்துக்களில் ஆண்களுக்கு மட்டுமே உரிமை கொண்டாடமுடியும் என்ற நிலையைமாற்றி பெண்களுக்கும் சொத்துரிமை வழங்குவதற்கான சட்டமொன்றை இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றவிருக்கின்றது.

குடும்பச் சொத்துக்களில் உரிமைப்பங்கு வழங்கும்போது அக்குடும்பத்திலுள்ள பெண்களுக்கும் உரிய பங்கினை வழங்கவேண்டும் என்ற சரத்து, புதிதாக நிறைவேற்றப்படவிருக்கும் சட்டத்தில் சேர்க்கப்படவிருக்கின்றது.

இதுவரைகாலமும் பூர்வீக சொத்துக்களை ஆண்கள் மட்டுமே பங்குபோட்டுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பாராபட்சமான ஒழுங்கு இச் சட்டதின் மூலம் நிவர்த்திசெய்யப்படுகின்றது.

★ ★ ★

### ஒலியின் அளவைக் குறைக்கச் சட்டம்

மக்களின் செவிப்புலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் தாய்லாந்து அரசு பொது நிகழ்வுகளில் ஒலிபெருக்கி போன்ற சாதனங்கள் மூலமாக வெளியிடப்படும் சத்தத்தின் அளவைக் கட்டுப்படுத்தச் சட்டம் கொண்டுவரத் தீர்மானித்துள்ளது.

தாய்லாந்தில் புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ள ஒழுங்கு விதிகளின்படி பொழுது போக்கு இடங்களில் ஒலியின் அளவை 91 டெசிபலுக்கு மேல் இருக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைத் தளங்களில் ஒலிபெருக்கிகளில் குறிப்பிட்ட அளவுக்குமேல் ஒலி வெளியிடப்



படுவதால் ஊழியர்களின் கேட்குமசக்தி பாதிக்கப்படுகிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அளவுக்கு மேல் சத்தத்தைக் தொடர்ந்து கேட்பவர்களின் செவியின் நரம்புகள் பாதிப்புக்குள்ளாவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தாய்லாந்து சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

★ ★ ★

### கிறிமஸ் காலத்தில் போர் ஓய்வு

பிலிப்பைன்ஸ் அதிபர் குளோரியா அரோயோ கிறிஸ்மஸ் விழாவையொட்டி கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் மீதான தாக்குதல்களை மூன்று வாரங்களுக்கு நிறுத்திவைக்கும்படி அரச படைகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

இந்த அறிவித்தலை தீவிரவாதிகள் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்வார்கள் என்று தெரியவில்லை என்றாலும் அவர்களையும் இந்த கிறிஸ்மஸ் காலத்தில் அமைதியைக் கடைப்பிடிக்கும்படி அதிபர் அரோயோ கேட்டுள்ளார்.

போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டாலும் படையினர் மிகவும் விழிப்புடன் இருப்பார்கள் என்று படை அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

★ ★ ★

### சார்க் அமைப்பு அமைச்சர்கள் தீர்மானம்

தென்னாசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புக்கான அமைப்பின் தகவல் தொடர்பு அமைச்சர்கள் இஸ்லாமாபாத்தில் நடத்திய மாநாட்டில் 11 அம்சத்திட்டமொன்றை அங்கீகரித்துள்ளார்கள். பல்முனை ஊடகத்துறை ஒத்துழைப்பையும் உறுப்பு நாடுகளுக்கிடையில் சுயேச்சையான செய்திபரிவர்த்தனைகளையும் உறுதிப்படுத்தும் நோக்குடன் இத்திட்டம் உருவாகக்கப்பட்டுள்ளது.

தகவல்கள், செய்திப் பத்திரிகைகள், பருவ ஏடுகள், நூல்கள் மற்றும் பிரசுரங்கள் அதன் சுதந்திரமாக உறுப்புநாடுகளுக்குக் கிடைக்கக் கூடியதாக செய்வதையும் தபால், ரெலிபோன்




கட்டணங்களைக் குறைப்பதையும் இந்த செயற்திட்டம் நோக்கமாகக் கொண்டிருக்கும்.

### அமெரிக்காவின் ஒற்றுக்கேட்டல்

ஐ.நாவின் அணுசக்தி ஆணைக்குழுவின் தலைவர் எல்பராடே ஈரானிய ராஜதந்திரிகளுடன் ரெலிபோனில் உரையாடுவதை அமெரிக்க அதிகாரிகள் கள்ளமாக ஒற்றுக்கேட்டுள்ளார்கள் என்பது தெரியவந்ததையடுத்து. எல்பராடேயைப் பதவிநீக்கம் செய்வதற்குப் புஷ் நிர்வாகம் எடுத்த முயற்சி பிசுபிசுத்துப்போய் விட்டதாக 'வாஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

எல்பராடே ஈரானியருக்குச் சாதகமாகச் செயற்படுகிறார் என்று அமெரிக்கா கருதுகின்றது. அதனால் அவரை சர்வதேச அணுசக்தி ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து அப்புறப்படுத்த அமெரிக்கா விரும்புகிறது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்க எத்தனிப்பதை எல்பராடே மறைக்கிறார் என்பது அமெரிக்காவின் எண்ணம். ஆனால், ரெலிபோன் உரையாடலை ஒற்றுக்கேட்டதில் எதுவித ஆதாரமும் கிடைக்கவில்லை என்று இப்பொழுது தெரியவந்துள்ளது.

# சிவபதப்பேறு அடைந்து

# ஓராண்டு நிறைவு நினைவு அஞ்சலி



**தோற்றம்:**
**01-08-1937**

**மறைவு:**
**01-01-2004**

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும்
இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்டு பின்னர் பிரான்ஸில் வசித்தவருமாகிய

## அமரர் சிவானந்தம் வாதவூரன்

- ★ மற்றவர் மனதைக் கொள்ளைகொள்ளும் இனிய சுபாவம்
- ★ அன்பாகவும், பண்பாகவும், இனிமையாகவும், எளிமையாகவும் பழகுதல்
- ★ தமக்கென வாழா வள்ளல் பெருமகன்.
- ★ புன்சிரிப்புத் தவழும் முகம்
- ★ நெற்றியிலே திருநீறு

இத்தகைய பேறுபெற்ற அன்னார் மறைந்து ஓராண்டு நிறைவுறும் புனித நாளில் (20.12.2004) அன்னாரை நினைவுகூர்ந்து அவரது இல்லத்தில் இடம்பெறும் சமயாசார நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

மனிதரில் மாணிக்கமாய் வாழ்ந்தீர்!
மாநிலத்தில் அன்புடன் பண்புடன் திகழ்ந்தீர்!
புனிதராய் வாழ்ந்து புண்ணியர் கழல் சேர்ந்தீர்!
புவனமதில் உமது புகழ் நிலைத்தே இருக்கும்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இணுவில்
(சி/39695)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

# வெள்ளத்தில் மூழ்கியுள்ள நாரந்தனை தெற்கு கிராமம்

நாரந்தனை தெற்கில் குறுக்குக் கடலோரமாக உள்ள குடியிருப்புக்கள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளன. இதனால், இப்பகுதியில் வசிக்கும் சுமார் 75இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ளன.

நாரந்தனை தெற்கு கிராமத்தையும், சுருவில் கிராமத்தையும் பிரிக்கும் தரவைப் பகுதியினுள் சுருவில் உவர்நீர்த்தடுப்பு அணை ஊடாகக் கடல்நீர் உட்புகுந்து தேங்கி நிற்பதனால் இந்தத் தரவைப் பகுதியைக் குறுக்கு கடல் என இப்பிரதேச வாசிகள் கூறுகின்றனர்.

### உவர்நீரை நன்னீராக மாற்ற எடுத்த முயற்சி

சுருவில், புளியங்கூடல், சின்னமடு, நாரந்தனை, ஒலுவில் போன்ற சிறிய கிராமங்கள் இந்த குறுக்குக் கடலோரமாக அமைந்துள்ளன.



வெள்ளத்திற்கு மத்தியில் குழந்தைகளை சுமந்தவாறு மக்கள் படும் அவலம்.

இந்தக் கிராமங்கள் விவசாய விளை நிலங்களைக் கொண்டமைந்த பிரதேசங்களாகும் குறுக்குக்கடல் என அழைக்கப்படும் தரவைப் பகுதியினுள் கடல்நீர் உட்புகுந்து தேங்கி நிற்பதால் அருகிலுள்ள விவசாய விளை நிலங்கள் பாதிக்கப்படுவதுடன், இங்குள்ள நீர் நிலங்களும் உவர்நீராக மாறிவருகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டு குறுக்குக்கடல் என அழைக்கப்படும் தரவைப் பகுதியினுள் கடல்நீர் உட்புக முடியாதவாறு சுருவில் உவர் நீர் தடுப்பு அணை அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

தற்பொழுது சுருவில், புளியங்கூடல், சின்னமடு, நாரந்தனை, ஒலுவில் போன்ற அயல்கிராமங்களில் இருந்து வரும் வெள்ளம் வெளியேற முடியாமல் இந்தத் தரவைப் பகுதியில் சமுத்திரம் போன்று தேங்கியுள்ளது. இந்த வெள்ள நீரே தாழ்ந்த பகுதியாகக் காணப்படும் நாரந்தனை தெற்கு கிராமத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்துள்ளது.

இதனால், பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் நாரந்தனை தெற்குப் பகுதியில் குறுக்குக் கடலோரமாக நிறுவப்பட்ட குடியிருப்புக்களில் வசிக்கும் மக்கள். இம்மாத ஆரம்பத்தில் பெய்த மழையினால் இப்பிரதேசம் ஏற்கனவே, வெள்ளத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. எனினும், கடந்த 13ஆம், 14ஆம் திகதிகளில் பெய்த கடும் மழையினால் வெள்ளம் மேலும் அதிகரித்து இங்குள்ள பல வீடுகளுக்குள் உட்புகுந்துள்ளது.

இதனால், நாரந்தனை தெற்கு குடியேற்றத் திட்டப் பகுதிகளில் உள்ள வீடுகளில் வசித்தவர்கள் தொடர்மழையினால் இரவு வேளையில் இங்குள்ள பொதுமண்டபத்தில் தங்கியிருந்த போது வீடுகளில் இருந்த சமையல் பாத்திரங்கள் சில வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டதாகக் குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

### உவர்நீர்த் தடுப்பணை

இப்பகுதியில் வெள்ளநீர் கடந்தவருடங்களில் தேங்கியதில்லை எனவும், சுருவில் உவர்நீர்த் தடுப்பு அணை புனரமைப்புச் செய்யப்பட்ட பின்பே வெள்ளநீர் வெளியேற முடியாதவாறு சமுத்திரம் போன்று தேங்கியுள்ளதாகவும் - இப் பகுதியிலுள்ள முதியவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தரவைப் பகுதியில் உள்ள அரச காணிகள் கடந்தவருடம் பகிர்ந்தளிக்கப்பட்டு, அவற்றில் அரசசார்பற்ற நிறுவனத்தினால் அரை நிரந்தர வீடுகள் மற்றும் தற்காலிக மலசல கூடங்கள் அமைப்பதற்கான உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த அரைநிரந்தர வீடுகள் 12'-17' அளவு பிரமாணத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இது 12'-10' அளவுடைய ஓர் அறையும் 12'-7' கொண்ட ஒரு விறாந்தையும் உள்ளடக்கியுள்ளது. இவற்றில் அறைமட்டுமே மூடி அமைக்கப்பட்டுள்ளது. விறாந்தை மூடி அடைக்கப்படவில்லை. தமக்கு வழங்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட உதவிகளைக் கொண்டு அறையை மூடியும் விறாந்தையைத் திறந்த பகுதியாகவும் அமைக்க முடிந்தது. இதனால், தற்காலிக மலசல கூடங்கள் அமைப்பதற்கு வழங்கப்பட்ட கட்டடப்பொருள்களையும் இவர்கள் அரை நிரந்தர வீடுகள் அமைப்பதற்குப் பயனபடுத்தியுள்ளனர். இதனால், பெரும்பாலான வீடுகள், மலசல கூடங்கள் இன்றியே காணப்படுகின்றன.

இவ்வாறு சுமார் 30 அரைநிரந்தர வீடுகள் குறுக்குக் கடலோரமாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள போதிலும் அவை எவற்றிலும் பொதுமக்கள் நிம்மதியாக குடியிருக்க முடியாதவாறு வெள்ளநீர் உட்புகுந்துள்ளது. இவைமட்டுமன்றி சுமார் 10 அரைநிரந்தரவீடுகள் அரைகுறையாகவே காணப்படுகின்றன. பலர் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட மேற்படி அரைநிரந்தர வீடுகளுக்கான கட்டடப்பொருள்கள் அப்பகுதியில் இயங்கும் சிக்கனகடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் ஊடாக வழங்கப்பட்ட போதிலும், அவை முழுமையாகத் தமக்குக் கிடைக்கப்பெறவில்லையெனவும், தாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் அவர்கள் உதயன் செய்தியாளரிடம் முறையிட்டனர். இதுகுறித்து பூரண விசாரணை நடத்தப்படவேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர்.

## விரைந்து நடவடிக்கை எடுக்காவிடின் தொடர்ந்தும் இடப்பெயர்வு நிச்சயமே!

இந்த அரைநிரந்தர வீடுகளில் குடியிருப்பவர்கள ஏ-9 பாதை திறந்தபின்னர் வன்னிப்பகுதியில் இருந்து மீளக்குடியமர்ந்தவர்களாவர். இவர்களில் பெரும்பாலானோர் விவசாயக் கூலிகளாகவும், நாளாந்தக் கூலித் தொழிலாளர்களாகவும் காணப்படுகின்றனர்.

### நிவாரணத்தை நம்பிய மக்கள்

இவர்களது நாளாந்த வருமானம் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்றுவித்துக்கொள்ளப் போதுமானதாக இல்லை. நிவாரணததை நம்பியே பல குடும்பங்களது வாழ்க்கைச சக்கரம் சுழன்றுகொண்டிருக்கின்றது.

## செய்திக்கட்டுரை

இப்பிரதேச வாசிகள் வெள்ளத்திற்கு மத்தியில் குடிதண்ணீர், சுகாதாரம், போசாக்குமிக்க உணவு, மின்சாரம்,மலசலகூட வசதிகளின்றி பல்வேறு அவலங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இங்கு வெள்ளநீர் தேங்கி நிற்பதால் நுளம்புப் பெருக்கம் அதிகமாகக் காணப்படுவதுடன், தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகளும் அதிகமாகவுள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வீசிய கடும்காற்றினால் இங்குள்ள பொதுமண்டபம் உட்பட 15 வீட்டுக் கூரைகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளன. எனினும், இதற்கான நிவாரண உதவிகள் எதுவும் தமக்குக்கிடைக்கவில்லையென பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

எனினும், கடந்த 13ஆம், 14ஆம் திகதி பெய்த மழைகாரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களை அங்குள்ள பொதுமண்டபத்தில் அப்பகுதி கிராம அலுவலர் தற்காலிகமாக தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதுடன், நிலைவரத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனதத்திற்கும் கொண்டுவந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இப்பகுதியைச் சேர்ந்த ம.யோ.எட்மன் என்பவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

நாரந்தனை தெற்குப் பகுதியில் போரூட் நிறுவனத்தினால் 10ஆயிரம் ரூபாவும், அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் தூதரகத்தினால் 50 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 60 ஆயிரம் ரூபா தலா ஒரு குடும்பத்திற்கு அரைநிரந்தர வீடுகள் அமைப்பதற்கான நிதி உதவி வழங்கப்பட்டது.

இதன்படி, முதற்கட்டமாக 20 அரைநிரந்தர வீடுகளும், 2ஆம் கட்டமாக 50 அரைநிரந்தரவீடுகள் அமைப்பதற்கான உதவிகள் வழங்கப்பட்டன. இதில் பல வீடுகளைக் குறுக்குக் கடலோரமாக பகிர்ந்தளிக்கப்பட்ட அரச காணிகளிலும் அதனை அண்டியபகுதிகளிலும் அமைக்கப்பட்டன.

இதில் 2ஆம் கட்டமாக அமைக்கப்பட்ட பல வீடுகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளன. மேற்படி அரைநிரந்தர வீடுகள் அமைப்பதற்கான உதவிகள் ஒரு வீட்டிற்கு 60 ஆயிரம் ரூபாவிற்கு உட்பட்டு அத்திபாரக் கல்லு, மணல், சிமெந்து, அரிந்தகல்லு, தார்சீற் போன்ற கட்டடப் பொருள்களாகவும் ஒரு தொகை கூலிக்காகவும் வழங்கப்பட்டது.

இவற்றுடன் தற்காலிக மலசலகூடங்கள் அமைப்பதற்கான கட்டடப் பொருள்களும் வழங்கப்பட்டன.

இவை அப்பகுதியில் இயங்கும் சிக்கன கடன் வழங்கும் கூற்றுறவுச் சங்கம் ஊடாக வழங்கப்பட்டன. எனினும், இச் சங்கத்தினால் பயனாளிகளுக்கான உதவிப்பொருள்கள் முழுமையாக வழங்கப்படவில்லை. இதனால் பலர் தமது வீடுகள், தற்காலிக மலசல கூடங்களை பூர்த்திசெய்ய முடியாத நிலையில் உள்ளனர். பொதுமக்களுக்கென வழங்கப்படட கட்டடப் பொருட்களுள் சில தனியாருக்கு விற்கப்பட்டுளளது. இதற்கான ஆதாரமும் எம்மிடமும் உள்ளது.

எனினும், இந்தக் குடியிருப்புத் திட்டம்



குடியிருப்பை அண்டி சமுத்திரம்போன்று காணப்படும் நாரந்தனை குறுக்கு கடல் பகுதி

அமைக்கப்படுகின்றபோது இதனுள் வெள்ள நீர் உட்புகாதவாறு அணை அமைக்கப்பட்டு குடியிருப்புப் பகுதி மணல் கொண்டு உயரமாக்கப்படும் என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதன் பொருட்டு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றினால் 5லட்சம் ரூபா செலவில் தரவைப் பகுதியில் இருந்து மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு குடியிருப்புப் பகுதிகளுக்குள் பறிக்கப்பட்ட போதிலும் அதற்குமேலாக வெள்ள நீர் எமது குடியிருப்புக்களை ஆக்கிரமித்துள்ளது - என்றார்.

புனித இராயப்பர், சின்னப்பர் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க செயலாளர் சி.ஜெயா கருத்துத் தெரிவிக்கையில் -

கடல நீர் தரவைப் பகுதியினுள் ஊடுருவக் கூடாது என்பதுடன், மேலும் சில நன்மைகளை எதிர்பார்த்து சுருவில் உவர் நீர் தடுப்பு அணை புனரமைபபுச் செய்யப்பட்டது. எனினும், தரவைப் பகுதியை அண்டியுள்ள கிராமங்களில் இருந்து வரும் வெள்ளநீர், தரவைப்பகுதி ஊடாகக் கடலைச் சென்றடைவது தடுக்கப்பட்டுள்ளதால் வெள்ள நீர் தாழ்ந்த பகுதிகளாக இருந்த நாரந்தனை தெற்கு கிராமங்களுக்குள் புகுந்துள்ளது.

இப்பகுதிகளில் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் அரை நிரந்தர வீடுகள் மற்றும் தற்காலிக மலசல கூடங்கள் அமைப்பதற்கான பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவிகளோ யானைப் பசிக்கு



குடியிருப்பு வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதையும் மக்களின் நாளாந்த அலுவல்கள் பெரிதும் முடக்கப்பட்டுள்ளதையும் படத்தில் காணலாம்

சோளப்பொரி போட்டதுபோல் அமைந்ததனால் பல குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட உதவிகளைக்கொண்டு அவர்கள் அதனைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

அண்மையில் வீசியகடும் காற்றினால் இந்தக் குடியேற்றத்திட்டத்தில் இருந்த சுமார் 13 வீடுகளது கூரைகள் கடுதாசியைத்தூக்கி வீசுவது போன்று தூக்கி வீசப்பட்டுள்ளன.

இந்த அரசசார்பற்ற நிறுவனம் 17'-10' கொண்ட அரை நிரந்தர வீடு அமைக்கும் பொருட்டு பயனாளி ஒருவருக்கு 560 அரிந்த கற்கள், 9பைக்கற் சிமெந்து, 12சீற், ஒருதொகைப் பணத்தையும் வழங்கியது. இதில் அரிந்த கற்கள் தரமற்றதாக இருந்தன. பயனாளிகள் அப்பொழுது என்னிடம் சுட்டிக்காட்டி இருந்தனர் - என்றார்.

இப்பகுதி கிராமசேவை அலுவலரான க. இராமேஸ்வரன் கருத்துக் கூறுகையில் -

குறுக்குக் கடலோரமாக இந்த அரச காணிகள் குடும்பமொன்றிற்கு ஒருபரப்பு என்ற அடிப்படையில் 26குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் அரசசார்பற்ற நிறுவனங்களினால் அரைநிரந்தர வீடுகள் தற்காலிக மலசல கூடங்கள் அமைப்பதற்கான உதவிகள் வழங்கப்பட்டன.

எனினும், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வீசியகடும் காற்றினால் இங்குள்ள பொதுமண்டபம் உட்பட 15வீடுகளது கூரைகள் தூக்கி வீசப்பட்டிருந்தன. இவை பற்றி ஏற்கனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதேபோன்று தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள அனர்தம் குறித்தும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இவை அனைத்திற்கும் தீர்வாக சுருவில் உவர் நீர் தடுப்பு அணையின் கதவுகளை நீர் வெளியேறக் கூடியவாறு திறந்துவிடுவதுடன், அடுத்த வருடம் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு தரவைப்பகுதியில் இருந்து மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு நீர் உட்புக முடியாதவாறு நிரவுவதுடன், இந்த அரை நிரந்தர வீடுகளை முற்றுமுழுதாகப் பூர்த்திசெய்வதற்கான உதவிகள் வழங்கப்படுதல் வேண்டும் - என்றார்.

க.ஸ்ரீஸ்கந்தராசா
ஊர்காவற்றுறைச் செய்தியாளர்

## வீணை ஒலியன்ன ஒலித்த இசைப்பேரரசியின் இனியகுரல்

இணையற்ற இசைப் பேரரசி எம்.எஸ். சுப்புலட்சுமியின் மறைவு பெரும் இடைவெளியை ஏற்படுத்திவிட்டது. தூக்கிய திருவடியைக் காட்டிய வசந்த கோகுலமும், தாமரைத் தடாகத்தில மலர்ந்து தாமயைப் பாடிய தண்டபாணி தேசிகரும் எம்மை விட்டுப் பிரிய தன் செந்தமிழ் பாடல்களால் எம் சிந்தையை நிறைத்த சீர்காழி கோவிந்தராஜனும், ஞானப்பழத்தை பிழிந்து தந்த சுந்தராம்பாளும் இவ்வுலகில் இருந்து மறைந்த நிலையில், 1945 களில் மீரா திரைப்படத்திறகாகப் பாடிய காற்றினிலே வரும கீதத்தை தந்த இசையரசி எம்.எஸ. சுப்புலட்சுமி எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். ஆனால், அவர்பாடிய காற்றினிலே வரும் கீதம் சாகாவரம் பெற்று இன்னும் எம் செவியில் ஒலித்தபடியே விளங்குகின்றது.



நாம் அனைவரும் நிலையாமைக்கு உட்பட்டவர்கள் தாம் நிலையாமை ஒன்று தான் நிலையானது. ஆனால், நிலையாமையை வெல்லும் முறையில் நிலையான புகழை நிலமிசை நிலைநாட்டி செல்பவர் சிலர். அந்தச் சிலருள் எம்.எஸ்.சுப்புலட்சுமிக்கு இசையுலகில் தனியிடம் உண்டு.

1916 செப்ரெம்பர் 16 இல் தமிழ் வளர்த்த நான்மாடக்கூடல் மதுரையில் செண்பக வடிவு அம்மாளுக்கு தோன்றிய இவர், அகவை 88 இல பழுத்த பழம் உதிர்ந்து விழுந்தது போல் அவர் உயிரும் உடலைவிட்டுப் பிரிந்துவிட்டது. நீண்ட வாழ்வு வாழ்ந்த அவர், வாழும்போதே நிலைத்த புகழை நிலைநாட்டி உள்ளார். இத்தகைய பேறு எல்லோருக்கும் கிட்டுவது இல்லை. 88 ஆவது வயதில் மிகமுதிர்ச்சி பெற்ற நிலையில் அவர் மறைந்த போதிலும் அவருடைய அகவை எம் மனதில் தோன்றவில்லை. அவரின் வீணையை ஒத்த இசையே ஆர்வலர்களை இன்றும் ஆட்கொண்டபடி இருக்கின்றது. வீணையோடு போட்டியிடும் இவரது இனிய குரல் இளமையில் எப்படி அமைந்திருந்ததோ அவ்விதமே முதுமையிலும் இறுதிவரை இருந்தது. அவர்குரலைக்கேட்க மக்கள் கொண்ட ஆவலை எளிதில் எடுத்துரைக்க முடியாது.

இருபது ஆண்டுகள் தமிழ் நாட்டில் தங்கியிருந்த வேளையில் இவரின் இசை நிகழ்ச்சிகள் பல இடங்களில் பாங்கோடு நடைபெறக் கண்ட பாக்கியம் கிடைத்தது. அவரின் இசையினால் ஈர்க்கப்பட்டதால் இவர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில் இவரைச் சந்தித்து இவரின்

(13ஆம் பக்கம் பார்க்க)



ஊர்காவற்றுறை சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயத்திற்கு முன்பாகச் செல்லும் பிரதான வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதுடன், வீதியும் முற்றாகச் சேதமடைந்துள்ளமையையே படத்தில் காண்கிறீர்கள். வருடாந்த மழைகாலங்களில் இவ்வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதுடன் இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் பெரிதும் சிரமங்களை அனுபவித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.
(படம்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)

gtz
German Technical Cooperation

## SRILANKAN- GERMAN DEVELOPMENT COOPERATION

**Post of Liaison officer - GTZ /Ministry of Relief, Rehabilitation & Reconciliation**

The German Technical Cooperation (GTZ) works in collaboration with the Ministry of Relief, Rehabilitation & Reconciliation (MinRRR) and has taken steps to improve its information sharing, knowledge management and coordination of activities towards poverty alleviation and conflict transformation in the North & East of Sri Lanka. For an efficient and more systematic approach of information exchange there is a vacancy for an experienced person in knowledge management.

GTZ is searching for an energetic, proactive and professional candidate to be its Liaison Officer based at the MinRRR working under the direct supervision of the respective Project Advisor of GTZ. The incumbent will serve as an information and first contact point on issues relating to development results and be an efficient interface between all relevant institutions.

**Main tasks to be performed:**
★ Liaise with government counterpart and respective institutions of the Line Ministries, and ensure effective coordination between GTZ and MinRRR on technical issues and implementation of the action plan;
★ Advise and participate in formulation of advance concepts, conceptual approaches and impact monitoring;
★ Identify and propose possible training and capacity building programs for both project and counterpart staff;
★ Develop effective collaboration and information sharing with national institutions and other partners on development issues;
★ Coordinate the information exchange and specific planning steps in emergency projects such as food aid and/or refugee and IDP-resettlement;
★ Contribute to progress reports and all other forms of written information dissemination.

**Selection criteria:**
★ Specialization in management or administration;
★ 5+ years progressively advanced professional experience in field based program implementation;
★ Ability to provide well-grounded, quality analytical inputs with pragmatism and a focus on results;
★ Experience in working in multi-sectoral teams with colleagues of diverse backgrounds;
★ Fluency in English, Singhalese and Tamil, verbally and in writing; excellent report writing and communication skills;

Remuneration based on qualifications and according to GTZ SriLanka salary levels. Qualified and eligible female candidates are strongly encouraged to apply.
Only short listed candidates will be contacted.

Applications with a comprehensive curriculum vitae with names of two unrelated referees should be submitted in a sealed envelope marked **Application for the post of Liaison Officer** addressed to the *Human Resource Coordinator, GTZ-Colombo-6, Jawatte Avenue, Colombo - 5, or e-mail to gtz-srilanka@gtz.de no later than 31st December 2004.*

(C/39690)

### சம்மேளனத்தில் முறைப்பாடு

வலி.தெற்கு,டிசெ.19

மானிப்பாய் சோதிவேம்படி சூழலில் வசிக்கும் பல குடும்பங்களின் வீட்டுத்தோட்ட மரக்கறிகளைக் கட்டாக்காலி ஆடுகள் வந்து சேதப்படுத்தி அழிப்பதாகவும் -

அவற்றைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறும் மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தினரிடம் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

இதுவிடயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-152)

உ
ஓம் ஸ்ரீராம ஜெயம்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்


## இறுவட்டு (CD) வெளியீடு

இயலிசை வாரிதி, கவிமாமணி, கலாரத்னா, கலாபூஷணம், முத்தமிழ்க் கலாநிதி, மஹாவித்துவான்
(அமரர்) பிரம்மஸ்ரீ **மா.த.ந.வீரமணி ஐயர் M.A. J.P.** அவர்கள்
இயற்றிய
"வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கீர்த்தனைகள்"
இறுவட்டு (CD) 22.12.2004 புதன்கிழமை வைகுந்த ஏகாதசி தினம் காலை 7.00 மணிக்குத் தேவஸ்தான மண்டபத்தில் வெளியிடப்படும்.
தலைமை வகிப்பவர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
அனைவரும் வருக. பயன் பெறுக.

ஆதீன மகாசபை
(சி-39812) (24-19-14)
வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில், யாழ்ப்பாணம்.

## அந்தியேட்டிக் கிரியையும் நன்றி நவிலலும்

தோற்றம்
1931 ✶ 01 ✶ 01



மறைவு
2004 ✶ 11 ✶ 19

அமரர்

## வைத்திலிங்கம் இராசையா (J.P.)

(ஓய்வுபெற்ற உதவி அரச அதிபர் - தெல்லிப்பழை)

2004.11.19 அன்று இறைபதம் எய்திய அமரர் வைத்திலிங்கம் இராசையா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (2004.12.19) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவையொட்டி நேரிலும் தந்திமூலமும் தொலைபேசி மூலமும் துக்கத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*"துவாரகை"*
*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.* (39743) (24-19-14)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## சண்றைஸ் மெடி கிளினிக்
## யாழ்ப்பாணத்தில் SUN RISE MEDI CLINIC

**சிறப்பான வைத்திய சேவைக்கு உகந்ததோர் இடம்:**
★ யாழ்.போதனா வைத்தியசாலை MBBS டாக்டர்களின் வெளிநோயாளர் பிரிவு.
★ வாகன சாரதி அனுமதிப்பத்திர மருத்துவ அறிக்கை
★ ஆய்வுகூட பரிசோதனை ECG, X Ray
★ முழு உடற்பரிசோதனை.
★ அனுபவமிக்க வைத்திய நிபுணர்களின் தனியான கவனிப்பு
★ பல்வைத்திய-சேவை / நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பல்வைத்தியரின் சேவை.

❖ வைத்திய நிபுணத்துவ ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம்.
**Specialist Consultation Centre**
❖ ஆய்வுகூடத்தில் தினமும் நவீன கொம்பியூட்டர் மயமான இயந்திரங்கள் மூலமாக அனுபவம் மிக்கவர்களால் துல்லியமாக. சரியான பெறுபேறுகள்!

**வருகை தரும் வைத்திய நிபுணர்கள்**
1. குழந்தை வைத்திய நிபுணர் Paediatrician (தினமும் நண்பகல் / மாலை இரு தடவைகள்)
2. சத்திர சிகிச்சை நிபுணர்கள் Surgeons
3. பொது வைத்திய நிபுணர் Physicians
4. என்பு முறிவு நெரிவு சிகிச்சை நிபுணர் Orthopaedic Surgeon
5. கண் வைத்திய நிபுணர்கள் Eye Surgeons
6. மகப்பேற்று வைத்திய நிபுணர் Gynoecologist
7. உளநோய் மருத்துவ நிபுணர் Phychiastrict
8. தோல்வைத்திய நிபுணர் Dermatoligist








(யாழ்.மத்திய பஸ்நிலைய வைரவர் கோயிலுக்கு எதிரில்)
388, ஆஸ்பத்திரி வீதி முதலாம் மாடி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 6069.

## பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 1928 - 06 - 05

விண்ணுலகில் 1995 - 01 - 09

பலாலி தெற்கு ~ வயாவிளான்

**செல்லத்துரை உலகநாதன்** ஜே. பி.

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)

உத்தமரே நாங்கள் உமைப்பிரிந்து
பத்தாண்டு காலம் பறந்ததையா!
வித்தகமாய் வாழ்ந்த வாழ்வின் வரலாறும்
முத்தான உங்கள் அறிவுரையும்
எத்தாலும் மாறாது என்றென்றும்
சித்தத்தில் வைத்துத் துதிக்கின்றோம்.

பலாலி தெற்கு,
வயாவிளான்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(39801)(26-14-45)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கும் மில் சகல உபகரணங்களுடனும், விற்பனைக்கு உண்டு. மின்சார மோட்டார்களுடன்.

*தொடர்பு:~*
*ச.சின்னராசா,*
*190ஆம் கட்டை,*
*நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.*

(39651)(1213-17)


**அதிக சக்தியைத் தந்து**
**வயிற்றுப் போக்கை நிறுத்தும்**

Brownson Arrowroot Powder

**பிரவுண்சன் அரறூட் மாவு**

உண்மையானது, நம்பிக்கையானது என்று பரீட்சிக்கப்பட்டது. பாரம்பரியமாக வைத்தியர்கள் அறிவுறுத்தும் அரறூட் கஞ்சி குழந்தைகள், வயதானவர்கள் அனைவருக்கும் போசாக்குமிக்க ஓர் உணவு

யாழ் நகரில் கிடைக்குமிடம்

**ஸ்ரீ காந்த் எசன்ஸ் அன் குரோசரீஸ்**

161,K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021-2219

TALENT

**BROWNSON INDUSTRIES**
139,பாங்ஷால் வீதி, கொழும்பு - 11
Tel : 2327197, Fax : 2458507


## வியாபார ஸ்தலம் வாடகைக்கு!

திருநெல்வேலி விவசாயப் பயிற்சிக் கல்லூரிக்கு அண்மையில் பலாலி வீதியில் சுமார் 4000 சதுர அடி கடைக் கட்டடம் வாடகைக்குண்டு. சுப்பர் மார்க்கற் போன்ற பெரிய அளவிலான வியாபாரத்திற்கு உகந்தது. தற்பொழுது கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், உடன்தொடர்பு கொண்டால் உங்கள் தேவைக்கு ஏற்றாற்போல் வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**52, பலாலி வீதி, யாழ்ப்பாணம்,**
**தொலைபேசி 021 - 222 5187.**

(39646)(26-14-45)


சகல வயதினருக்கும்!
ஞாபகசக்தி குறைவாக உள்ளதா? இதோ பாவியுங்கள்

**தாரணி பிராமி மூலிகைப் பானி (சிரப்)**

**நன்மைகள் :**

கிரகிக்கும் சக்தி அதிகரிக்கும், புத்திக்கூர்மையை அளிக்கும், சருமநோயைக் குணப்படுத்தும், குரல்வளத்தை மேம்படுத்தும், காக்கை வலிப்பை நீக்கும், உளநோய் குணமாகும், பாலுடன் சேர்த்தும் அருந்தலாம்.

இது ஓர் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பாகும். யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்துப் பார்மஸிகளிலும் கிடைக்கும்.




ஏக விநியோகஸ்தர்கள்:
*சிவா நறுமணப் பூங்கா*
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
(சந்திரிக்கா சந்திக்கு அருகில்)
021 222 2567

**Srilanka Ayurvedic Corporation**
P.O. Box:20, Nawinna, Makaragama.


ௐ

ஸ்ரீராம ஜெயம்

## யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

*ஸ்ரீமந் நாராயணன் அடியார்களே!*

## சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம்

22-12-2004 புதன்கிழமை

'ஈழத்துத் திருப்பதி' எனப் போற்றப்படும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் விரதங்களுள் மிகவும் மகத்துவம் மிக்க ஏகாதசியில் பெரிதும் சிறப்பானதுமான சுவர்க்கவாயில் ஏகாதசிப் பெருவிழா நிகழும் தாரண வருடம் மார்கழி மாதம் 07ஆம் நாள் 22-12-2004 புதன்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு நிகழவுள்ளது. அதிகாலை 5.30 மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனத்தைத் தொடர்ந்து வசந்தமண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமிக்கு அன்று பகல் முழுவதும் அடியார்கள் அர்ச்சனை வழிபாடு செய்யலாம்.

**இரவு 8.00 மணி முதல் அதிகாலை 4.00 மணி வரை.**

மங்கல இசை, சொற்பொழிவுகள், கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெற்று, மறுநாள் மார்கழி 08ஆம் நாள் 23-12-2004 வியாழக்கிழமை அதிகாலை 5.45 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி திருவீதியுலா வருவார்.

*அடியார்கள் அனைவரும் சுவர்க்கவாயில் தரிசனம் கண்டு, சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழ்வீர்களாக!*

*ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில்.* - **ஆதீன மகாசபை.**

(சி-39590) (26-14-45)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1942 - 11 - 17

உதிர்வு 2003 - 12 - 30

**திருமதி கமலாம்பிகை கனகசுந்தரம்**

திதி: பூர்வபக்க அட்டமி

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்மனது
ஈண்டு உனது நினைவுடனே நாமிங்கு வாழ்கின்றோம்.
*ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.*

கலட்டி, தும்பளை,
பருத்தித்துறை. (சி-39687)(26-14-45)

- **குடும்பத்தினர்.**

உ
சிவமயம்



## அருள்மிகு புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையினரின்

## விசேஷ அறிவித்தல்

புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் பெயரில் அதிகாரம் அளிக்கப்படாத சில தனிநபர்கள் நிதிகளைப் பெறுவதனையும், ஆலய அசையும், அசையாச் சொத்துக்களைத் தமது கட்டுப் பாட்டில் கொண்டுள்ளமையையும் புற்றளை சித்திவிநாயகப்பெருமானின் ஆலயத்தின் பூரண நிர்வாகத்தினையும் பரிபாலனத்தினையும் மேற்கொண்டுவரும் புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை அவதானித்துள்ளது. இச்செயற்பாடு பரிபாலனசபையின் பிரமாணங்களின் கோவைப்படி சட்ட விரோதமானது ஆகும்.

ஆலயத்தின் பெயரில் நிதி சேகரிக்கவோ, ஆலயத்தின் அசையும், அசையாச் சொத்துக் களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவோ எந்த ஒரு தனிநபருக்கும் உரிமையோ அதிகாரமோ இல்லை என்பதை சபை அனைவரினதும் கவனத்திற்குக்கொண்டு வருகிறது. அத்தகைய நபர்கள் காலதாமதமின்றி, தமது கட்டுப்பாட்டில் உள்ளவற்றைச் சபையிடம் கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை மட்டுமே ஆலயத்தின் நிதிவளங்கள், அசையும், அசையாச் சொத்துக்களுக்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையாகிறது.

ஆலயத்திற்குப் பணமாகவோ அன்றிப் பொருளாகவோ அன்பளிப்புச் செய்யவிரும்புவோர் ஆலய பரிபாலன சபையின் பணிமனையில் நேரடியாகச் செலுத்திப் பற்றுசீட்டினைப் பெற்றுக் கொள்ளவும். காசோலையாகவோ, காசுக்கட்டளையாகவோ, தபால்மூலமோ பணத்தை அனுப்ப விரும்புவோர் *"பொருளாளர், புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபை, புற்றளை சித்திவிநாயகர் ஆலயம், புற்றளை புலோலி தெற்கு, புலோலி"* என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். வங்கிமூலம் வைப்பில் இடவிரும்புவோர் *"தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறைக்கிளை, சேமிப்பு கணக்கு இல.1082"* இல் உங்கள் நன்கொடைகளை வைப்பில் இடலாம்.

புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் பெயரில் எவருக்கும் எக்காரணம் கொண்டும் நிதியாகவோ அன்றிப் பொருளாகவோ எதனையும் கையளிக்கவேண்டாம் என அடியார்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய புனருத்தாரண வேலைகளுக்குக் கடந்த காலங்களில் பங்களிப்புச் செய்த அடியார் களுக்குப் பரிபாலனசபை தனது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது. ஆலயத்தில் தொடரும் கோபுர நிர்மாணம், மணிமண்டப கட்டுமானம், திட்டமிடப்பட்டுள்ள ஆன்மீகப் பணிகளுக்குப் பெருமளவு நிதி தேவைப்படுவதால் அடியார்களது பங்களிப்பினை பரிபாலனசபை வேண்டிநிற்கிறது.

இறைபணியில்
**ந.கணேசலிங்கம்,**
கௌரவ செயலாளர்,
**புற்றளை சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை,**
**புற்றளை, புலோலி.**

(சி-39814) (26-14-45)

## யாழ்ப்பாணம் - மாநகரசபை

**சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான**

## மீள் கேள்வி அறிவித்தல் - 2005

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை 2005-01-01 ஆம் திகதி முதல் 2005-12-31ஆம் திகதி வரையான ஒருவருட காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளராகிய என்னால் 2004-12-24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பூர்த்திசெய்யப்பட்ட படிவங்கள் யாவும் யாழ்.மாநகரசபையில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004-12-24ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் 2004-12-24 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குக் கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும்.

இவை தொடர்பான மேலதிக விவரங்கள் தேவைப்படின், அலுவலக நேரத்தில் நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

| பொதுச் சந்தைகள் | | பிணைப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| பாஷையூர் சந்தை | | 2500.00 | 39250.00 |
| புங்கங்குளம் சந்தை | | 2500.00 | 16500.00 |
| கொழும்புத்துறை சந்தை | | 1000.00 | 3300.00 |
| சைக்கிள் பார்க் | | | |
| கஸ்தூரியார் வீதி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | | 2500.00 | 40550.00 |
| இறைச்சிக் கடைகள் | | | |
| பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.04 | 2500.00 | 94600.00 |
| பண்ணை கோழிக்கடை | இல.07 | 2500.00 | 38500.00 |
| பாஷையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 2500.00 | 70300.00 |
| குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.05 | 5000.00 | 214750.00 |
| குருநகர் ஆட்டிறைச்சிக் கடை | இல.07 | 2500.00 | 10500.00 |
| அரியாலை ஆட்டிறைச்சிக் கடை | இல.02 | 2500.00 | 107500.00 |
| புங்கங்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 2500.00 | 182305.00 |
| நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை | இல.10 | 2500.00 | 6800.00 |
| நாவாந்துறை கருவாட்டுக் கடை | இல.11 | 1000.00 | 3900.00 |
| நாவாந்துறை கருவாட்டுக் கடை | இல.12 | 1000.00 | 3900.00 |
| மானிப்பாய் வீதி (ஜின்னா வீதி) ஆட்டிறைச்சிக்கடை | | 2500.00 | 42450.00 |
| நரிக்குண்று மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 275000.00 |

திகதி: 17-12-2004.

கலாநிதி க.குணராசா,
ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(சி-39820) (26-14-45)

## நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.19

அண்மையில் நடைபெற்ற அனுமதிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் கல்வியியல் முதுமாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளுக்குப் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை உயர் பட்டப் படிப்புகள் பீடத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர்ப் பட்டியலை பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என பட்டப்பின் படிப்புகள் பீடம் அறிவித்துள்ளது.(எ-202)

## ஒளிவிழா

'கியூடெக்' நிறுவனத்தின் அனுசரணையுடன் சில்லாலை கிறிஸ்து இராசா சனசமூக நிலைய இளையோர் சிறுவர் சமாதான குழுவினரால் நடத்தப்படும் ஒளிவிழா நாளை திங்கள் மாலை 5 மணிக்கு கிறிஸ்து இராசா சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக சில்லாலை பங்குத்தந்தை அன்ரனிப்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக 'கியூடெக்' நிறுவனத்தின் சமாதான ஊக்கிவிப்பாளர் கே.சரேன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். கலைநிகழ்வும் இடம்பெறும். (4-190)

# உலக உணவு நிறுவனத்தின் உதவியுடன் மீனவருக்கு வெளி இணைப்பு இயந்திரம்

யாழ்ப்பாணம்,டிசெ.18

உலக உணவு நிறுவனத்தின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணம், பருத்தித்துறை மருதங்கேணி, வேலணை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்குச் சுழற்சி முறையில் படகின் வெளி இணைப்பு இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொன்றும் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய 44 இயந்திரங்களே இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

இந்த இயந்திரங்களை வழங்குவதற்கான வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்றும் -

இந்த மாத இறுதிக்குள் இந்த இயந்திரங்கள் மீனவர்களுக்குக் கையளிக்கப்படும் என்றும் -

யாழ்.மாவட்ட கடற்றொழிற் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-6)

## பருத்தித்துறை வைத்தியசாலைக் கழிவுகளை அகற்ற நடவடிக்கை

வடமராட்சி,டிசெ.19

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கழிவுகளை அப்புறப்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பருத்தித்துறைப பிரதேச செயலர் சு.வசந்தகுமார் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளார்.

வைத்தியசாலைக் கழிவுகளைக் கொட்டுவதற்குப் பொருத்தமான இடமில்லையென வைத்தியசாலை நிர்வாகம் பிரதேச செயலரிடம்முறையிட்டிருந்தது.

பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் இப்பகுதிக்குரிய கிராம சேவையாளர், சுகாதாரப் பரிசோதகர், சுற்றுச் சூழல் உத்தியோகத்தர் ஆகியோரைக் கொண்ட குழுவினர் இணைந்து கழிவுப்பொருள்களைக் கொட்டுவதற்கான தகுந்த இடத்தைத் தெரிவுசெய்ய வேண்டும் என்றும் - பிரதேச செயலர் அறிவுறுத்தியுள்ளார். (எ-173)

# சமுர்த்தி அபிவிருத்தி அலுவலருக்கு சிறுவர் உரிமைபற்றி விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ.19

சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கு சிறுவர் உரிமைகள் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

யாழ்.சாந்திகத்தின் உளவளத்துணையாளர்கள் மேற்படி பயிற்சியை வழங்கினர்.

சமூக மட்டத்தில் சிறுவர்களுக்கு உரித்தான சமூக பாதுகாப்புக் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

கிராமிய மட்டத்தில் எவ்வாறான செயற்பாடுகளை சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மேற்கொள்ளவேண்டும் எனவும் இங்கே விளக்கமளிக்கப்பட்டது. (எ-185)

### சாவகச்சேரி விறுமர் கோயில் அருகே

# கழிவுகள் கொட்டப்படுவது குறித்து பொதுமக்கள் தரப்பில் கடும் ஆட்சேபம்

தென்மராட்சி,டிசெ.19

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் சேகரிக்கப்படும் கழிவுகள் சாவகச்சேரி விறுமர் கோயிலுக்கு அருகில் கொட்டப்படுவதால், அப்பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகர் மற்றும் சந்தை ஆகியவற்றின் கழிவுகள் இங்கே கொட்டப்படுவதால் இலையான் மற்றும் நுளம்பு அதிகமாக உள்ளதாகவும் -

மழை வெள்ளம் இப்பகுதியில் தேங்கியுள்ளதால் கழிவுகளிலிருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நகரசபை வாகனங்களில் சேகரிக்கப்படும் குப்பைகள் அப்புறப்படுத்த இடமின்மையால், நகர் மற்றும் சந்தைப்பகுதி குப்பைகள் மாத்திரமே தற்போது சேகரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (எ-117)

# வேலியிலுள்ள மரங்களில் மின்தாக்கம்; வீதியூடாகப் பயணஞ்செய்ய மக்கள் அச்சம்

கைதடி,டிசெ.19

கைதடி வள்மதி வீதியின் முதலாம் ஒழுங்கையில் வீதி ஓரத்தில் வளர்ந்துள்ள மரங்கள் மின்சார 'கேபிள்'களுடன் உராய்வுண்டு மின்தாக்கம் ஏற்படுவதால் அந்த வீதியால் பயணம் செய்யமுடியாதுள்ளதென அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாகக் காணி உரிமையாளரிடம் முறையிட்டபோதும் அம்மரங்களை வெட்டுவதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபடவில்லையெனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, அண்மையில் இப்பகுதியால் சென்ற சிறுமி ஒருத்தி அங்கு நின்ற மரக்கிளைகளில் தவறுதலாகக் கைவைத்தபோது மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

இதுசம்பந்தமாக, சாவகச்சேரி மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (10-75-202)

## நீதிமன்றங்களுக்கு பருவகால விடுமுறை

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் மேல்நீதிமன்றம் மற்றும் நீதிவான் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் பருவகால விடுமுறை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாவதால் அன்று முதல் அமர்வுகள் இடம்பெறமாட்டா எனத் தெரிவிக்கப்பட்டது.

நீதிவான் நீதிமன்ற அமர்வுகள் அடுத்த மாதம் 3ஆம் திகதியும், மேல் நீதிமன்ற அமர்வு அடுத்த மாதம் 5 ஆம் திகதியும் மீளவும் ஆரம்பமாகும். (எ-3)

# இருள் படிந்த உள்ளங்களில் ஒளி உருவாக மன்றாடுவோம்

இறைமக்களாக வாழ்வதற்கும், மற்றோரை வாழவைப்பதற்கும் அமைக்கப்பட்ட இறைவனின ஆலயங்களே! மீண்டும் நாம். மனுவுருவின் நிதர்சனத்தை சிந்திக்க உள்ளத்தையும், சந்திக்க இல்லத்தையும், புனிதப்படுத்தவும், புனரமைக்கவும், ஆயத்தம் செய்கின்றோம்.

நமது வாழ்வின் மூலமாக, மரித்துப்போன மனித உள, யதார்த்த உணர்வுகளுக்குப் புத்துயிர் அளிக்கவும்,மானுடத்தை அழிக்கும் இறை எதிர் சக்திகளைச் சிதைக்கவும், மனிதர் எவரும் விரும்பும் மழலை வடிவமாக இறைமகன் பிறந்து, குழப்பிப்போன படைப்பு அனைத்தையும் சீரமைத்துச் சிறையெடுத்து, சிந்தையால், செயலால முரண்பட்ட உலகின் முரண்களை நீக்கி, ஒருவரை ஒருவர் அரண்களாக அணிசெய்ய அழைப்பு விடுக்கும் பிறப்பைப் பகிர்ந்து கொண்டாடுவோம்.

குடிமதிப்பு எழுதப்பட்டபோது மனித குலத்தின் மதிப்பை எழுத மழலை ஒன்று இறைவனுக்கு அடிமையாகத் தன்னைப் படைத்த புனித மரியாளின் மடியில் பிறந்த வரலாற்று நிகழ்வை மானுடம், இரண்டாயிரம் ஆண்டுகளாக, இயல், இசை, நாடகமாய் இயம்பி நிற்பதை நாமறிவோம். கடவுள், மனிதனாக வேடமிட்டதாக நினைத்துப் பலர் தேவதூதனாக வேடமிட்டு, மக்களை மந்தைகளாக மாற்றுகின்றனர். கிறிஸ்து மனிதாகப் பிறந்து, மறைந்துபோன இறைசாயலை மனிதனில் தேடினார்; இன்றும் தேடுகின்றார்.

எமது வாழ்விலும் இறைசாயல் ஒளிர்ந்திட, உணர்வுகளைச் சீர்செய்வோம். படைப்பு அனைத்தையும் ஒழுங்கமைக்க இணைவோம். அருளின் துணையால் இருளகற்றி, இறையின் துணையால் குறைநீக்கி, மகிழ்வோம், மற்றோரை மகிழ்விப்போம்.

கிறிஸ்து இன்று நமது அகத்தில் தலைசாய்க்க இட முண்டா? மனிதன் இன்று தனக்கு ஏற்ற முறையிலே கடவுளை சாய்க்கின்றான். திருச்சபைகள் தமது கொள்கைகளுக்கு ஏற்ப "குளோனிங்" முறையிலே கிறிஸ்துவை உருவாக்க விரும்புகின்றன. திருச்சபை, தற்காலத்தில் திருச்சபைகளாக மாறியதால் "திரு" வைவிடுத்து சபைகளாக, சங்கங்களாக, சமாஜங்களாகச் செயற படுகின்றன.

### ஞாயிறு நற்பிரசாதம்

ஆதீனங்கள் ஆயர்களை ஆடுகளாக மாற்றியதால், ஆடுகள் ஆயன் இன்றி சுயாதீன சக்திகளால் திசை கெட்டுப் போகின்றமை அரசியல், ஆன்மீகம், இரண்டிலும் அநீதியை எதிர்த்து இருமினால் புறக்கணிப்பும், உறுமினால் பதவி பறிப்பும் அரங்கேற்றப்படுகின்றது. உறவுகளை சீர்செய்ய, ஒப்புரவு செய்ய உறுதிகொள்வோம்.

வையகத்தை மீட்க வந்த குழந்தை இயேசு வைக்கோலில் தலைசாய்த்ததாகக் கூறும் நாம், விதைக்கப்பட்டு, இறந்து, உயிர்த்து நெல் மணிகளைக் கொடுத்து பண்பட்டு, பயன்பட்டு, மீண்டும் மாட்டுக்கு உணவாகத் தயாராக இருக்கும் வைக்கோலின் தியாகசிந்தை கொண்ட உள்ளங்கள், உறவுகள், நம்மிடம் உள்ளனவா? வாழ்வியல் வடுக்கள், உளவியல் தாக்கங்கள், உறவுகளின் புறக்கணிப்புக்கள், முன்னேற்ற முட்டுக்கட்டைகள், எதிர்கால நிச்சயமின்மை என்பவற்றின் சுற்றிவளைப்பில் இருந்து விடுதலை பெற நீதியின் சூரியன் கிறிஸ்து பிறந்த செய்தி, இருள் படிந்த உள்ளங்களில் ஒளியை உண்டாக்க மன்றாடுவோம். பாமரனும், படித்தவனும் பேதையும், மேதையும், தம் உள்ளத்தை, உறவுகளைச் சீர்செய்ய ஒன்றிணைவோம்.

**அருட்திரு.எஸ்.ஜோய் துரைரத்தினம்**
*தென்னிந்தியத் திருச்சபை, வரணி*

## பேராயரின் பெற்றோர் ஞாபகார்த்தமாக முதியோர் இல்லம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் அதி வண. கலாநிதி எஸ்.ஜெபநேசனின் பெற்றோர் ஞாபகார்த்தமாக முதியோர் இல்லம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இணுவிலில் நிறுவப்பட்டுள்ள முதியோர் இல்லத்துக்கு சுப்பிரமணியம் கனகம்மா இல்லம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

வண.சுப்பிரமணியம் கனகம்மா முதியோர் இல்லத்தை இயக்குவதற்கான நிதியுதவியை வண. எஸ்.எம்.சுகுணாணந்தன் வழங்கியுள்ளார்.

முதியோர் இல்ல முகாமையாளராக ஆஸ்திரேலியாவில் முதியோர் பயிற்சி தொடர்பாக விசேட பயிற்சிபெற்ற திருமதி பெவர்லி வோட்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

முதற்கட்டமாக ஏழு முதியவர்கள் இந்த இலலத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-185)


உதயன்

பதிவில் பொதிந்தவை

கடந்து வந்த 19 ஆண்டுகளில் உதயன் தந்த பதிவுகள் ஈழத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில், அவர்தம் வாழ்வியலில் ஒரு பகுதி.

உதயனின் உதயகாலம் தொடக்கம் முக்கிய பதிவுகளை மீண்டும் படிக்கும் வாய்ப்பைத் தருகிறோம்.

1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில்...

21-01-1986

யாழ். நகரில் பதற்றம்

பாதுகாப்பு வலயத்தை உடனே வாபஸ் செய்!

பல அமைப்புகள் வற்புறுத்து

22-01-1986

பாதுகாப்பு வலயம்: வாபஸ் பெற்று கோட்டை ராணுவ முகாமை அகற்றுங்கள்

யாழ். முஸ்லிம்கள் ஜனதிபதிக்கு மகஜர்

* பலாலி விமான நிலையப் பகுதி மக்கள் பீதி அடையத் தேவையில்லை
* அச்சமின்றி அவரவர் வீடுகளில் இருக்கலாம்......ஆனால்

படையினருக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது என நிபந்தனை

23-01-1986

மறியல் போர் இன்று முதல் விஸ்தரிப்பு!

வெளியூர்களிலும் நடத்துவது குறித்து அமைப்புகள் யோசனை

இனப் பிரச்சினை:

அரசின் தீர்வு நாடாளுமன்ற தொடக்க உரையில்?

கூட்டத் தொடர் நாளை கலைப்பு

24-01-1986

தெல்லிப்பளையிலும் மாவிளையிலும் 17 பேர் மரணம்

மேலும் 25 பேர் காயம்; 'ஷெல்' தாக்குதலும் நடந்தது



# தமிழர் போராட்டத்தின் நியாயத்தைத் தலைநகரில் அச்சமின்றி வலியுறுத்த வாய்ப்பளித்த செயலமர்வு

**ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கமும், ஜனநாயகத்துக்கும் சிறுபான்மை உரிமைகளுக்கும் மற்றும் மோதல்களைத் தவிர்ப்பதற்குமான கூட்டமைப்பும் இணைந்து கடந்த 4ஆம், 5ஆம் திகதிகளில் கொழும்பு கொப்பேகடுவ கமநல' ஆராய்ச்சி நிலையத்தில் "அதிகாரப் பரவலாக்கல் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழியாகும்" என்ற தலைப்பிலான இருநாள் வதிவிட செயலமர்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தன. மூவினத்தைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்ட இந்தச் செயலமர்வில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பிரதிநிதி ஒருவர் எழுதிய கட்டுரையின் தொகுப்பு இது.**

கொழும்பு மாநகரில் தமிழர்கள் தலைநிமிர்ந்து தமது விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டையும் அதனை முன்னெடுத்து வரும் விடுதலைப் புலிகள் பற்றியும் எவ்வித அச்சமுமின்றி தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறுவதற்கு கொழும்பு விஜராம வீதியில் அமைந்துள்ள கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வு வழிசமைத்தது.

முன்னைய காலங்களில் அதாவது அரசிற்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர், கொழும்பிலோ அல்லது அதனை அண்மித்த பகுதிகளிலோ குறிப்பாக தென்பகுதியில் எங்கென்றாலும் விடுதலைப் புலிகள் பற்றியோ தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் பற்றியோ வாய் திறந்து எதுவும் பேசமுடியாது. தப்பித் தவறி ஏதாவது பேசிவிட்டால் அவர்கள் பயங்கரவாதி என முத்திரைகுத்தி சிறைக் கூடங்களில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவர்.

அந்த நிலை இன்று மாறியுள்ளது. அந்த மாற்றத்திற்கான காரணங்களை மக்கள் நன்கறிவர். இன்று சர்வதேசங்களின் கவனத்தை இலங்கையின் பக்கம் செலுத்துவதற்கு காரணமாக அமைந்துள்ளது இந்த நாட்டிலுள்ள இனப்பிரச்சினை. இதனைத் தீர்ப்பதற்கு அரசும், விடுதலைப் புலிகளும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டன; மேற்கொண்டும் வருகின்றன. இந்த அடிப்படையில் தமிழர்களுக்கான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களைத் தொடரலாம் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், அரசு அதனைக் கவனத்தில் கொள்ளாது தட்டிக்கழித்து வருகின்றது. இதனால் தற்போது நாட்டில் நிலவுகின்ற சமாதான சூழ்நிலைகள் குழம்பி மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுமோ என்று மக்கள் அனைவரும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் ஜனநாயக உரிமைகளைக் காப்பதற்கான இயக்கமும் ஜனநாயகத்துக்கும் சிறுபான்மை உரிமைகளுக்கும் மற்றும் மோதல்களைத் தவிர்ப்பதற்கான கூட்டமைப்பும் இணைந்து 'அதிகாரப் பரவலாக்கத்தின் மூலம் இனப்பிரச்சினைத் தீர்வு' என்ற தலைப்பில் இருநாள் வதிவிடச் செயலமர்வை நடத்தியது.

இதில் வடக்கு - கிழக்கு மாவட்டங்கள் உட்பட அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் பிரதிநிதிகளும் மலையகத் தமிழர் பிரதிநிதிகள் - இளைஞர்கள், யுவதிகள் - பங்குபற்றிக் கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துக் கூறக்கூடியதாக இருந்தது.

**தொகுப்பு : அவதானி**

இந்நிகழ்வில், கலந்துகொள்ளுமாறு இந்த நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய அரசின் சார்பில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திசா விதானகே, அரசியல் விவகார மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகரா, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புச் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான என். ரவிராஜ், மா.க.ஈழவேந்தன் ஆகியோரும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக நடாளுமன்ற உறுப்பினர் வைத்தியகலாநிதி ஜயலத் ஜயவர்த்தனவும், மலையக மக்கள் முன்னணி சார்பாக அதன் உப தலைவர் லோறன்ஸூம். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.) சார்பாக அதன் ஆலோசகர் கலாநிதி விக்னேஸ்வரனும்-

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் சார்பாக அதன் இணைத் தலைவர்களில் ஒருவரான யோகராஜனும், தேசிய ஐக்கிய முன்னணி சார்பாக "சட்டத்தரணி எம்.எம்.அபுல்கலாமும், அரசியல் கட்சித் தலைவர்களான வாசுதேவ நாணயக்கார, கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன ஆகியோரும் கலந்துகொண்டு அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படவேண்டிய அவசியம் பற்றி தமது நிலைப்பாடுகளை எடுத்து விளக்கினர்.

இதில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டு தமது தரப்பு நியாயப்பாடுகளை எடுத்துவிளக்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்படும் கருத்துக்களை அறிவதற்கு தென்பகுதி சிங்கள இளைஞர்கள் மற்றும் யுவதிகள் மற்றும் பிரமுகர்கள் ஆவலாக இருந்ததனைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால், துரதிர்ஷ்ட வசமாக அவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

இந்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்ட பகுதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திற்குள் அமைந்திருந்தது. அதனால், தமது பாதுகாப்புக் கருதி விடுதலைப் புலிகள் வரவில்லை என்று அங்கிருந்தவர்கள் கிசுகிசுத்ததனைக் கேட்கக் கூடியதாக இருந்தது. விடுதலைப் புலிகள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளாதுவிட்டாலும் வடக்கு - கிழக்குப் பகுதியில் இருந்து வந்தவர்கள் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகளைத் தெட்டத் தெளிவாக எடுத்து விளக்கினர்.

இந்நிகழ்வில் கருத்துக் கூறுவதற்கு அனைத்துத் தரப்பினர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதனைப் பயன்படுத்தி தமிழ் இளைஞர்கள் தமது கருத்துக்களைக் கொட்டித் தீர்த்தனர். அப்பொழுது அங்கு உரையாற்றிய பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கூறிய கருத்துக்கள் வருமாறு:-

"தமிழன் இன்று தலைநிமிர்ந்து நிற்பதற்கும் இங்கு துணிவாக வந்து கருத்துக் கூறுவதற்கும் காரணமாக விளங்குபவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். அவர்களின் பின்னால் மக்கள் அணிதிரண்டுள்ளனர். தமிழருக்குரிய தீர்வை சுயகௌரவத்தைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய உன்னத தலைவன் எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரன்தான். அவருடைய கரத்தைப் பலப்படுத்துவதைவிட தமிழர்களுக்கு வேறு மார்க்கமில்லை.

தலைவர் தமது மாவீரர்தின உரையில் தமது தரப்பு நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளார். அரசு சமாதான முயற்சிகளைத் தொடர்வதற்கு மீண்டுமொரு சந்தர்ப்பத்தினை வழங்கியுள்ளார். இதனை அரசு நன்றாகப் புரிந்துசெயற்படவேண்டும். தவறும் பட்சத்தில் எமது மண்ணையும் உரிமைகளையும் பெறுவதற்கான போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டியது தவிர்க்கமுடியாததாகும். அவ்வாறு இந்த மண்ணில் யுத்தம் ஒன்று வெடிக்குமாக இருந்தால் சிறுவர் முதல் வயோதிபர்கள் வரை விடுதலைப் புலிகளுடன் இணைந்து எமது மண்ணை மீட்போம். அதுமட்டுமல்ல, இன்று மாணவர்களாகக் கல்வி கற்கும் நாங்கள் கூட எமது புத்தகம் தூக்கிய கைகளில் துப்பாக்கி ஏந்தும் சூழ்நிலைக்கு தள்ளப்படுவோம். அது தவிர்க்க முடியாதது" - என்று தமிழனுக்குரிய இறுமாப்புடன் எடுத்துக் கூறினார்.

இந்த மாணவன் தமிழில் ஆற்றிய உரை சங்கள, ஆங்கில மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. அனைத்து நிகழ்ச்சிகளும் அவ்வாறே மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டு அனைவரும் விளக்கம் பெறக்கூடியதாக இருந்தது. மாணவனின் உரையைக் கேட்ட தென்பகுதி சிங்களவர்களின் முகத்தில் ஈயாடவில்லை. அனைவரும் மூக்கில் விரலை வைத்து யோசனையுடன் அமர்ந்திருந்தனர். அங்கு குழுமியிருந்த தமிழ் உள்ளங்களின் வெளிப்பாடாக வெளிவந்த கரகோஷமே அவர்களின் சிந்தனையைக் கலைத்தது.

பெல்ஜியம் நாட்டின் மூதவை உறுப்பினர் பேர்ணாட் பொலாஸ், பெல்ஜியம், சுவிற்ஸர்லாந்து நாடுகளின் சமஷ்டி அமைப்புப் பற்றியும் இத்தாலி நாட்டைச் சேர்ந்த குந்தர் ரவுட்ஸ் 'மூன்றாம் உலகமும் சுயாட்சி மாதிரிகளும்' என்ற தலைப்பில் இத்தாலி நாட்டு சமஷ்டி முறைபற்றியும் கனடா நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் ரொனால்ட் வொட்ஸ் உலக நாடுகளில் காணப்படும் கூட்டாட்சி முறைகள், கூட்டாட்சியிலுள்ள நன்மை தீமைகள் பற்றியும் எடுத்து விளக்கினார்.

இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய சிங்கள அரசியல்வாதிகள் மற்றும் பிக்குமார்கள் தமிழர்களின் போராட்டத்தை அங்கீகரிப்பது போன்ற சாரப்பட உரையாற்றினர். இது தென்பகுதியில் ஏற்பட்டு வரும் மாற்றத்தை எமக்கு எடுத்துக் காட்டியது.

அரசியல் கட்சிப் பிரமுகர்கள் அனைவரும் உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் முதலில் உரை நிகழ்த்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் -

**அஹிம்சைப் போராட்டம் தோல்வி**

தென்பகுதியில் ஆட்சி பீடமேறும் அரசியல்வாதிகள் தமிழ்மக்களை அடக்கி ஒடுக்க முனைந்ததாலேயே இந்த ஆயுதப் போராட்டம் தோன்றியது.

நாம் ஆரம்பத்தில் எமது உரிமைகளைப் பெறுவதற்காக அஹிம்சை வழியில் போராடினோம். எமது கோரிக்கையை அப்போதிருந்த தலைவர்கள் நிராகரித்தனர். அதன் பயனாகக் கொதிப்படைந்த எமது இளம் சமூகத்தினர் அடக்குமுறைக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். அதன்மூலம் சர்வதேசத்தின் பார்வையை எமது பக்கம் திருப்பியுள்ளதோடு மட்டுமல்லாது, எமது நியாயமான கோரிக்கையை அவர்களும் ஏற்றுள்ளார்கள்.

சமஷ்டி அமைப்பின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் மூலம் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தாருங்கள் என்று கேட்கின்றோம். பிரிவினையில் ஒற்றுமையைக் காண்பதுதான் சமஷ்டியாகும். இந்த நாட்டில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் தமிழ், சிங்கள மக்கள் ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் வாழலாம். அதன்மூலம் எமது நாட்டை விருத்தி செய்யலாம். உலக நாடுகளில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் சமஷ்டி அமைப்பின் கீழ் சந்தோஷமாக இருக்கிறார்கள். நாமோ அல்லது விடுதலைப் புலிகளோ ஒருபோதும் பயங்கரவாதிகள் அல்லர்.

தமிழ் மக்களுடைய கோரிக்கையைச் சிங்களத் தலைமைகளும் சிங்கள மக்களும் ஏற்று சமஷ்டி அமைப்பின் கீழ் ஒரு நல்ல தீர்வை வழங்கவேண்டும் - என்று மிக அழகாக ஆங்கில மொழியில் சபையில் எடுத்துக் கூறினார்.

## படையினர் முகாம்களுக்குள் முடங்குவது பிரச்சினைகள் பல தீர வழி செய்யும்

இவருடைய இப்பேச்சு அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தந்தபோதும் ஒரு சிலருடைய முகத்தில் கோப அனல் பறந்ததையும் காண முடிந்தது. அந்தக் கோபம் யாருக்கு வந்தது? எமது மலையகத் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கே. காரணம் ரவிராஜ் எம்.பி., எமது தாய் மொழியாகிய தமிழ் மொழியில் உரை நிகழ்த்தாது ஆங்கிலத்தில் உரையாற்றியது தான். சிங்களவர்கள் அனைவரும் தமது மொழியில் பற்றுக்கொண்டு தமது தாய் மொழியில் உரை நிகழ்த்தியபோதும், எமது மொழியுரிமைக்காகப் போராடும் நாம் ஏன் எமது மொழியை விடுத்து அந்நிய மொழியில் பேசவேண்டும் - என்று எம்மிடம் வினா தொடுத்தனர்.

நிகழ்வு நடைபெற்ற இடத்தில் மூன்று மொழிகளிலும் கேட்பதற்கு வேண்டிய மொழி பெயர்ப்பு வசதிகள் செய்யப்பட்டிருந்தபோதும் ரவிராஜ் எம்.பி. ஆங்கிலத்தில் உரையாற்றியது தவறாக இருக்கலாம். மலையக சகோதரர்களின் கோபத்திலும், ஆதங்கத்திலும் நியாயமுண்டு. இருந்தாலும் எமது பிரச்சினை பற்றி எமக்கு விளக்கம் தேவையில்லை. அதில் கலந்துகொண்ட சிங்களவர்களுக்கும், வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் விளங்கவைக்க வேண்டிய பொறுப்பு ரவிராஜ் எம்.பிக்கு உண்டு என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை.

மொழி பெயர்ப்புச் செய்பவர்கள் அவர் கூறும் கருத்துக்களில் சிலவற்றை வெட்டி விடலாம். அல்லது திரிபுபடுத்திக் கூறலாம். அதன் காரணமாகத் தனது கருத்து சகலருக்கும் சென்றடையவேண்டும் என்ற நோக்கத்தில் அவர் அவ்வாறு உரையாற்றியிருக்கலாம்.

ரவிராஜ் எம்.பியை விட யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சு. பரமநாதன் ஆகியோரும் தமிழர்களுக்கான சுயாட்சி உரிமையை சமஷ்டி முறை அடிப்படையில் வழங்கவேண்டும் என்று கூறினார்கள்.

அங்கு உரையாற்றிய ஈ.பி.டி.பி. கட்சியின் ஆலோசகர் கலாநிதி விக்னேஸ்வரன் தமது உரையில் விடுதலைப் புலிகள் அமைப்பைப் பற்றி வசைபாடினார்.

நாமும் ஒரு காலத்தில் தமிழர்களின் உரிமைக்காக ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள். அந்த உரிமையை ஜனநாயக அஹிம்சை வழியில் பெறுவதற்காக ஆயுதங்களைத் தூக்கி வீசிவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளோம். ஆனால், விடுதலைப் புலிகள் தமது பிரதேசத்தில் சர்வாதிகாரப் போக்கில் செயற்படுகின்றனர்.

ஏன்? அண்மையில் திருகோணமலை, மன்னார் போன்ற இடங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்களுக்கு யார் காரணம்? விடுதலைப் புலிகளின் விதண்டாவாதமும் ஆக்கிரமிப்புமே இச்சம்பவங்களுக்குக் காரணம். மக்களைத் தூண்டிவிட்டு அவர்களைப் பலியிடும் முயற்சிகளை அவர்கள் மேற்கொள்கின்றனர்.

அன்றுமுதல் இன்றுவரை விடுதலைப் புலிகளின் அராஜக நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் ஒரே ஒரு கட்சி எமது கட்சிதான் - என்று நீட்டிப் பேசினார்.

இதனை தமிழ்ப்பற்றுமிக்க உள்ளங்களால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. அதன் வெளிப்பாடாக அவர் தமது உரையை முடிப்பதற்குள்ளேயே அவர்கள் தமது கரங்களைத் தட்டிவிட்டார்கள். அதுமட்டுமல்லாது அவரது உரைக்கு மேடையில் ஏறி விளக்கமும் கொடுத்தார்கள்.

விக்னேஸ்வரனின் உரையைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார்கள் சிங்களவர்கள். ஆனால், அந்த மகிழ்ச்சி நின்று நிலைக்கவில்லை. மேடைக்கு வந்த ஒரு தமிழ் இளைஞன் விக்னேஸ்வரனின் கூற்றை முற்றாக நிராகரித்தார். திருமலை மற்றும் மன்னாரில் இடம்பெற்ற சம்பவங்களுக்கும் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று இடித்துரைத்தார். அதுமட்டுமல்லாது அவர் பேசும் போது ஏன் சில கரங்கள் தட்டி ஓசை எழுப்பின என்பதற்கான விளக்கத்தையும் கொடுத்தார்.

அடுத்து பேசியவர் தற்போது அ[illegible] பீடத்தில் இருக்கும் அரசின் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அமைச்சர் டி.யூ குணசேகரா.

அவர் உரையாற்ற எழுந்ததும் அவர் தமிழ் மக்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் தமது தரப்பு வாதங்களை முன்வைப்பார் என்றுதான் அனைவரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் அவர் அவ்வாறு உரைநிகழ்த்தவில்லை தமிழர்களின் போராட்டத்தில் நியாயம் உண்டு என்பதனை தமதுரையில் ஆங்காங்கே தொட்டுக்காட்டினார்.

அவர் கூறிய கருத்துக்கள் வருமாறு:-

## சிங்கள ஊடகவியலாளர் கருத்து

நான் அரசியல் பிரவேசம் செய்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட காலத்திலிருந்து இந்த மண்ணில் இடம்பெறும் யுத்தத்திற்கு எதிராகக்குரல் கொடுத்து எதிர்த்து வாக்களித்து வந்தவன். தற்போது யுத்தத்திற்கு எதிராகக் குரல்கொடுத்து வருகின்றேன்.

இந்த நாட்டில் தமிழர்கள் போராட்டத்தை நடத்துவதற்கு பல காரணங்கள் உண்டு. கடந்த 17 வருடங்களாக தமிழ்மொழி அரச மொழியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாறாக சிங்கள மொழியே அரசகரும மொழியாக இருக்கின்றது. தமிழ்மொழி அவ்வாறான அந்தஸ்தை இதுவரை பெறவில்லை - வழங்கப்படவுமில்லை.

தமிழ் மக்களில் 52 வீதமான மக்கள் வடக்கு - கிழக்குக்கு வெளியில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வசித்து வருகின்றார்கள். இவ்வாறு அல்லற்படும் மக்கள்பற்றி நாடாளுமன்றத்தில் பேசும் பிரதிநிதித்துவம் இருக்கின்றதா என்பதனையிட்டுப் பார்க்கவேண்டும்.

70வீதமான தமிழ் உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சபைகளில் கூட முழுமையாகச் சிங்கள ஊழியர்களே கடமையாற்றும் நிலைமை இன்றும் காணப்படுகின்றது. அது மட்டுமல்லாது, யாழ்.குடாநாட்டில் தனிச் சிங்களப் பொலீஸாரே கடமையாற்றுகின்றனர். இத்தகைய நிலைமைகளை மாற்றுவதற்கு நான் முயன்றுவருகிறேன்.

முன்னைய காலங்களில் யுத்தம் வேண்டும் என்று கூறியவர்களே அதிகம் இருந்தார்கள்.

(15ஆம் பக்கம் பார்க்க)

---

# வீணை ஒலியன்ன...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

இசையாற்றலை வாழ்த்தியதுண்டு. அப்பொழுதெல்லாம் எல்லைமீறிய தன்னடக்கத்துடன் என்னிடம் ஒன்றும் இல்லை. இறைவன் தந்த கொடையே இந்த இசை என்று அவர் கூறிய கூற்றுக்கள் இன்றும் செவிகளில் ஒலிக்கின்றன.

*'பாட்டுகொரு புலவன் பாரதியடா- அவன்*
*பாட்டை பண்ணோடு ஒருவன் பாடினானடா*
*கேட்டுக் கிறுகிறுத்து போனேனடா'* என்று.

கவிமணி அவர்கள் மெய்மறந்து பாடுகின்றார். பாரதியின் 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே - இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்றும், யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்றும், 'இமயமலை எங்கள் மலை' என்றும் இசைக்குயில் எம்.எஸ்.சுப்புலட்சுமி பாடுகின்றபோது மெய்மறந்த நிலையில் ஏதோ ஒரு தனியுலகிற்கு நாம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளோம் என்ற எண்ணமே எம்மிடம் தலைதூக்குகின்றது.

வடமொழியில் அமைந்தாலும் எம்.எஸ். சுப்புலட்சுமியின் 'சுப்ரபாதத்தை' நாம் குறைத்து மதிப்பிடவில்லை. அதிலும் ஒரு கம்பீரத் தன்மையை நாம் காண்கின்றோம். இராஜாஜியின் தூண்டுதலால் ஐ.நா. மன்றத்தில் இவரின் பாடல்கள் ஒலித்தபோது உலகம் வியந்த பாங்கினை வளம்மிக்க தமிழிலும் எடுத்துரைக்க வாய்ப்பில்லை. நேருவும், இந்திய வானம்பாடி சறோஜினி நாயுடுவும், அறிஞர் அண்ணாவும் தமக்கிடையே இருந்த வேற்றுமைகள் அனைத்தையும் மறந்து இவரை வாழ்த்தியதை எண்ணுகின்றபோது இவரின் இசையாற்றலை எப்படி நாம் இயம்ப முடியும். இவரின் இழப்பு தமிழ் கூறும் நல்லுலகிற்கு மட்டுமல்ல இசையில் ஈடுபாடுள்ள அனைத்துலக இசைவல்லார்க்கும் ஒரு பேரிழப்பாகும்.

இசைக்குயில் எம்மை விட்டுப் பிரிந்து விட்டது. ஆனால் அந்த இசைக்குயிலின் இசை எம்மைவிட்டுப் என்றும் பிரியப்போவதில்லை. எம் வழித்தோன்றல்களுக்கு இந்த இசைக் குயிலின் பாடல்கள் வாழ்வளிப்பது உறுதி.

**- மா.க.ஈழவேந்தன்**

# ஆறாம் மாத நினைவலைகள்

தோற்றம்
1934 – 07 – 30

மறைவு
2004 – 06 – 25



## அமரர்
## குமாரவேலு தர்மலிங்கம்

(முன்னாள் வர்த்தகர் - K.A.வேலுப்பிள்ளை ஸ்ரோர்ஸ், பதுளை வினாயகர் ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)

**மாதங்கள் ஆறு மறைந்தோடினாலும்**
**மறையவில்லையே உம் நினைவு!**
**உலகத்தின் கண்களில் உம் உருவம் மறைந்தாலும்**
**உம்பாசம் எம் நெஞ்சைவிட்டு அகலாது!**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*115, ஓட்டுமடம் வீதி,*
*சிவலிங்கப்புளியடி,*
*யாழ்ப்பாணம்.*

(39795)(42-11-45)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# பதவி வெற்றிடம்

எமது நிறுவன யாழ்.கிளைக்கு கீழ்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை.

1. சந்தைப்படுத்தல் அதிகாரி (Marketing Officer) -ஆண்
   - வயதெல்லை - 18 வயதுக்கு மேல்
   - சரளமாக ஆங்கிலம் பேசக்கூடியவர்கள்.
2. கணக்கு லிகிதர் (Accounts Clerk) - பெண்
   - வயதெல்லை 18 வயதிற்கு மேல்
   - கணனியில் முன் அனுபவம் தேவை
   - சரளமாக ஆங்கில அறிவு உள்ளவர்கள்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையவர்கள் நற்சான்றிதழ்களுடனும் கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடனும் மற்றும் தங்கள் சுயவிவரக் கோவையுடனும் கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும்.

(வாரநாள்களில் காலை 9.30 மணிமுதல் 4 மணி வரை).

**PC HOUSE (PVT) LTD**
# 1k, Stynley Road, Jaffna. **Tel** :021 2226671
**Tel /Fax** :021 2226672 **E-mail** :info @pchouse.lk
**Website** :www.pchouse.lk

39808)(42-11-45)

# மரண அறிவித்தல்

## பேதுறு கிறிஸ்தோபர்

(ஓய்வுபெற்ற ஊழியர், ஸ்ரீலங்கா உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்)



யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லமணி என அழைக்கப்படும் பேதுறு கிறிஸ்தோபர் அவர்கள் 15.12.2004 புதன்கிழமை ஜேர்மனியில் முனிசர் நகரிலுள்ள தனது மகளின இல்லத்தில் காலமானார்.

அன்னார் நெடுந்தீவைச் சேர்ந்த காலஞ் சென்ற பேதுறு - வியாகுலம் தம்பதிகளின் ஒரே மகனும் காலஞ்சென்ற மாசிலாமணியின் அன புக் கணவரும் பிரான்சிஸ் (கி.பி.அரவிந்தன் - பிரான்ஸ்), யோர்ச் கிளமென்ற் (ஜெயா - பிரான்ஸ்), மரிய அல் போன்ஸ் (றூபன் - நோர்வே), மேரி பட்றிஸ்ற் (விஜிதா - பிரான்ஸ்),மேரி கொன்சலா (வனிதா - ஜேர்மனி), ஜேராட் ஜேம்ஸ் (ரவி - இலண்டன்), மேரி இமெல்டா (குமுதா - கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சுமத்திரி, அஞ்சலீசம்மா, மரிய செல்வராணி, யேசு றொபின்சன், கிளமென்ற் சுரேஷ், தேவவதனா, அன்ரன் றெஜிராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெனி, ஜெறோம், மரிற்றன், றிற்றோ, மரின் சமீரா, அங்கதன், மானினி, நயனி, ஜெயனி, மேரி நிலானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (20.12.2004) திங்கட்கிழமை ஜேர்மனி நேரத்தின் படி பி.ப. 1.00-3.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஜேர்மனி,*
*T.P.:0049251661463.*

(39798)(42-11-45)

தகவல்:
பிள்ளைகள்.

# Intel PENTIUM 4

**Processor 2.4 GHz**
- GIGABYTE Mother Board
- 128 MB RAM DDR
- 40 GB 7200 RPM HDD
- 1.44 MB Floppy Drive
- 15" PHILIPS Color Monitor
- PS2 Keyboard
- PS2 Mouse with Pad
- 52X CD ROM
- Multimedia Speakers

Rs. 52,000/-

**Processor 3.0 GHz HT**
- Intel 865E Chipset Mother Board
- 512 MB RAM DDR 400MHz Kingston
- -120 GB Serial ATA HDD
- 1.44 MB Floppy Drive
- 15" PHILIPS Color Monitor
- Optical Mouse with Pad
- PS2 Keyboard
- Combo Drive
- Multimedia Speakers

Rs. 85,000/-

**Processor 2.8 GHz HT**
- GIGABYTE Mother Board
- 256 MB RAM DDR
- 80 GB (7200 RPM) HDD
- 64 MB VGA
- 1.44 MB Floppy Drive
- 15" PHILIPS Color Monitor
- USB Keyboard
- USB Scroll Mouse +Pad
- 32bit inbuilt Sound
- DVD ROM 16x
- Multimedia Speakers

Rs. 68,500/-

*Speciel Offier*

FREE FREE FREE FREE

Option 01 : power Tree UPS 600VA
Option 02: Monitor 17"
Option 03 : Creative 2 way Sub Woofer with Dust Cover &Screen Filter

**Contact**
Shukoor - 0777 555855
Kumar - 0777 252066
Sathees - 0777 252369

Gigabyte Mother Board 2 years Warranty -Monitor -3 years Warranty Other parts one year Warranty (except Speakers, Keyboard &Mouse)

**PC HOUSE (PVT) LTD**
# 1 k, Stynley Road, Jaffna. Tel :021 2 226671
**Tel /Fax** :021 2 226672 **E-mail** :info @pchouse.lk **Website** :www.pchouse.lk

NUGEGODA - KALUTARA -RATNAPURA - BANDARAWELA - KURUNEGALA - BADULLA - KEGALLE KANDY - ANURADHAPURA - VAVUNIYA - TRINCOMALEE - AMPARA - JAFFNA - GALLE - MATALE NEGOMBO - CHILLAW - BATTICALOA - KALMUNAI - NUWARAELIYA - NITTAMBUWA - MATARA

# புத்தகம் விற்பனைக்கு

Guide to Spelling and Vocabulary (25/-), New Model English Compositions for Grades 3-6 (65/-), English Compositions for Grades 6-11 (65/-) by K.M.Selvaratnam, B.A.(Lond.).

கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம்,
ஸ்ரீலங்கா,
துர்க்கா - சுன்னாகம்.

(39599)(42-11-45)

சினெ யாத்ரா - 2

இன்று



பவுறு வளளு
(சுவர்களுக்குள்)
நேரம் : முற்பகல் 10.00 மணி



அக்னி தாஹய
(அக்கினி தாகம்)
நேரம் : பிற்பகல் 3.00 மணி

யாழ். ப.நோ.கூ.சங்கத்தின் கேட்போர் கூடம்

பிரவேசம் இலவசம்

திரிகோண கலை மையம் Trikone Arts Centre

# சர்வதேசத்தின் காய் நகர்த்தலுக்கு பலியாகப் போகும் இலங்கை

**- நோக்கன் -**

ஜனாதிபதி திருமதி சந்திரிகாவினதும் அவர் சார்ந்துள்ள கட்சிகளின் செயற்பாடுகளை எந்தக் கோணத்தில் இருந்து நோக்கினாலும் தமிழர்கள் மேல் ஒரு கொடிய யுத்தத்தினை திணித்து, அதில் தாங்கள் சுகமாக அரச பீடக் கதிரைகளில் குளிர்காய முயல்வது வெளிப்படையான உண்மை.

இதற்கு முண்டுகொடுத்தாற்போல் இந்தியா, அமெரிக்கா, அதன் தூண்டுதலில் பாகிஸ்தான் போன்ற நாடுகளின் அனுசரணையான செயற்பாடுகள் தமிழர்களின் மனதை கிலிகொள்ளச் செய்துள்ளன. இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்த செயற்பாடுகளில் 95 சதவீதமான செயல் திட்டங்கள் முடிவடைந்துவிட்டன என்றும் ஒப்பந்தம் செய்யும் திகதிகளை இருநாட்டு அரசு தலைமைகளும் தீமானிக்கும் என்று இந்தியப் படைத்தரப்பு தெரிவித்திருந்தது.

இலங்கை மீது எந்தவொரு வெளிச்சக்திகளின் ஆதிக்கம் இருந்தாலும் அது இந்தியாவுக்கு எதிரானதாகவே அமையும். இன்றைய உலகு பொருளாதார நலன்சார்ந்தே நகர்கின்றது. எதிர்கால உலக ஆதிக்கமும் இவற்றை நோக்கியே நகர்கின்றது. நகரும் பொருளாதார சக்கரத்தின் அரசு யார் கையில் உள்ளதோ அந்த நாடே உலக எஜமான் நிலையில் இருக்கும்.

### ஒருவரை ஒருவர் பகைத்துக்கொள்ள விரும்பாத இந்தியா - அமெரிக்கா

தெற்காசியாவில் ஒரு வல்லரசு இந்தியா என்பதற்கு மாற்றுக்கருத்து இல்லை. இந்த நிலையில் தான் அமெரிக்காவும் இந்தியாவை நோக்குகின்றது. அமெரிக்கா வெகு சுலபத்தில் இந்தியாவை பகைத்துக் கொள்ளவிரும்பாது. இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தினை கருதி இலங்கையைத் தனது சரணாகதிக்குள் கொண்டுவர அமெரிக்கா முயல்கிறது. இந்த நிலையிலும் இந்தியாவைப் பகைத்துக்கொண்டு எதுவும் செய்யவிரும்பாது அமெரிக்கா. காரணம் பொருளாதாரம், அரசியல் மற்றும் இராஜதந்திரம் போன்ற பல காரணிகள் பொதிந்துள்ளன. அமெரிக்காவில் உள்ள ஆசிய நாட்டவர்களில் மூன்றாவது இடத்தில் இந்தியா இருந்த போதிலும் பொருளாதாரத்தில் இந்தியர்களே முதலாவது இடத்தைப் பிடித்துள்ளனர். இவர்களின் சராசரி ஆண்டு வருமானம் அமெரிக்கர்களின் வருமானத்திலும் பார்க்க இரண்டு மடங்கு அதிகம் என்று கணிப்பிடப்படுகின்றது. ஒரு தரவின்படி 2லட்சத்து 80 ஆயிரம் ரூபா என அது தெரிவிக்கின்றது.

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை நிபுணரும் ஜர்ஜ் டவுன் பல்கலைக்கழகத்தின் வெளியுறவுத்துறை விரிவுரையாளருமாகிய டாபர்ட் பி.சட்டர் ஒரு நூலின் இந்தியா பற்றி இப்படி விவரிக்கிறார். அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கு மிடையியே பல விடயங்களில் ஒத்த கருத்து இருப்பதாகவும் ஆசியாவில் பல நாடுகள் இராணுவம் பொருளாதாரம் போன்ற விடயங்களில் அமெரிக்காவுடன் நெருக்கத்தை கொண்டிருக்க விரும்புவதாகவும் ஆகையால் அமெரிக்காவின் ஆதிக்க அதிகாரம் ஆசியாவில் நிலவுகின்றது எனவும் -

எனவே, இந்தப் பிராந்தியத்தில் பொருளாதாரத்திலும் இராணுவபலத்திலும் இந்தியா முன்னேறிவருகின்றது. அந்த வகையில் ஆசியாவில் அமெரிக்க ஆதிக்கம் நிலை பெற இந்தியாவுடன் நெருங்கிய உறவுகளை வைத்துக்கொள்வது அவசியம் எனவும் - இவ்வாறே அமெரிக்காவும் விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இவைபோன்ற பலகாரணங்கள் இங்கு புரையோடிப்போய் உள்ளதுடன், இன்னுமொரு விடயத்தையும் கவனத்தில் எடுக்கவேண்டும். அது இந்திய- ரஷ்ய உறவுகள். இவை மீண்டும் புதிப்பிக்கப்பட்டு வருவதோடு புத்துயிர் ஊட்டும் வகையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் இந்தியா வந்திருந்தார்.

ரஷ்யாவும் அமெரிக்காவும் நீண்டகால ஒட்டமுடியாத பகையாளிகள் என்பதும் அதற்கான காரணங்களையும் நாம் அறிவோம்.

பாகிஸ்தான் விடயத்தில் இந்தியாவின் நோக்கம் பகிஸ்தானின் நடவடிக்கைகளினை கட்டுப்படுத்துவதும் அமெரிக்காவுடனான உறவை ஒரு கட்டத்திற்கு மேல் செல்லவிடாமல் தடுப்பதுமே.

### இலங்கை - பாகிஸ்தான் நெருக்கம் எதனைச் சொல்கின்றது?

1971ஆம் ஆண்டு கிழக்குப் பாகிஸ்தானில் இந்தியாவுடன் போர் மூண்டபோது. அமெரிக்காவும் இலங்கையும் இணைந்து பாகிஸ்தான் பக்கம் தமது ஆதரவினை காட்டிநின்றன. இந்த நன்றிக்கடனை பாகிஸ்தான் மறக்கவில்லை. இலங்கைக்கு இன்றும் அது பிரதி உபகாரம் செய்துகொண்டுதான் இருக்கின்றது. புலிகளின் ஓயாத அலைமூலமான யாழ். மீட்பின்போது. இலங்கை இராணுவம் தோல்வியைத் தழுவாமல் இருக்க பெருமளவிலான இராணுவ தளபாட உதவிகளை வழங்கியிருந்தது. கடந்த மாதம் பாகிஸ்தானின் கடற்கலங்கள் இரண்டு கொழும்புக்கு வந்திருந்தபோது. ஆயுத தளபாடங்களினையும் கொண்டுவந்திருந்தன.

கடந்த மாதம் 21ஆம் திகதி இலங்கை வந்த பாகிஸ்தான் பிரதமரும் அவருடன் முக்கிய அமைச்சர்களும், செனட்சபை உறுப்பினர்களும் ஜனாதிபதி சந்திரிக்காவையும் அவரது பரிவாரங்களையும் சந்தித்திருந்தனர். இதன் போது பாகிஸ்தான் - இலங்கைக்கும் இடையே மிக நெருக்கமான இராணுவ ஒத்துழைப்பைப் பேணுவது குறித்தும் ஆயுத தளபாடங்களை கடனுதவி அடிப்படையில் இலங்கைக்கு வழங்குவது குறித்தும் பாகிஸ்தான் பிரதமர் சௌகத்திற்கும் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையே இணக்கம் காணப்பட்டிருக்கின்றது.

### இந்தியா யார் பக்கம்?

இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு எதிராக ஈழத்தில் மட்டுமல்லாது புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களும் எதிர்ப்புக் காட்டிநிற்கின்றனர். இது தொடர்பாக இந்தியாவின் ஒருவிதமௌனப்போக்கு. இந்திய யார் பக்கம் சாயப்போகின்றது என்ற கேள்வி எழுந்துள்ளது. புலிகளும் கடந்தகால நிகழ்வுகளை மறந்து வெளிப்படையாக ஆதரவு கோரியுள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிக்கா சர்வதேச அளவில் பாதுகாப்பு கூட்டுறவு ஒப்பந்தங்களுக்குத் தயாராகிவருகின்றார். இம்மாத இறுதிப் பகுதியில் சந்திரிக்கா தாய்லாந்துடன் பாதுகாப்பு கூட்டுறவு ஒப்பந்தம் தொடர்பாக பேசுவதற்கு அந்த நாட்டு பிரதமர் தக்சின் சின்வதரவை நேரடியாக சந்திக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், அடுத்தமாத முதல் பகுதியில் பங்களாதேஷிற்கும், பாகிஸ்தானுக்கும் அவர் செல்லவுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

இங்கு சந்திரிகா இந்தியாவிற்கு என்ன சொல்ல முயல்கிறார்? இந்தியா என்ன சொல்ல போகின்றது? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

யார் காலில் விழுந்து மண்டியிட்டாவது தமிழர்களின் பலத்தை சிதறடிக்க ஜனாதிபதி சந்திரிகா தயாராகிவிட்டார். உலக நாடுகளும் இலங்கையின் கேந்திரம் மற்றும் வளங்களினை கருத்திற்கொண்டு சிறிலங்காவை ஒரு கடனாளியாக்கி வருகின்றன. ஓயாத அலை காலத்திலேயே மீளமுடியாத அளவு கடன் சுமை சிறிலங்காவை ஏலாவாளி நாடாக்கி அதன் தேசிய வளங்களில் தமது பார்வையை செலுத்துவதே சர்வதேசத்தின் நோக்கம்.

உதாரணமாக அமெரிக்காவிற்கு பாரிய கடனாளியாக இலங்கை உள்ளது. இதனை சாட்டாக வைத்து இலங்கையின் காடுகளை தமது பாதுகாப்பில் அதாவது அமெரிக்காவின் பராமரிப்பிற்குள் கொண்டுவருவது பற்றி பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு அந்நிய நாடுகளின் நலன் சார்ந்த காய் நகர்த்தல்களில் சிக்கியுள்ள இலங்கையின் எதிர்காலம் எங்கேபோய் முடியப் போகின்றது. புலிகளை அழிப்பதற்காக சர்வதேச வலைப்பின்னல் உருவாக்கும் அரசு அது அவர்களையே சிக்கவைக்கும் என்று அறியார்களா? புலிகளை அடக்குவதாயின் சர்வதேச இராணுவ பயிற்சியோ அல்லது இராணுவ தளபாடங்களோ பெருகுவதால் பயன் ஏதும் ஆகப்போவதில்லை.

புலிகளுடன் போரிடத்தான் வேண்டும் என்று அரசு முடிவு எடுத்தால் இராணுவத்தினரின் போரிடும் மன வலிமையை நிலைப்படுத்த ஏதாவது வழிபார்க்கவேண்டும்.

ஏனெனில் ஒப்பந்தங்களால் கிடைக்கும் தளபாடங்கள் தானாக களத்துக்குச் சென்று சண்டைசெய்யாது.

★

# இன்றைய நிகழ்வுகள்

கோண்டாவில்,டிசெ.19

கோண்டாவில் கிழக்கு கலைமகள் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார் கோயில் முன்றிலில் நடைபெறவுள்ளது.

ஆசிரியை திருமதி இராஜேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் கலந்துகொள்வார். (எ-202-49)

★ ★ ★

தென்மராட்சி,டிசெ.19

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு அடுத்த ஆண்டுக்கான பாடத்திட்டம், பாடவிரிவாக்கம் ஆகியவற்றைத் திட்டப்படுத்தலுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (எ-117-202)

★ ★ ★

குருநகர்,டிசெ.19

குருநகர் - திருகர் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட சமாதானக் குழுக்களின் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இரு பகுதிகளையும் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் அருட்தந்தையர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-51-202)

★ ★ ★

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆளணியினருக்கான பாடசாலை மட்டத் திட்டமிடல் செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே, அறிவிக்கப்பட்டபடி இல்லாது சகல பாடசாலை ஆளணியினருக்கும் இன்றைய தினமே இச்செயலமர்வு நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-117-202)

★ ★ ★

தென்மராட்சி,டிசெ.19

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களுக்கான சத்துணவு மா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் வைத்து வழங்கப்படுமென அதிபர்கள் அறிவித்துள்ளனர்.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்களுக்கும் சத்துணவு மா வழங்கப்படவுள்ளது. (எ-117-202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.19

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்தும் கலாசார நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளது. (எ-190)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.19

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பெண் தலைமைத்துக் குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான நிதிசேகரிக்கும் முகமாக தே.தேவானந்தின் நெறியாள்கையில் உருவான 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' என்னும் நாடகம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கும் இரண்டு காட்சிகளாக மேடையேற்றப்படவுள்ளது. (எ-190)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.19

சில்லாலை, வேளாங்கன்னி மாதா சமாதானக் குழுவின் ஒளிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமாதானக் குழுத் தலைவி கின்ஷா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக கியுடெக் நிறுவன இயக்குநர் கி.ஜெயக்குமார் கலந்துகொள்வார். (எ-190)

★ ★ ★

வரணி,டிசெ.19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரித் தொகுதி ஆதவாளர்களுக்கான கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இராமலிங்கம் வீதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சமகால அரசியல் நிலைமை, பிரதேச அபிவிருத்தி உட்படப் பல விடயங்கள் கலந்துரையாடப்படுமென யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் அறிவித்துள்ளார். (எ-170-117-202-31)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.19

அன்னையர் முன்னணியின் விசேட கலந்துரையாடலொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் யாழ்.முனியப்பர் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியைச் சந்திப்பது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவிடம் கடிதம் கையளித்த விடயம் தொடர்பாக விரிவாக ஆராயப்படும் எனக் கூறப்பட்டது. (எ-203)

★ ★ ★

தென்மராட்சி,டிசெ.19

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மிருசுவில் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை மிருசுவில் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கழக மருத்துவர்களும் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்களும் பரிசோதனைகளை மேற்கொள்ளும் இம்மருத்துவ முகாமில் மிருசுவில் வடக்கு, தவசிக்குளம், மிருசுவில் தெற்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு, உசன், கெற்பேலி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கலந்து பயன்பெறலாம் என லயன்ஸ் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (எ-117-202)

★ ★ ★

வலி.தென்மேற்கு,டிசெ.19

சுகாதாரக் கல்வி ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன் எழுதிய பாலர் பராமரிப்பு நூலின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி அரசோலை விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடப் பேராசிரியர் டாக்டர் தயா சோமசுந்தரம் கலந்துகொள்வார்.

வாழ்த்துரையை யாழ்.சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரமும் நூல் வெளியீட்டுரையை உலக சுகாதார நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அபிவிருத்தி ஆலோசகர் டாக்டர் என். சிவராசாவும் நூல் விமர்சனத்தை யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறைப் பேராசிரியர் சபா.ஜெயராசா, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் க.தேவராசா, ஆகியோரும் நிகழ்த்துவர். (எ-135-202)

★ ★ ★

குடத்தனை,டிசெ.19

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவு தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'நலம்தரும் நம்பிக்கை' என்னும் தலைப்பில் கவிமாமணி காரை.எம்.பி.அருளானந்தம் சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவைத் தொடர்ந்து ஆச்சிரமத்தின் முதல் வெளியீடான 'பாவை நோன்பு' என்னும் இலவச நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (எ-78-202)

# தமிழர் போராட்ட...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இன்று அவ்வாறன நிலைமை இல்லை. காலம் கடந்துள்ளபோதிலும் கூட நாட்டில் பல தசாப்தங்காளக நிலவிவரும் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படவேண்டும் அதன் மூலம்தான் தமிழ் - சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழ முடியும் அதற்கான வழி மக்களிடம் உண்டு என்றார்.

அவர் கூறியவற்றிலிருந்து தமிழர்களின் போராட்டத்தின் நியாயத்தை ஏற்றுக் கொண்டுள்ளார் என்பது அங்குள்வர்களுக்கு நன்கு புரிந்திருக்கும்.

அதேபோலவே அங்கு உரையாற்றிய சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் உரிய உரிமை வழங்கப்படவேண்டும் என்றும் -

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரால்தான் சமாதான நிலைமை மோசமடைகின்றது. அவர்களை தமிழ் மக்கள் வீட்டிற்கு அனுப்பிவைக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை என்று உணர்ச்சிததும்ப மொழிந்தார்.

இதனைக் கேட்ட சிங்கள சமூகத்தினர் அவரைத் தனியே கூட்டிச் சென்று கோபத்துடன் வெருட்டியபோதும், தான் தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டே இவ்வாறு கூறினேன் - என்றார்.

அப்பொழுதுதான் கல்லுக்குள்ளும் ஈரம் உண்டு என்பது போல சிங்களவர்களுக்குள்ளும் எமது நியாயத்தை ஏற்றுக்கொள்பவர்கள் இருக்கின்றார்கள் என்ற உண்மை எங்களுக்குப் புரிந்தது. ★

## கரபந்தாட்டச் சங்கப் பொதுக்கூட்டம்

வடமாகாண கரபந்தாட்ட நடுவர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ்.மத்திய கல லூரியில் நடைபெறவிருக்கின்றது.

இது தொடர்பாக கடந்த வெள்ளியன்று உதயனின் 8ஆம் பக்கத்தில் வெளியான செய்தியில் சங்கத்தின் பெயர் 'யாழ்.மாவட்ட கரபந்தாட்ட சங்க மத்தியஸ்தங்களுக்கான விசேட பொதுக்கூட்டம்' என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. வடமாகாண கரபந்தாட்ட நடுவர் சங்கம் என்பதே சரியான பெயர் என்று சங்கத்தின் தலைவர் க.யதுகுலசிங் அறிவித்துள்ளார்.

இன்றைய பொதுக்கூட்டத்தில் யாப்பு அங்கீகாரம், நிர்வாகசபை விரிவாக்கம் என்பனவும் இடம்பெறவுள்ளன. (ஐ)


கையிருப்பைக் குறைக்கும் நோக்குடன்
**மலிவு விற்பனை**
5/= தொடக்கம் 50/= வரையில் புத்தகங்கள்

அப்பியாசப் புத்தகங்கள்

1 கட்டு 4.75
2 கட்டு 9.25
3 கட்டு 13.75
4 கட்டு 18.25
5 கட்டு 22.50

விலையில் றிச்சாட், அந்திவானம் பதிப்பகங்களின் அப்பியாசப் புத்தகங்களும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(சி39700) (24-14-17-26)


## கடற்புலி லெப். கேணல் மறவன் மாஸ்ரருக்கு வீரவணக்கம்



தாழையில் ஸ்ரனியாய் உதித்தாய்
பாசையூரில் ஸ்ரனியாய் பந்தாடினாய்
விடுதலைக்காய் மண்ணின் மறவனானாய்
தமிழீழ மக்களின் மனதில் மறவன் மாஸ்ரர் ஆனாய்
இன்று லெப்ரினன் கேணலாய் தமிழீழ மண்ணில்
வித்தானாய்
தமிழீழ மண் கலங்குகின்றதே ஐயா!

கடற்புலி லெப். கேணல்
**மறவன் மாஸ்ரர்**
(முன்னாள் உதைபந்தாட்ட வீரர் - பாசையூர் அந்தோனியார் விளையாட்டுக்கழகம்)

தோற்றம் 06-12-1936
மறைவு 11-12-2004

பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகம்.
(39822)(26-14-17-26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 17 - 03 - 1932
உதிர்வு 19 - 11 - 2004



**அமரர் வல்லிபுரம் கிருஷ்ணசாமி**
(உரிமையாளர், விநாயகர் மோட்டார் வேர்க்ஸ், மீனாட்சி அம்மன் கோயிலடி, சங்கத்தானை, சாவகச்சேரி)

சாவை நகர் பெற்றெடுத்த தொழில்நுட்பனாய்
தரணியெலாம் புகழ்பேசும் தகைமை பெற்றீர்!
உற்றாரை மற்றாரை வாழ வைத்தே
மறைந்திரோ நாமிங்கு மறவா நிற்போம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் தற்காலிக இல்லத்தில் இன்று (19-12-2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்வதோடு, மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமக்கு அனுதாபந்தெரிவித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், இந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி: "கோகுலம்",
காளிகோயிலடி, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

- குடும்பத்தினர்.
(39835)(26-14-17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 11 - 1930
மறைவு 31 - 12 - 2003



**கோவிந்தபிள்ளை சுப்பிரமணியம்**
(பரந்தன் இரசாயனப் பொருள்கள் கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்)

அன்பின் திருவுருவே!
பாசத்தின் உறைவிடமே!
குடும்பத்தை வழி நடத்திய தந்தையே!
எம்மையெல்லாம் வாழவைத்த தெய்வமே!
எமைப் பிரிந்து ஓராண்டு கழிந்தாலும்
சோகம் இன்னும் ஆறவில்லை!
ஆறிவிடும் காயம் இல்லை
அப்பா உங்களின் மறைவு!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

443/19, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(39824)(26-14-17) குடும்பத்தினர்.

## கரோல் நிகழ்வு

வலி.தென்மேற்கு,டிசெ.19

தென்னிந்திய திருச்சபையின் யாழ்.அத்தியட்சாதீனத்தின் பண்டத்தரிப்பு திருச்சபையினால் நடத்தப்படும் வருடாந்த கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. திருச்சபை ஆலயத்தில் அன்று நடைபெறும் வழிபாட்டை அடுத்து கரோல் குழுவினர் பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, சித்தன்கேணி ஆகிய இடஙகளுக்குச் சென்று வீட்டுத் தரிசிப்பு நிகழ்வை மேற்கொள்வார்கள் என்று பண்டத்தரிப்பு திருச்சபைக் குரு அருட்திரு. வி.பத்மதயாளன் தெரிவித்தார். (8-135)

## ஆழியவளையில் அரச காணி பகிர்ந்தளிப்பு

வடமராட்சி,டிசெ.19

வடமராட்சி கிழக்கில் உள்ள ஆழியவளைக் கிராமத்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான காணிகள் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த காணியற்றோர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

இப்பகுதியில் உள்ள காணிகள் ஏற்கனவே அடைப்பனவு செய்யப்பட்டு காணித் துண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு பிரிக்கப்பட்ட காணித் துண்டங்களே தற்போது காணியற்றோருக்கு வழங்கப் படவுள்ளன. (எ-173)

## நடமாடும் மருத்துவ சேவைக்கு ஏற்பாடு

வடமராட்சி,டிசெ.19

வடமராட்சிப் பிரதேசத்தில் வைத்தியசாலை வசதிகள் இல்லாத கிராமங்களில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் நடமாடும் மருத்துவ சேவைப் பிரிவு வைத்திய சேவைகளை வழங்க முன்வந்துள்ளது.

வடமராட்சியில் உள்ள கற்கோவளம், புனித நகர், அல்வாய் வடக்கு, தொண்டைமானாறு ஆகிய கிராமங்களில் நடமாடும் வைத்திய சேவைப்பிரிவு வைத்திய சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இச்சேவையின்போது அந்தந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மாத்திரமின்றி ஏனையோரும் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-173)

## சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.19

கிறிஸ்மஸ் புதுவருடத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும் 26ஆம் திகதியும் அனைத்துச் சிகை ஒப்பனை நிலையங்களையும் திறக்குமாறும் -

எதிர்வரும் முதலாம் திகதிவரை நேரக் கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது என்றும் -

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் அறிவித்துள்ளது. (எ-202)

## கல்வி டிப்ளோமா பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.19

பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் கல்வியியல் மாணி மற்றும் கல்வி டிப்ளோமா பரீட்சைகள் நாளை திங்கட்கிழமையும் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தில் கற்கைநெறிகளை மேற்கொள்ள மாணவர்கள் பரீட்சை அனுமதி அட்டை, நேர அட்டவணை என்பவற்றை உயர்பட்டப்படிப்புகள் பீடப் பீடாதிபதி அலுவலகத்திலும் -

வவுனியா வளாகத்தில் கற்கை நெறிகளை மேற்கொள்ளும் மாணவர்கள் வவுனியா வளாக வியாபாரக் கற்கைகள் பீடப் பீடாதிபதி அலுவலகத்திலும் - பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடம் அறிவித்துள்ளது. (எ-202)

## தமிழறிவுப் போட்டியின் பரிசில் வழங்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.19

அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலைய நூலக நுண்கலை பயிற்சியாளர்கள் அரங்கேறமும் நல்லொழுக்க தமிழறிவுப் போட்டியின் பரிசில் வழங்கல் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30மணிக்கு அல்வாய் பாரதிதாசன் நூலகத்தில் நடைபெறவுள்ளன.

பாரதிதாசன் நூலகத் தலைவர் கி.நடராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும் கௌரவவிருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.பொன்னம்பலம் கஜேந்திரகுமார், கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன், பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார், யாழ்.போரூட்திட்ட அலுவலர் நா.கோகுலதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (எ-202)


**தேவை**
தையல் வேலை தெரிந்த
ஆண்கள் தேவை.
தொடர்பு: 0777111486
021 222 3092
(39794)



**பண்டிகைக்கேற்ற பட்டாசுகள்!** சம்பியன்
இப்பொழுது விற்பனையாகின்றன!
☆ சம்பியன் வெடிகள் ☆ சம்பியன் பூந்திரிகள்
☆ சம்பியன் சக்கர வாணம் ☆ சம்பியன் ஈர்க்குவாணம்
☆ சம்பியன் கோர்வை வெடி ☆ சம்பியன் மத்தாப்பு
மற்றும் பல
உங்கள் பண்டிகைக் கொண்டாட்டங்கள் மகிழ்ச்சியில் திளைக்க உங்களுக்காகவே தயாரிக்கப்பட்டவை.
மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
விநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 2567
குறிப்பு: மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு வான் மூலம் இலவச விநியோகம் செய்யப்படும். (சி-39813)(26-14-17)


## Public Meeting
## "Whither the Peace Process?"

Speakers

**Dr.Lakshman Marasinghe**
Member of the Constitutional Affairs Committee,
and
Director - Legal, The Peace Secretariat

**Prof. Ranjith Amarasinghe**
Dept. of Political Science, University of Peradeniya

Followed by
'ஓதுக்காதி ஓதுக்கன்' (Othukkathi Otukkan)
A musical street play on the issue of Conflict and its Transformation

Venue: Navalar Cultural Hall, Anaipanthy
Date & Time: December 19, Sunday 2004
4.00 - 6.00 p.m.
All are Welcome!
Viluthu, Centre for Human Resource Development
(C-39832)(26-14-17)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சிதம்பரநாதன்



மாதகலைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற தபாலதிபர் சிதம்பரநாதன் 17-12-2004 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இராசமணி தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சுந்தரம் தம்பதியினரின் மருமகனும் தியாகேஸ்வரியின் அன்புக் கணவரும் பரணீதரன் (பொறியியலாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்), சிறிகரன் (கணனி விஞ்ஞானபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மநாதன் (கணக்காளர், CIBC கனடா), யோகேந்திரராணி (ஆசிரியை, கொ/ மத்திய இந்து வித்தியாலயம்), இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கதிரமலை ஜெகஜோதி (கனடா), பற்குணராசா (ஓய்வுபெற்ற போமன், அஸ்பெஸ்ரஸ் சீமெந்து கூட்டுததாபனம் - இரத்மலானை), பரமானந்தன் (பெஷன் ஹவுஸ், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற புவனேஸ்வரி, கணேஸ்வரி, மருதலிங்கம், பாலசிங்கம் (சவூதி) ஆகியோரின் மைத்துனரும் மங்களேஸ்வரி, ராணிமலர், காலஞ்சென்ற கமலநாதன் (ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழை கோட்டக் கல்வி வலயம்), சிவஸ்ரீ சபாரத்தினசிவம் (நவாலி நாச்சிமார் தேவஸ்தானம்), பத்மலோஜினி, ரேவதி (நீர்ப் பாசனத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகலனும் காயத்திரி, பத்மகௌரி, சண்முகப்பிரியா (பல்கலைக் கழகம் - கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் முருகானந்தன் (மஸ்கென்ஸ் லிமிட்டெட், இரத்மலானை), பங்கஜவதனி (ஆசிரியை, பெரியமடு மகாவித்தியாலயம்), தமிழழகி (ஆசிரியை, உடுவில் அமெரிக்கமிஷன் கலவன் பாடசாலை), பிரதீப்குமார், சவீதரன், பிரியா, சாளினி, சாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20-12-2004) திங்கட் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

டச்சு வீதி,
இருபாலை.
T.P.: 021 - 222 5901
0777 - 036696
077 - 6602049

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(39821)(26-14-17)

## திருமதி விமலாதேவி முத்துவேற்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியை - மானிப்பாய் இந்துக்கல்லூரி)



மானிப்பாய் இந்துக்கல்லூரி முன்னாள் ஆசிரியை திருமதி விமலாதேவி முத்துவேற்பிள்ளை அவர்கள் கடந்த 07-12-2004 அன்று கனடா Toronto நகரில் காலமானார்.

அன்னார் மானிப்பாய் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் முத்துவேற்பிள்ளையின் மனைவியும் நடேசன், மாலதி, ஜெகதீசன், விமலேசன் ஆகியோரின் தாயாரும் நகுலேஸ்வரன், பரம், வசந்தி ஆகியோரின் மாமியாரும் சிவா, உமா, காங்கேயன், கல்யாணி, செல்வி ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09-12-2004 அன்று Toronto நகரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

90, CARILNG WOOD COURT,
SCARBORUGH, ONTARIO - MIS -
4RP. CANADA.
PHONE: 001 416 298 5934
E.mail: m-vimalesan @ yahoo. com

தகவல்:
மு.விமலேசன்.
(சி-39828)(26-14-17)

# கண்ணீர் அஞ்சலி





| இராசேந்திரம் சுரேஸ் | | சடாசிவம் குமரன் |
|---|---|---|
| 19.11.1984 | மலர்வு | 25.05.1984 |
| 19.11.2004 | உதிர்வு | 19.11.2004 |

**அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.**

ஆதிகோவிலடி வாழ் மக்கள்,
ஆதிசக்தி விளையாட்டுக்கழகம்,
வல்வெட்டித்துறை.

(39834)(48-18-15)

# 41 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பூமியின் மடியில்
21 - 08 - 1985



சாமியின் அடியில்
09 - 11 - 2004

## செல்வன் இரத்தினசிங்கம் பிரபா

(ஊரெழு கணேச வித்தியாசாலை பழைய மாணவன்)

நிஜமோ அன்று கலைந்ததடா – எம்
நிம்மதியோ இன்று தொலைந்ததடா
நித்திரையோ கண்ணில் உலைந்ததடா – உன்
நினைவோ எம்மில் அலைந்ததடா!

அமரர் இரத்தினசிங்கம் பிரபாவின் மறைவுச் செய்திகேட்டு எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (19.12.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம். (39840)(48-18-15) -குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## விஸ்வநாதன் நற்குணநாதன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கண்டியை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற முன்னாள் Ceylon Tobacco Company நிர்வாக அதிகாரி விஸ்வநாதன் நற்குணநாதன் அவர்கள் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஸ்காபரோவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வநாதன் - தங்கரட்ணம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான வைத்தியர் பாலசிங்கம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் தணிகைமணியின் பாசமிகு கணவரும் அமெரிக்காவைச் சேர்ந்த சிவதரன், இராஜிகா, இராதிகா (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையும் மக்ஸ் (Max), நிரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிகேஷின் அன்பு பாட்டனாரும் நாகேஸ்வரி, ஜெகதீஸ்வரி, இராஜேஸ்வரி, பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி கனடாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

416-615-2503
65,Delwood Drive, Toronto
Ontario, MIL,2S8, Canada.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(39848)(48-18-156)

## திருமதி கண்மணி சின்னத்துரை



உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி சின்னத்துரை அவர்கள் நேற்று (18.12.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் திருலோகநாதன், திருச்செல்வம் (U.D.A - பணிப்பாளர், கொழும்பு), திருவைகுந்தநாதன் (ஆசிரியர் - வவுனியா தமிழ் ம.ம.வித்தியாலயம்), ஸ்ரீ ரங்கநாதன், காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் இராஜசுலோசனா ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலபாக்கியம், யேன்கிறிஸ்ரின், ரஜனி, கில்டா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.12.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில்கிழக்கு,*
*உடுவில்.* (39856)(48-18-15)

தகவல்:
பிள்ளைகள்.

# டிராக்டரிலிருந்து தவறிவீழ்ந்து சிறுவன் நசியுண்டு மரணம்

## வட்டக்கச்சியில் பரிதாபம்!

வட்டக்கச்சி,டிசெ.19

ஓடிக்கொண்டிருந்த டிராக்டரிலிருந்து தவறி வீழ்ந்த சிறுவன் ஒருவன் அதன் சில்லுக்குள் நசியுண்டு பரிதாபகரமாக உயிரிழந்தான்.

கிளிநொச்சி மாவட்டம் வட்டக்கச்சி, கல்மடு நகர் 7 ஆம் யுனிற்றில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்தவரான நாகேஸ்வரன் ஆதீசன் (வயது 13) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான்.

டிராக்டரின் பின்சில்லு சிறுவனின் தலைக்கு மேலால் ஏறியதாகவும் - இதனால் தலை நசியுண்டு படுகாயமடைந்த பிரஸ்தாப சிறுவனை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப் பட்டவேளை இடைவழியில் அவனது உயிர் பிரிந்தது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாகத் தமிழீழக் காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டனர். விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4-405-381)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட் - யாழ்ப்பாணம்
வணிகக்கல்வி
மீட்டல் வகுப்பு - 2005, DAY
பகுதி II - முகாமைத்துவம்
திங்கள், செவ்., புதன்,
வியா., வெள்ளி
7-8 (ப.நே.)
BY: V.முரளி B.B.A (F.m.Spl.)
(39847) (38.18.15)

# துயர் பகிர்கின்றோம்

*எமது கல்லூரியின் பழைய மாணவனும் பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவரும் தெல்லிப்பழைப் பிரிவு முன்னாள் உதவி அரச அதிபருமான*

## V.இராசையா

அவர்களின் மறைவு குறித்துத் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை,
சுன்னாகம். (39799)(24-18-15-38)

அதிபர்,
ஆசிரியர்கள்.

THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆங்கில இலக்கணம், தமிழ், ஆங்கில மூலம் வகுப்புகள்.
By: விக்னேஸ்வரன் ஆச்சாரி Dip./cer in English and Science (London) (39843)
426(382), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (காலை வகுப்புகள்)

லக்சுமி சினிமா இணுவில்
6 ஆவது வெற்றிவாரமாக
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
சிம்பு (இருவேடம்),
ஜோதிகா, கவுண்டமணி நடிப்பில்
தினசரி: 4 காட்சிகள்
11.00, 3.00,
7.00, 10.00
மன்மதன்
புதிய நேரம்
அடுத்த வெளியீடு ட்றீம்ஸ்
(39283)



ராஜா யாழ்ப்பாணம்
20 வரை ★சரத்குமார் ★வடிவேல்
★நிதிகா நடித்த
சத்ரபதி
காட்சிநேரம்: 10.30,
2.30, 6.30, 9.30 (பி.நே.)
21 முதல் சிம்பு, ஜோதிகா
நடித்த மன்மதன்



நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது.
காட்சி நேரம்:
10.30, 2.30,
6.30 (பி.நே.)
பிரசன்னா, நவ்யா, பிரகாஸ்ராஜ் நடித்த
அழகிய தீயே (ரீல்ஸ்)
தினசரி இரவு: 9.00 (பி.நே.) மட்டும்
THE MUMMY RETURNS ஆங்கிலப்படம்
விரைவில் THE PASSION OF THE CHRIST (இயேசு தேவரின் வாழ்வில் இறுதி 12 மணி நேரக்கதை)
(சி-39821)

நிரஞ்சனாஸ் சங்கானை
ஸ்ரீகாந், ஸ்நேகா நடிப்பில் காட்சி நேரம்:
11.00, 2.45,
6.00 (பி.நே.)
போஸ் (ரீல்ஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே.) URASSIC PARK - 3



நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
❑ அர்ஜீன் (இருவேடம்) ❑ சாயாசிங்
❑ லைலா ❑ வடிவேல் நடித்த
ஜெய் சூர்யா
தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பி.நே.)
முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா,
யாழ்ப்பாணம் 326,K.K.S. றோட், யாழ்ப்பாணம்.



# மரண அறிவித்தல்கள்

## கிருட்டிணர் சிவபாலசுப்பிரமணியம்



வரணி, கரம்பைக் குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருட்டிணர் சிவபாலசுப்பிரமணியம் அவர்கள் 16.12.2004 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கிருட்டிணர் - சின்னாச்சிப்பிள்ளையின் கனிஷ்ட புத்திரனும் சிதம்பரநாதர் - மீனாட்சியின் அன்பு மருமகனும் யோகராணி (துபாலகம், கொடிகாமம்), யோகேஸ்வரன் (பிரானஸ்), யோகலிங்கம் (பிரான்ஸ்), யோகேந்திரன் (பிரான்ஸ்), யோகேஸ்வரி (பிரான்ஸ்), ஜெயமளா, ஜெயகரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வல்லிபுரநாதன் (ஆசிரியர், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்), சர்மிளா (பிரான்ஸ்), மேகேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் துவாரகா, துஜாரகா, துளசிகா, விதுஜன் ஆகியோரின் பேரனும் முருகேசு, கணேசபாலேந்திரன் ஆகியோரின் சகோதரனும் பாறுபதிப்பிள்ளை, கதிர்காமராசா, சிவராசா, செல்வராசா (சாரதி, நில அளவைத்திணைக்களம், யாழ்ப்பாணம்), யோகராசா (பிரான்ஸ்), நடராசா (புகையிரதத்திணைக்களம்), காலஞ்சென்ற சிவானந்தராசா மற்றும் பார்வதிதேவி ஆகியோரின் மைத்துனரும் பவானி, நிஜாந்தினி, ஜனனி ஆகியோரின் பெரியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2004) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொடிக்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரம்பைக் குறிச்சி,*
*வரணி.*
(39837)(48-18-15)

தகவல்:
திருமதி மனோன்மணி (மனைவி),
பிள்ளைகள், வல்லிபுரநாதன்
(மருமகன்).

## சின்னத்துரை தருமராசா

வீமன்காமம், தெல்லிப்பழையைச் சேர்ந்த சின்னத்துரை தருமராசா 17.12.2004 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னத்துரை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி இராமநாதன் தம்பதிகளின் மருமகனும் மித்திராவின் அன்புக் கணவரும் உலகேஸ்வரி, பாலச்சந்திரன், லோகேந்திரன், இராசேஸ்வரன், கருணேஸ்வரி, குகதாசன், ரகுநாதன், நவறஞ்சன் ஆகியோரின் சகோதரரும் நகுலேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற பஞ்சநாதன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் இராஜராஜேஸ்வரிதேவி, இராமேஸ்வரிதேவி (அனுசா), கிருபானந்தகுமாரி (கிருபா), காலஞ்சென்ற குணரத்திரம் மற்றும் குமாரவேலு, வாசுகி, ராஜினிதேவி, வசந்தகுமார், கௌசலா, ஜெயா, ஞானகுமாரி (கிளி) ஆகியோரின் மைத்துனரும் இராஜகுலசிங்கம், லவனேஸ்வரன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, 3 மணியளவில் பூதவுடல் கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P.No. *2674910* (39849)(48-18-15)

தகவல்:
மனைவி (மித்திரா).

## திருமதி இரத்தினம் குணேஸ்வரி

ஊரிக்காடு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் குணேஸ்வரி அவர்கள் நேற்று (18.12.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கட்டட ஒப்பந்தகாரர் சி.இரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும் ஈஸ்வரி, புனிதவதி, ரகுபதி (ஸ்ரீ கோணேஸ்வரா புத்தகசாலை உரிமையாளர்), ஈஸ்வரன் (ஜேர்மனி), வரதராசா (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் ஜெயராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2004) ஞாயிற்றுக்கிழமை கல்லூரி வீதி, சங்கத்தானையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.11.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி வீதி,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.* (39845)(48-18-15)

தகவல்:
குடும்பத்தினர்.
T.P.:0777 244281

## துரையப்பா சிவகுரு

(உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாய்)



உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட துரையப்பா சிவகுரு அவர்கள் நேற்று (18.12.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - அனாசிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற கறுவல் நாகமுத்துவின் மருமகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் இராசமணி, பாக்கியம் (கனடா), அருளம்மா, தங்கமணி, காலஞ்சென்ற இராசு, மேரிபவளம், துரைசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மலிங்கம், ஜெயநாயகி, செல்வநாயகம் (சுவீடன்), பரராஜசிங்கம், தவமலர், நாகேஸ்வரி, நாகதேவி (பெல்ஜியம்), நல்லசிவம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌரிதேவி, ரத்தினம், ராணிமலர் (சுவீடன்), கமலேஸ்வரி, ஜீவகுலநாதன், கனகநாயகம், ராஜேந்திரம் (பெல்ஜியம்), அம்பிகாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜமுகன்,கேதீஸ்வரன், கோபிலேஸ்வரன், எழினி, கஜீபன், கல்ப்பனா, கதிர்மதி, குகஜீவன், சுதாஜினி, சுவின்சிகா, றெஜினோல்ட், கனூட்டன், டிலக்சன், டிவரன், வர்ணன், ஜீவர்னா, ஜிவர்ணன், டஜோனி, ஜவாகர், கிளானி, றோயல், பிரணவி, பிரவீன் ஆகியோரின் அன்புப் பேரனும் டலன்சியாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் தெற்கு,*
*புதுமடம்,*
*மானிப்பாய்.* (39833)(48-18-15)

தகவல்:
சி.நல்லசிவம்
(மகன் - சுவிஸ்)
T.P.: 0041 416205276

# 'உதயன்' ஊழியர் அகால மரணம்

யாழ்ப்பாணம், டிசெ.19

'உதயன்' நிறுவனத்தின் ஒப்புநோக்குநர் பிரிவில் கடந்த மூன்று ஆண்டுகளாக ஒப்புநோக்குநராகக் கடமை யாற்றிவந்த மகாதேவன் சதீஸ் (வயது-26) நேற்று அகாலமரணமானார்.

மண்டைதீவைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் கொக்குவில் கிழக்கு, நந்தாவில் பகுதியில் வசித்துவந்தார். இவர் நேற்று முற்பகல் தனது வீட்டில் உள்ள கிணற்றின் கட்டுமீது நின்றவாறு மரக்கிளை ஒன்றைத் தறித்துக் கொண்டிருந்த சமயம் தவறிக் கிணற்றில் வீழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

வெட்டிய மரக்கிளை திடீரென முறிந்து சாய்ந்ததாலேயே இவர் கிணற்றினுள் வீழ்ந்தார் என்று கூறப்படுகிறது.

'உதயன்' ஒப்புநோக்குநர் பிரிவில் பயிற்சியாளராக இணைந்துகொண்ட இவர் மிகுந்த சுறுசுறுப்புடனும் ஊக்கத்துடனும் பணியாற்றிவந்தார்.

இவரது இறுதிச் சடங்குகள் நந்தாவிலில் உள்ள இல்லத்தில் நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

(ஐ-4-6)



## மல்வத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கதிர்காமம் கிரி விகாரையில் நேற்று இடம் பெற்ற சமய வைபவமொன்றில் உரையாற்றும் போதே மகாநாயக்கர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்:-

அரசின் தற்போதைய முயற்சிக்கு மகாசங்கமும் பங்களிப்புச் செய்வதுடன், இது தொடர்பாக ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் தாங்கள் விளக்கிக் கூறியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(4-12)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினர்கள் சிலர் இவ்வாரம் தமிழ்நாட்டுக்குச் செல்லவிருக்கின்றனர்.

பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருந்தபோதிலும் அரசுக்குள் ஏற்பட்டிருக்கின்ற இழுபறி நிலைமைகளினால் சமாதான முயற்சிகள் தடைப்பட்டுப் போயிருக்கின்றமை தொடர்பாக இவர்கள் தமிழகத் தலைவர்களுக்கு விளக்குவர் என்று தெரிவிக்கப்பட்டது.

(4)

## கோதுமை மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று யாழ். செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் பேக்கறி உரிமையாளர் சங்கம், பேக்கறி கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கோதுமை மா விநியோகிக்கும் முகவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

1997ஆம் ஆண்டு முதல் உணவுப் பொருள்கள் பகிரங்கச் சந்தை முறை மூலமே விநியோகிக்கப்பட்டு வருவதால், உணவுப் பொருள் விநியோகத்தில் செயலகம் தலையிடவில்லை என்றும் -

தற்சமயம் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலை உருவாகியுள்ளதால் இவ் விடயத்தில் தலையிடவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்றும் - அரச அதிபர் அங்கு தெரிவித்தார்.

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி செயலகத்துக்கும் புனர்வாழ்வு அமைச்சுக்கும் தகவல் அனுப்பி தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

(ஐ-3)

## பண்டாரவளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

இந்த மண்சரிவின் காரணமாக வலைப்பனைப் பகுதியில் அநேகமான பாதைகள், வீடுகள் மற்றும் நெல்வயல்கள் என்பன சேதத்துக்குள்ளாகியிருக்கின்றன.

வலைப்பனையிலிருந்து அதிகாரிகமவிற்கூடாக ராகலைக்கும் கண்டிக்குமான பிரதான வீதிகள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் உள்ளன.

இந்தப் பகுதிகளுக்கான மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-12)

## இந்தியாவிடம் தனது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யவர்களும் அரசும் முன்னேற்பாடான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

அமரர் வண. கங்கொடவெவ சோமதேரரின் ஓராண்டு நினைவு தினத்தன்று இந்த நிகழ்ச்சி ஏற்பாடானது. அதனையே நாம் கண்டித்தோம். ஆனால், குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கும் அதனோடு, தொடர்புபட்ட போராட்டங்களுக்கும் எமது அமைப்புக்கும் எந்தவித தொடர்பும் இருக்கவில்லை என்றும் ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

(ஐ-3)

## பௌத்த பிக்குகளை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்படுத்துவதற்கு அரசு முயல்கின்றது என்றும் ஹெல உறுமய தெரிவித்திருக்கின்றது.

புத்தசாசன ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஆலோசனைச்சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

அக் கூட்டத்தில் உரையாற்றிய பௌத்த சாசன அமைச்சர் ரத்னசிறி விக்கிரம நாயக்க, அரசு இப் பௌத்த சாசன ஆணைக்குழுவின் அறிக்கையை மிக விரைவில் நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் வண. எல்லாவல மெத்தானந்த தேரர் இது தொடர்பாக கருத்துத்தெரிவிக்கையில் கடந்த தேர்தல் பிரசார காலத்தில் இவ் அறிக்கையை நடைமுறைப்படுத்துமாறு தாம் வேண்டிக் கொண்ட போதும் அப்போது நடைமுறைப் படுத்தப்படவில்லை. இப்போது பௌத்த பிக்குகளை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதினின்றும் வெளியேற்றும் நோக்கத்துடன் அரசு அம்முயற்சியில் ஈடுபட முனைகிறது.

பௌத்த சாசனம் ஆட்சியாளர்களால் உரிய வகையில் பாதுகாக்கப்படாமையினாலேயே நாம் அரசியலில் ஈடுபடுவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டோம் .

அரசு பௌத்த சாசன ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக செயற்படுத்துவதன் மூலம் பௌத்த மதத்தை காப்பாற்ற சிரத்தை எடுக்குமானால் நாம் அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொள்ளத் தயாராயுள்ளோம் என்று தெரிவித்தார்.

(4)

## களுவங்கேணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது வீட்டுக்கு வந்த சிலர் அவரது பெயரைக்கூறி அழைத்தனர் என்றும் -

வெளியே வைத்து அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த மரணம் குறித்துப் பதில் நீதிவான் வினோபா இந்திரன் மரணவிசாரணை நடத்திக் கொலை எனத் தீர்ப்பு வழங்கினார்.(3)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலைமுதல் இரவு வரை உதவிப்பொருள்கள் சேகரிக்கும் பணி இடம்பெற்றது.

தமிழ் எம்.பிக்களான எம்.கே.சிவாஜிலிங்கம், தி.மகேஸ்வரன், பெ.இராதாகிருஷ்ணன் ஆகியோர் இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

மலையகத்தில் மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் பொருள் சேகரிக்கும் பணியில்நேற்று ஈடுபட்டிருந்தார்.

கொழும்பு, மலையகம், திருகோணமலை ஆகிய இடங்களில் சேகரிக்கப்பட்ட உதவிப் பொருள்கள் இன்று ஒன்றாக எடுத்துச்செல்லப்படவிருக்கின்றன. (3)

## புலிகளின் யோசனையைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாதங்கள் இடம்பெற்றன என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சமாதான முயற்சிகளின் முட்டுக்கட்டை நிலையை நீக்க புலிகளின் யோசனைகளைப் பரிசீலிப்பது அவசியம் என்று மத்தியகுழு உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் அபிப்பிராயமாக இருந்தது என்றும் அறியவருகிறது.

நீண்டநேரம் நடந்த மத்திய குழுவின் கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு சிங்களத்தில் வெளியிடப்பட்ட ஒரு செய்திக் குறிப்பில் -

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குக் கட்சியின் மத்தியகுழு முழு ஆதரவை வழங்குகிறது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

நோர்வே ஊடாக விடுதலைப் புலிகள் வழங்கியிருக்கும் செய்தியின் அடிப்படைகளைப் பரிசீலித்துப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு, மத்தியகுழு வழங்குகின்றது - என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்ற பதம் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்படாதபோதிலும், புலிகளின் யோசனைகளின் அடிப்படைகளைப் பரிசீலித்து பேச்சுக்களை மீள ஆரம்பிக்க கட்சி முழு ஆதரவை வழங்கியிருக்கிறது என்று கட்சி வட்டாரத்தகவல்கள் தெரிவித்தன.

"சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிப்பதற்குத் தடையாக உள்ள விடயங்கள் தொடர்பாக அரசில் இணைந்திருக்கும் ஏனைய கட்சிகளோடு பேச்சுக்களை நடத்தி அந்தத் தடைகளைக் களைவது'' என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகக் கட்சியின் பிரதம செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கட்சியின் பாரம்பரியம் மற்றும் கட்டுக்கோப்பு என்பவற்றைப் பேணுவது தொடர்பான விவகாரமும் கூட்டத்தில் முக்கியத்துவம் கொடுத்து விவாதிக்கப்பட்டிருக்கிறது.

ஆளும்கூட்டணியில் இணைந்துள்ள ஏனைய கட்சிகளின் நடவடிக்கைகள் அண்மைக் காலப் போக்குகள் பற்றியும் காரசாரமாக விவாதிக்கப் பட்டிருக்கிறது.

அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, மங்கள சமரவீர, டி.எம்.ஜயரத்தின ஆகியோர் கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

(ஐ-3)

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் மகாதேவன் சதீஸ்

(பணியாளர் - உதயன் பணிமனை)



5 ஆம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவன் சதீஸ் அவர்கள் நேற்று (18.12.2004) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் தனலட்சுமி தம்பதியினரின் ஏகபுதல்வனும் தர்மினி, ராதிகா, ரேணுகா, அமிர்தகலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற பேரின்பநாதன் (லண்டன்) மற்றும் வாமதேவா, ராசலட்சுமி, நித்தியலட்சுமி, அன்னலட்சுமி ஆகியோரின் பெறாமகனும் சரஸ்வதி தேவியின் அன்பு மருமகனும் ரம்மியா (லண்டன்), மோகன், கையிலைவாசன், ஈசன் (ஜேர்மனி), சரணாமூர்த்தி, சுகந்தன், கமலேந்திரன், ஜெயந்தன் (ஜேர்மனி), வனிதாதேவி, நிர்மலாதேவி ஹேமலதா, கமலேஸ்வரி, சசிதரன், லக்சன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2004) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடையார் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
தாய், சகோதரிகள்.

### மகா கணபதிக்குருக்கள் திருஞான சம்பந்தக்குருக்கள்

வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தீர்த்தாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மகா கணபதிக் குருக்கள் திருஞானசம்பந்தக் குருக்கள் நேற்று (18.12.2004) சனிக்கிழமை இறைவனடி சேந்தார் .

அன்னார் தையல்நாயகியின் பாசமிகு கணவரும் ஜெயச்சந்திரகுமார், இரவிச்சந்திரன் (கனடா), வதனா(கனடா), வசந்தகுமாரி, ரஞ்சினி, இரவீந்திரன், ஜெயரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இராதாக்கிருஷ்ணன்(கனடா), அருட்குமரன், இராதாமணி, பானுமதி ஆகியோரின் அன்புமாமனாரும் லோகிதன், வைஸ்ணவி, கல்யாணி, ரம்மியா, குமரன், அகிலன், கபிலன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.12.2004) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4.30 மணியளவில் பூதவுடல் தீர்த்தாங்குளம் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி.ஜெயச்சந்திரகுமார்[மகன்],
வல்லை வாலி சித்தி விநாயகர் ஆலய பிரதமகுருக்கள்.

*தீர்த்தாங்குளம்,*
*பத்தமேனி, அச்சுவேலி.*

(சி.39851)

### 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சின்னத்துரை நடராசா**

(உரிமையாளர், கவிதா இன்டஸ்றீஸ்)

பேர் பூத்த பெருவாழ்வு பேருலகில் பெருமை பெற
பேரருள் சொரிந்து பேணி வளர்த்த பேராளா!
ஆத்மா சாந்தியடைய பரராஜ
சேகரப்பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமகன்.

தோற்றம் 5-6-1929 மறைவு 5-1-1998

**இன்றைய ஓடியோ CD வெளியீடு**

★ விஜய்யின் திருப்பாச்சி
★ திருவெம்பாவை
★ திருப்பள்ளியெழுச்சி

**மூர்த்தி வீடியோ, மானிப்பாய்.**

(சி.39835)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

19-12-2004

# அடை மழையும் அவநம்பிக்கைகளும்...

டன்ஸ்ரன் லூயிஸ்

"இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் படை ஒத்திகைகள், புதிய காவலரண்கள் அமைத்தல், மக்கள் மீதான கெடுபிடிகள் ஆகியவற்றைப் படையினர் அதிகரித்துள்ளனர். ஏனைய நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தங்களையும் ஒத்திகைகளையும் செய்கின்ற போக்குகளும் அண்மைக்காலத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. இவை எல்லாமே யுத்த சூழலை நோக்கி அரசும் படைகளும் நகர்வது போலவே எமது மக்களுக்குத் தோற்றமளிக்கின்றன. இதுவே எமது கணிப்பு" என்று தமது கணிப்பை வெளியிட்டிருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள்.

கடந்த 15ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் போர் நிறுத்த உடன்பாட்டை 'காவாந்துபண்ணும்' இறுதிநேர முயற்சிகளின் ஒரு கட்டமாகக் கிளிநொச்சிக்கு வந்திருந்த எரிக் சொல்ஹெய்ம் தமிழ்ச்செல்வன் அவர்களுடன் சில மணிநேரம் பேச்சுகளை நடத்தினார். அப்பேச்சுகளின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு கூறினார்.

"மக்கள், போராட்ட முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இது மறுதலிக்கப்பட்டு, இராணுவம் வன்முறையில் இறங்குமாக இருந்தால் நிலைமை மோசமடையும். அந்தநிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் சில தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படும் என நம்புகிறேன்" - என்றும் அவர் கூறியுள்ளார்.

***சமாதானம் முறியுமா?***

"சமாதான முயற்சிகள் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளன என்று சொல்ஹெய்ம் கூறியுள்ளாரே! சமாதான முயற்சிகள் முறியும் வாய்ப்பு உண்டா?" என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது, "தற்பொழுது நடந்துகொண்டிருக்கின்ற சம்பவங்கள், நிகழ்வுகள், தெற்கில் இருந்துவரும் சமாதானத்துக்கு விரோதமான கருத்துக்கள் ஆகியவற்றைப் பார்க்கும்போது அமைதி முயற்சிகள், சமாதான முன்னெடுப்புகள் போன்றவை ஆக்கபூர்வமான திசையில் முன்னெடுக்கப்படும் என்கின்ற நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை என்றுதான் எம்மால் சொல்லமுடியும்" என்றும் தமது நம்பிக்கையீனங்களை வெளியிட்டிருக்கிறார் தமிழ்ச்செல்வன்.

***அவநம்பிக்கைகள் மண்டிக்கிடக்கின்றன!***

எரிக்சொல்ஹெய்ம் ஹெலியில் கிளிநொச்சி வருவாரா? அல்லது வவுனியாவில் இறங்கி தரைவழியால் கிளிநொச்சி வருவாரா? என்கின்ற விடயங்கள் கொழும்புப் பாதுகாப்பு வட்டாரங்களிலும் செய்தி வட்டாரங்களிலும் சர்ச்சிக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், இறுதிக் கட்டத்தில் ஜனாதிபதி சொல்ஹெய்ம்முக்குரிய பயணத்துக்கு ஹெலிகொப்டர் வழங்கியிருந்தாராம். அவர் ஹெலிகொப்டர் மூலம் பயணித்திருந்தாராயினும் வன்னியில் தாழமுக்கம் காரணமாகப் பலத்த மழையும் ஆங்காங்கு சுழல் காற்றும் வீசிக் கொண்டிருந்ததால் அவரது ஹெலியை மதவாச்சியில் இறக்கவேண்டியதாயிற்று. அங்கிருந்து தரைவழியாகக் கிளிநொச்சிக்கு மதியம் 1.30 மணியளவில்தான் வந்தடைந்தார்.

மக்களும், செய்தி நிறுவனங்களும் எரிக்சொல்ஹெய்ம் மேற்கொண்டிருந்த கிளிநொச்சி விஜயம் தொடர்பாகப் பரபரப்பு மிக்கவர்களாகக் காணப்பட்டிருந்தனர். பலத்த மழை காரணமாக எரிக்சொல்ஹெய்ம் திட்டமிட்டபடி உரிய நேரத்துக்குக் கிளிநொச்சி வந்துசேரவில்லை என்பதை அன்றையதினம் காலையே அறியக்கூடியதாக இருந்தது. தமிழ்ச்செல்வனும் எரிக்சொல்ஹெய்ம்மும் நடத்தும் பேச்சுகள் எந்தவிதமான ஆக்கபூர்வமான திருப்பங்களையும் ஏற்படுத்தப்போவதில்லை என்ற அவநம்பிக்கைகள் அனைவரிடமும் 'மண்டிக்கிடந்தது'.

***மக்களின் அவலமும் ஆர்வமும்***

கடந்த வாரம் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து பலமாகப் பெய்த அடை மழை காரணமாகப் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் தமது இல்லிடங்களிலிருந்து இடம்பெயர்ந்து அல்லற்பட்டுக் கொண்டிருந்த வேளையிலும் நோர்வே சமாதான அனுசரணைகளில் நாடோடிமன்னனாகத் திரியும் எரிக்சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சின் பின் நிலைமை எவ்வாறு மாற்றமடையுமோ என்பதை வானொலி சேவைகளில் அன்றிரவும் மறுநாள் அச்சு ஊடகங்களிலும் மக்கள் கேட்கவும் பார்க்கவும் தவறவில்லை.

இக்கட்டத்தில் இந்தியப் பாதுகாப்புப் படையினர் தமது கப்பல்கள், ஆயுத தளபாடங்களுடன் கொழும்புக்கு அண்மித்த கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து கூட்டுப் பயிற்சி நடவடிக்கைகளில் இறங்கியுள்ளமையும் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், அமெரிக்கா ஆகியனவற்றின் பிரதிநிதிகள் இணைந்து ஜே.வி.பியின் சமாதான விரோதப் போக்கை விமர்சித்துக் கூட்டறிக்கையொன்றை வெளிப்படையாக வெளியிட்டுள்ளனர் என்பதும் மக்களின் ஆர்வத்தை ஈர்த்துள்ள விடயமாக உள்ளது.

***இந்தியாவின் தலையீடு***


இந்தியா - ஸ்ரீலங்கா கூட்டுக் கடல் பாதுகாப்புப் பயிற்சி நடவடிக்கைகள் என்பதும் ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், அமெரிக்கா ஆகியனவற்றின் கூட்டறிக்க என்பதும் இந்தியாவும் மேற்குலகும் இருவெவ்வேறான கொள்கைகளை இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் கடைப்பிடித்து வருவதைச் செயற்பாட்டளவில் காட்டும் விடயங்களாகும். இலங்கை அரசியல் - இராணுவச் சமநிலைத் தளம்பல்களில் இந்தியப் பாதுகாப்புக் கொள்கைகள் சம்பந்தப்பட்டுள்ளன என்பது தெளிவான யதார்த்தமாகும்.

***மீண்டும் இரத்தம் சிந்தவைக்குமா இந்தியா?***

இலங்கை இனப்பிரச்சினையை அன்று தொடக்கம் இன்றுவரை தத்தெடுத்து வைத்திருக்கும் இந்திய ஆளும் வர்க்கம் - இடைக்கிடையே தாம் சம்பந்தப்படப் போவதில்லை என்பதுபோல் பாசாங்கு செய்தாலும் இலங்கையின் கொதிக்கும் அரசியல் களத்துக்குள் சிங்கள, பௌத்த தீவிர சக்திகளை அனுசரித்தும் ஆதரித்தும் வளர்த்துவிடுவதில் தற்பொழுது அக்கறை காட்டத் தொடங்கியுள்ளதுடன் இலங்கையின் பாதுகாப்பு விவகாரங்களில் நேரடியான பங்களிப்புகளையும் தீவிரமாகச் செய்யத் தொடங்கியுள்ளமை தெரிகிறது.

தீவிரப்பட்டு துருவப்பட்டுள்ள தமிழ்த்தேசிய சக்திகளையும் சிங்கள தேசிய சக்திகளையும் பொருத்தமான அரசியல் அதிகாரப் பகிர்வுடன் கூடிய அரசியல் தீர்வு ஒன்றுக்கு உந்துவதற்குப் பதிலாக இரத்தம் சிந்தவைக்கும் போர்க்களத்தை நோக்கி சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுக்கும்வகையில் செயற்படுவது இந்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்குச் சர்வதேச நேர்மையாகத் தெரிகிறதா?







# கிராமபோன் பெட்டியும் தமிழ் - சிங்களப் பாடல்களும்...

நந்தன் எழுதுவது

சிறுவயதில் மலையகத்தில் வாழ்ந்தவரான ஓர் அன்பர் அந்தக் காலத்தில் பிரபலமாகவிருந்த கிராமபோன் பெட்டி பற்றிய சில தகவல்களையும் தமது அனுபவங்களையும் சத்தமும் சந்தடியும் பகுதிக்கு அனுப்பிவைத்துள்ளார். அது வருமாறு:-

பொங்கு தமிழே... இசைத்தட்டு வெளியிடப்பட்டமை தொடர்பான செய்தியொன்றை படித்தபோது எனக்கு அந்தக் காலத்து கிராமபோன் இசைத்தட்டு ஞாபகத்துக்கு வந்தது.

சிறுபெட்டியொன்றின் ஒரு பக்கத்தில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டிருக்கும். பெட்டியின் மேல்பக்கம் நடுவில் சுழலும் வட்டமான ஒரு தட்டு இருக்கும். அந்தத் தட்டின் மீது இசைத் தட்டை வைத்துவிட்டு பெட்டியின் இன்னொரு பக்கமாக வெளிவரும் கைபோன்ற ஓர் அமைப்பின் முனையில் ஊசி ஒன்றைப் பொருத்தி அந்த ஊசியை இசைத்தட்டின் ஒரு கரையில் வைப்பார்கள்.

பெட்டியின் உள்ளே இருக்கும் இரும்புச் சுருள் வளையத்தின் உதவியால் தட்டுச் சுழலும். தட்டுடன் இசைத்தட்டும் சுழல்வதால் அதன் மீது வைக்கப்பட்டுள்ள காந்த ஊசியின் வழியாக பாடகரின் குரல் ஒலிபெருக்கி வழியாக வெளிப்படும்.

## சத்தமும் — சந்தடியும்

அந்தக் காலத்தில் - நாற்பதுகளின் பிற்பகுதி என்று நினைக்கின்றேன் - மனிதர்களின் பொழுதுபோக்குக்கென விஞ்ஞானம் வடித்துக்கொடுத்திருந்த சாதனம் இது.

ஒரு சிறு குன்றின் மத்தியில் எங்கள் குடியிருப்பு அமைந்திருந்தது. அந்தக் குன்றின் மேற்குப் புறம் காடும், காட்டை அண்மிய சிங்களக் கிராமமும் அமைந்திருந்தன. கிழக்குப் புறம் சமவெளியில் சிற்றாறு ஒன்று ஓடிக்கொண்டிருக்கும். அந்த ஆற்றங்கரையில் ஒரு சிறு நகரம். அந்த நகரத்தின் கிழக்கே ஒரு பெரிய மலைப்பிரதேசம். இந்த நகரம் எங்கள் குடியிருப்புக்கு மிக அருகிலேயே இருந்தமையால் நினைத்த மாத்திரத்தில் ஏதும் தேவையென்றால் சிறுவர்களாகிய நாங்கள் ஓடிப்போய் வாங்கிக்கொண்டு வந்துவிடுவோம். அந்த நகரின் எங்கள் குடியிருப்புக்கு அருகில் ஒரு மளிகைக்கடையும் தேநீர்க் கடையும் இருந்தன. அவை இரு சிங்கள சகோதரர்களுக்கு உரிமையாகவிருந்தன.

இந்தத் தேநீர்க்கடையில் ஒரு கிராம போன் பெட்டியிருந்தது. அந்தப் பெட்டியில் மாலைவேளைகளில் பாட்டுப்போடுவார்கள். ஏறக்குறைய ஒரு பத்து அல்லது பதினைந்து இசைத்தட்டுகள். அவைகளில் எம்.கே.தியாகராஜ பாகவதர், பி.யு.சின்னப்பா, என்.எஸ்.கிருஷ்ணன் - மதுரம், காளி, என்.இரத்தினம் - ஏழுமலை போன்றோரின் பாடல்களும், ஓரிரு சிங்களப் பாடல்களும் இருக்கும்.

தமிழ்ப்பாடல்களைக் கேட்பவர்கள் பெரும்பாலும் என்

## அந்த நாள் ஞாபகம்...!

னைப் போன்ற தமிழ்ச் சிறுவர்களும் அந்தக் கடையிலுள்ள சிப்பந்திகளும் மட்டுமே. மற்றப்படி எவருக்கும் எதுவும் விளங்காது என்றாலும் பாட்டுக்கேட்பதென்றால் எனக்குப் பெரிதும் விருப்பம். கடையில் பாட்டுப் போடுகிறார்கள் என்றால் கையில் என்ன வேலை இருந்தாலும் அப்படியே போட்டுவிட்டு பறந்து போய்விடுவேன். கடைசிப் பாட்டு முடியும்வரை கேட்பேன். அதனால், பெரும்பாலும் அந்தப் பாட்டுகள் அனைத்துமே எனக்குப் பாடமாக இருந்தன். சிங்களப் பாட்டுக்களும் தான்.

சிங்களப் பாட்டுக்கள் பெரும்பாலும் தமிழ்ப்பாட்டு மெட்டுக்களை வைத்தே அமைக்கப்பட்டிருந்தன. அந்தப் பாடல்களை தமிழ் - முஸ்லிம் பாடகர்களே பெரும்பாலும் பாடி இருந்தார்கள்.

*ஐயா சிறுபெண்*
*ஏழை என்பால்*
*மனமிரங்காதோ*
*அந்தோ வயிறு வாடுகின்றேன்*
*சாவு வராதோ - தெய்வம்*
*சோறு போடாதோ...*

இவ்வாறான ஒரு தமிழ்ச் சினிமாப் பாடல் அந்தக் காலத்தில் சக்கைப் போடுபோட்டது. அது எந்தப் படத்தில் இடம்பெற்றிருந்தது என்பது ஞாபகமில்லை.

இந்தப் பாடலின் மெட்டில் சிங்களத்தில் ஒரு பாடல்.

*கௌத்தம சிறிபாத வந்திமு*
*சமனலக் கந்தே...*

என்றவாறு இசைத்தட்டில் வெளிவந்து சிங்களப் பாட்டுப் பிரியர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

அதேபோன்று தியாகராஜ பாகவதர் அவர்களால் பாடப்பெற்றிருந்த. *தீன கருணாகரனே நடராஜா*
*நீல கண்டனே....*
என்ற பாட்டின் மெட்டில்
*ராஜ சங்க போ மிசக்கி*
*தொகியாட்டா*
*தனப்பாரமி...*

என்றொரு சிங்களப்பாட்டு இசைத்தட்டில் வெளிவந்து சக்கைப் போடுபோட்டது. இந்தப் பாடலை முஸ்லிம் பாடகர் ஒருவர் பாடியிருந்தார். முஸ்லிம் பாடகர்களால் இந்திய இசையை மிக இலகுவாக பாடக்கூடிய தகைமை இருந்தமையால் அவர்களைக் கொண்டே இந்திய மெட்டுக்களால் சிங்களப் பாடல்களைச் சிங்கள இசைவாணர்கள் பெரும்பாலும் பாடுவித்தார்கள்.

### சிங்கள இசைக்கு தமிழர் பங்கு

பிற்காலத்தில் மொஹிதீன் பெக் என்ற இஸ்லாமியப் பாடகர் ஹிந்திப் படப்பாடல் மெட்டுக்களில் அமைந்த ஏராளமான சிங்களப் பாடல்களைப் பாடியிருந்தார். ஹிந்தியில் முகமது ராபி பாடியிருந்த பல பாடல்களின் மெட்டுக்களில் அமைந்த சிங்களப் பாடல்களை இவர் பாடி புகழ் பெற்றிருந்தார். இஸ்லாமிய பாடல்களையும் இவர் தமிழில் ஏராளமா கப் பாடியிருந்தார்.

சிங்கள சினிமாத் துறைக்குத் தமிழ்க் கலைஞர்களும், தொழில்நுட்பவியலாளர்களும் பெரும் பங்காற்றியுள்ளனர்.

சிங்களத் திரையுலகிலும், நாடக மேடைகளிலும் மிகப் பிரபலமாகத் திகழ்ந்தவரான ருக்மணிதேவி ஒரு தமிழ் பெண்ணே. சிங்களத் திரைப்படப் பாடல்கள் ஏராளமானவற்றை அவர் பாடியிருந்தார். இவரது தந்தையாரின் அழைப்பின் மீது அந்தக்காலத்தில் இலங்கைக்கு வந்திருந்து எம்.கே.தியாகராஜ பாகவதர் இலங்கையில் பல்வேறு இடங்களிலும் வெற்றிகரமாக நிகழ்ச்சிகளை நடத்தினார் என்று கூறுவார்கள்.

### ருக்மணிதேவி ஏராளமான சிங்களப் படங்களிலும் நடித்திருந்தார்

ஒலிபெருக்கிக் குழாயுடன் கூடிய கிராம போன் பெட்டிகள் படிப்படியாகக் குறைந்து, ஒலிபெருக்கிக் குழாய் இல்லாமல் பெட்டிகள் வரத்தொடங்கின . இவை பல அமைப்புக்களிலும் புது விதமான நுட்பங்களையும் கொண்டிருந்தன.

வானொலிப்பெட்டிகள் நகர்ப்புறங்களில் பிரபலமாகத் தொடங்கியதும் கிராம போன் பெட்டிகள் கிராமப்புறங்களில் தொலைதூரமான இடங்களுக்குப் பின்வாங்கிக்கொண்டன. கிராமங்களிலும் வானொலிப்பெட்டிகள் வரத்தொடங்கியதும் கிராம போன் பெட்டிகள் வீடுகளின் பரண்களில் இடம்பெறலாயின.

இந்தக் காலத்தில் கிராம போன் பெட்டிகளை நூதனச் சாலைகளில் தான் பார்க்கலாம்

## மக்கள் நடமாட்டமில்லாத வீதிகளில் அட்டகாசம் புரியும் ஆசாமிகள்

### மக்கள் நடமாட்டம் இல்லாத வீதிகளில்....

மக்கள் சந்தடி குறைவாகவுள்ள வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் காடையர்களதும் திருடர்களதும் அட்டகாசம் அதிகரித்துவருவதாகத் தகவல்கள் வந்துக்கொண்டிருக்கின்றன. தனிமையில் செல்லும் பெண்களிடம் சேட்டைகள் புரிபவர்கள் இதை ஒரு வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். பெண்கள் கழுத்துகளில் கிடக்கும் சங்கிலி, தாலிக்கொடிகளை அறுத்துக்கொண்டு ஓடுபவர்களும் உண்டு.

இவர்கள் சைக்கிள்களில் மட்டுமின்றி மோட்டார் சைக்கிள்களிலும் நாகூக்கான உடை தரித்துக்கொண்டு உலாவருகிறார்கள். இவர்களால் பாதிக்கப்படும் பெண்கள் பலர் கௌரவத்தை உத்தேசித்து வெளியில் செல்ல அஞ்சுகிறார்கள், மேலும் அதிகாரிகளிடம் முறையிடுவதற்கான ஆதாரங்களும் இருப்பதில்லை. மக்கள் சந்தடி குறைவான பகுதிகளில் பெண்கள் தனிமையில் செல்வதற்கு அஞ்சுகின்றனர். திருநெல்வேலிப் பகுதியிலிருந்து பாதிக்கப்பட்ட மாணவிகள் என்ற பெயரில் எமக்குக் கிடைத்துள்ள கடிதம் ஒன்று பின்வருமாறு அமைந்துள்ளது:-

அண்மைக் காலங்களில் யாழ்நகரின் பல்வேறு பகுதிகளில் சமூகச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளமையை அன்றாடச் செய்திகள் பறைசாற்றுகின்றன. இதற்குத் திருநெல்வேலிப் பகுதி விதிவிலக்கா என்ன? திருநெல்வேலிப் பகுதியில் சிறிய வீதிகள், ஒழுங்கைகளில் பெண்கள் தனியே செல்லமுடியாத அவல நிலை தோன்றியுள்ளது. சமூகத்தைச் சீர்கெடுக்கும் சில ஆண் வல்லூறுகளால் சில வீதிகள் சொல்லொணாத் துன்பத்திற்குள்ளாகின்றன. இந்த ஆண்கள், பெண்கள் வீதிகளில் செல்லும் போது தமது சுயரூபத்தைக் காட்டியும் ஆண்கள் வீதிகளில் போகும் போது யாதொன்றுமறியா அப்பாவிகள் போலவும் அருமையாக வேஷம் போடுகின்றனர். மதியவேளையிலும் அதிகாலை வேளையிலும் இந்த வெறிபிடித்த நாய்களின் சஞ்சாரம் அதிகமாயுள்ளது.

இந்த ஆண் பிசாசுகளின் நடவடிக்கைகளால் வகுப்புகளிற்குச் செல்லும் பெண்கள் படும் இன்னல்கள் சொல்லிடடங்கா. துவிச்சக்கரவண்டி மட்டுமல்ல மோட்டார் சைக்கிளிலும் இவர்களின் வீதியுலா நடைபெறுவதைக் காணமுடியும். இந்த வல்லூறுகளிடமிருந்து வனிதையர்களை யாரும் காப்பாற்றமாட்டார்களா? இவர்களின் அடாவடித்தனங்களிற்கும், அட்டகாசங்களிற்கும் தீர்வில்லையா? இந்தச் சமூதாயச் சீர்கேட்டைத் தடுக்க முடியாதா? பொறுப்பானவர்களே பொறுமையோடிராதீர்! பொங்கி எழுந்து ஆவன செய்யுங்கள்.



## யாழ். பாணம்



## 'மூட் அவுட்'

கடந்த சில நாள்களாக எனது மனைவிக்கு 'மூட்அவுட்'; காரணம் அறிய தூண்டித்துருவிப் பேச்சுக் கொடுத்துப் பார்த்ததில், காரணத்தோடு மேலதிகத் தகவலொன்றும் கிடைத்தது. அண்டை அயல் வீட்டுப் பெண்கள் சிலரும் அவ்வித உளப்பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பதே அந்த மேலதிகத் தகவல்.

பொதுவாக நம்மில் ஒரு தரப்பினர் தமது வாழ்க்கையில் இடம்பெற்ற - இடம்பெறும், நல்ல, கெட்ட சம்பவங்களை ஒரு போதும் - இறுதிக்காலம்வரைகூட - மறந்து விடுவதில்லை. அடிக்கடி அவற்றை மனதுள் அசைபோட்டுக் கொள்வதில் அவர்களுக்கு ஓர் ஆத்மதிருப்தி, மனம் மகிழ நேர்ந்த சம்பவங்களைவிட, சிரமப்பட நேர்ந்த அனுபவங்கள் அவர்களது மனதில் ஆழப்பதிந்து விடுகின்றனவாம். மேற்கொண்டு வாழ்க்கையில் எதிர்கொள்ள நேரும் சிரமங்களைத் துணிச்சலுடன் எதிர்கொள்ளும் மன உறுதியை இவை கொடுப்பதாக அவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.

மறுதரப்பினரோ, நல்லதோ கெட்டதோ எதையுமே இலேசில், விரைவில் மறந்துவிடும் தன்மை படைத்தவர்கள். மகிழ்ச்சியோ, கவலையோ இவர்களை அந்தந்த வேளைகளில் மட்டுமே பாதிக்கும்.

இவையாவும் நிதர்சனம் தானென்பதை இன்று எம்மால் நேரிலேயே கண்டுணர முடிகிறதே.

பல ஆண்டுகால உழைப்பில், சிறுகச்சிறுகச் சேமித்துக் கட்டியெழுப்பிய வீடு, அரச பயங்கரவாதத்தால் கண நேரத்தில் விமானக் குண்டு வீச்சில் சிதறிச் சின்னாபின்னமாக நேர்ந்தமை -

உற்ற நோய்க்கு உரிய சிகிச்சை பெற்று மீண்டும் உறவுகளுடன் இணையும் கனவுகளுடன் வைத்தியசாலைக் கட்டில் சிகிச்சை பெற்றுவந்த அப்பாவி நோயாளிகள் கோட்டையிலிருந்து சீறிப் பாய்ந்து வந்த எறிகணை வீச்சில் சிக்கி துடிதுடித்து உயிர்விட நேர்ந்தமை -

பெற்றமகன் அனுப்பிவைத்த பணத்தைப் பெற்றுவர சங்குப்பிட்டியைக் கடக்க - கால் கடுக்க - மணிக்கணக்காய் காத்து நிற்க நேர்ந்தமை -

தவிர்க்கமுடியாத தேவைக்காக, எந்த வேளையில் எந்த உருவில் மரணம் வந்து சேருமோ என்ற தவிப்போடு பயந்து பதுங்கி கொம்படி கடந்து கொழும்பு செல்ல நேர்ந்தமை -

பொருளாதாரத் தடை என்ற போர்வையில் குரல்வளை நசுக்கப்பட்டவேளையில், குப்பி விளக்கு வெளிச்சத்திலாவது குழந்தைகளுக்குப் படிக்க வசதி செய்துதரும் ஆதங்கத்தில் மண்ணெண்ணெய்க்காக கடை கடையாய்த் தேடி அலைந்தமை -

பாதுகாக்கப் பொறுப்பான அரசு பாதகம் விளைவிக்குமென்ற நிலையில், கட்டிக்காத்த சொத்துப் பத்தையெல்லாம் கைவிட்டு இடம் பெயர்ந்து சென்று இன்னல்பட நேர்ந்தமை -

இவையெல்லாம் எம் இறுதிமூச்சுவரை மறக்க இயலாத, மனதில் படிந்துவிட்ட வடுக்களல்லவா?

இழப்புக்கள், இன்னல்களால் மனது இறுகி வைராக்கியம் பெற்றுவிட்ட மனங்களை வசதிகள் வாய்ப்புகளை வாரி வழங்கி அவர்களின் மன உறுதியை, குறிக்கோளை திசைதிருப்ப திட்டமிட்டுச் செயற்படும் வகையிலமைந்ததே உளவியல் யுத்தம். மேற்கு நாடுகள் முயன்று வெற்றியும் கண்ட உளவியல் யுத்தத்தை இன்று சிங்கள அரசும் செயற் படுத்த முயல்வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு உண்மையாய் இருக்குமோ?

ஆனாலும், இன்று இருண்டு திரண்டு வரும் மேகக் கூட்டம் மழைக்கான அறிகுறி, எத்திசை இருந்தாவது வாடைக் காற்று வீசி மிரட்டி நிற்கும் மேகக்கூட்டத்தைக் விலக்க முடிந்தால் வானம் வெளிக்கும், இல்லையேல் மழை பொய்க்காது பெய்தேயாகும்.

ஆரம்பப் புதிர் அவிழ்படாவிட்டால், பந்தி பூரணத்துவம் அடைந்ததாய் ஆகாது.

அண்மைய சில நாள்களாகத் தடைப்பட்டுப் போயுள்ள தொலைக்காட்சி ஒளிபரப்பு அலைவரிசையொன்றில் தொடராக ஒளி பரப்பாகி வந்த - தொலைக்காட்சி ரசிகர்கள் மத்தியில் குறிப்பாக பெண்பாலார் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்த தொடர் நாடகத்தில் - வாழ்க்கையில் அடுத்தடுத்து சோதனைகளையும் வேதனையையும் சந்திக்கும் பெண் பாத்திரத்துக்கு மேற்கொண்டு என்ன நேர்ந்தது என்று அறிய முடியாத, பார்த்து அனுதாபப்பட முடியாத நிலை ஏற்பட்டமையால் உருவான ஏமாற்றம் அங்கலாய்ப்பு இவற்றின் தாக்கமே எனது மனைவிக்கும், அண்டை அயல் பெண்களுக்கும் ஏற்பட்ட இந்த 'மூட் அவுட்'.

~ பொன்வேலன்

# மழையும் குடையும் கொடையும்

மழைக்காலம் என்றதுமே குடையின் நினைவும் குடையைத் தேடுகின்ற தேவையும் ஏற்படுகின்றதல்லவா? குடைகளிலும் ஆண், பெண் என்று இருந்தது. பெரியதும் முழுக்குடை எனப்படுவதுமானது ஆண்களுக்குரியது. சிறிய அரைக் குடைக்குப் பெயரே லேடீஸ்குடைதான். இப்பொழுதெல்லாம் போக்குவரத்து நெருக்கடிகளைக் கருதியும் மற்றவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது என்பதற்காகவும் எல்லாருமே அநேகமாக லேடீஸாகி விட்டார்கள். சாத்துப்படிக்குப் பிடிப்பது போல முழுக்குடையுடன் திரிபவர்கள் வேடிக்கைக் குரியவர்களாகிவிட்டார்கள்.




சின்னக்குடை தலையை மட்டும் தான் காவாந்து பண்ணக்கூடியது. சீறும் புயலும் மழையும் சேர்ந்தால் சின்னக் குடை தாங்காதே என்ற 'தேவதாஸ்' படப் பாடல் அதற்கு மிகவும் பொருத்தமானதே.

மழைக்காலம் அல்லது மழை வருகின்ற அறிகுறிகள் தெரிந்தால் வெளியே செல்லும்போது குடையும் கையுமாகச் செல்வது நல்லதுதான். ஆனால், போகின்ற இடங்களிலே குடையை மறந்துவிட்டு வருகின்ற அவலங்களுமல்லவா இதிலே இருக்கிறது! முச்சக்கர வண்டி அல்லது வேறு வாகனங் களில் பக்கத்திலே குடையை வைத்துக்கொண்டு பயணமும் செய்வோம்; இறங்கும்போது குடை நினைவே இருக்காது. அலுவலகங்கள் கடைகளுக்குள் நுழையும்போது குடையை வெளியே சாத்திவிட்டு உள்ளே செல்வோம். அங்கிருந்து வெளியேறும்போது குடையை மறந்துவிட்டு வீடு வரையே வந்துவிடுவோம். பின்னர் நினைவு வந்து அங்கே சென்று பார்த்தால் பெரும்பாலும் குடையிருக்காது. யாரோ ஒரு புண்ணியவானுக்கு அது 'நன்கொடை'யாகப் போயிருக்கும்.

இதற்கெல்லாம் ஒரே தீர்வு மழை பெய்து கொண்டிருக்க வேண்டும். பெரு மழை என்றில்லாவிட்டாலும் சும்மா 'சிணுங்கல்' மழையாவது தொடர்ந்து கொண்டிருக்க வேணும் அப்படியென்றால் குடையை மறந்து விட்டுப்போய் விடுகின்ற வாய்ப்பே வராது. அடுத்தது, மழை வராது என்று உங்களுக்கு நிச்சயமாகத் தெரிந்தால் தற்பாதுகாப்புக்காக இருக்கட்டுமே என்று குடையை வீணாகக் காவாதீர்கள். இதுவும் குடையைப் பாதுகாப்பதற்கான - அது இன்னொருவருக்கு 'நன்கொடை'யாகப் போகாமலிருப்பதற்கான வழிதான்.

மழை வருமா வராதா என்பதை அறிவதற்குக் காலநிலை - வளிமண்டல அறிவித்தல்களை நம்பமுடியாமலிருக்கிறது. அவர்கள் நாட்டின் சிற்சில பகுதிகளில்... இலேசாகவோ மிதமாகவோ... பெய்யக்கூடும்(?) என்றவாறு பொடிவைத்தல்லவா அறிவிக்கிறார்கள். சில புத்திசாலிகள் மழைவரும் என்ற அறிவித்தல் வெளிவந்தால் நம்பிக் குடையை எடுத்துச் செல்லமாட்டார்களாம்......(?)

இன்னும் சிலர் வெயிலுக்கும் குடை பிடிப்பதுண்டு. 'குடையும் கையும்' என்பது அவர்களுக்குப் பழகிப்போய் விட்டதால் குடையை மறக்கின்ற வழக்கமே அவர்களுக்கு வருவதில்லை. வெயில் ஒத்துக்கொள்ளாத அவர்களில் சிலர் சைக்கிளில் செல்லும்போதுகூட குடை பிடித்துக்கொண்டு அவதிப்படுவதைக் கண்டிருக்கிறோம். அவர்களைப் பார்த்துச் சில குறும்புக்கார இளைஞர்கள் 'ஐயா அந்தப் பக்கம் மழையோ...' என்றும் கேட்பதுண்டு.

எனக்குத் தெரிந்த ஒருவரும் இப்படித்தான் எந்நேரமும் குடை நிழலில்தான் நடமாடுவார். அதிலும் வேடிக்கை என்னவென்றால் முழுக்குடையுடன்... மனிதர் பீனிசக்காரர் வெயில் மழை எதுவுமே ஒத்துவராது என்றுதான் கேள்விப்பட்டேன். காலப்போக்கில் இன்னொரு சங்கதியும் கேள்விப்பட்டேன். அவர் பலரிடம் கடன்பட்டுமிருக்கிறார். கடமைப்பட்டும் இருக்கிறாராம். அவர்களை நேருக்குநேர் சந்திக்க நேருமிடத்தில் அவர்களிடமிருந்து தன்னை மறைத்துக்கொள்ளவும் அவர்களைக் கண்டுகொள்ளாதது போல நடந்து கொள்ளவும் குடை தான் அவருக்குக் கைகொடுத்து வருகிறதாம்....

அந்தப்பெரியவர் பெரிய கடைப்பக்கத்தால் வரும் போது திடீரென்று மழை கொட்டத் தொடங்கிவிட்டது. குடை எடுத்துவராத அவர் வேறு வழியில்லாமல் தமது பையனையும் இழுத்துக் கொண்டு ஒரு புடவைக் கடைக்குள் நுழைந்து விடுகின்றார்.

அங்கே அவர்களுக்குப் பலத்த வரவேற்பு "வாங்கோ ஐயா... வாங்கோ..." என்று ஊழியர்கள் மட்டுமல்ல முதலாளியே எழுந்து வரவேற்றார். குறைந்தது குடையாவது வாங்குவார்கள் தானே!

'என்ன எடுக்கப் போகிறீங்கள் முதலில் சேட் துணிகளைத் தான் பாருங்களேன்' என்றவர்கள் அவரின் பதிலுக்குக் காத்திராமல் கண்ணாடி அலுமாரிகளுக்குள் இருந்த துணிவகைகளை எடுத்து மேசைமீது பரப்பினார்கள். 'உங்களுக்கு இது நல்லாயிருக்கும். பையனுக்கு இது நல்லாயிருக்கும்' என்று பரிந்துரைவேறு சொன்னார்கள்.

பெரியவர் 'எதைத் தெரிவுசெய்வது' என்று பாவனை செய்பவர் போலிருக்கையில் 'இதோ இவைகளையும் பாருங்கோ' என்று அடுத்த மேசைக்கு அவர் அழைத்துச் செல்லப்படுகின்றார். அங்கு கால்சட்டைத்துணி வகைகள் எடுத்து வரப்பட்டு இவர்களுக்குக் காண்பிக்கப்படுகின்றது.

இப்படியே ஒவ்வொரு பகுதித் துணி வகைகளும் இவர்களுக்குக் காட்டப்படுகின்றது. பெரியவர் ஒன்றுமே பேசவில்லை. 'எல்லாவற்றுக்கும் எவ்வளவு வரும்?' என்று மனதுக்குள் கணக்குப் போட்டுக்கொண்டிருப்பவர் போலக் காணப்பட்டார்.

கடைசியாகக் கடை ஊழியர் ஒருவர் பெரியவரிடம் 'திறமான இந்தியச் சாறங்களும் இருக்கின்றன. வேண்டுமானால் அவைகளையும் காட்டட்டுமா?' என்றார்.

இந்தச்சமயத்தில்தான் பெரியவர் பையனை மெல்லத்தட்டி "தம்பி போய் வெளியே மழை நின்றுவிட்டதா என்று பார்த்துவிட்டு வா இல்லை என்றால், சாறங்களையும் பார்க்கலாம் ......" என்றார்.

இது கடைக்காரர்களின் காதுகளிலும் விழுந்துவிட்டது. அவர்களுக்கு எப்படி இருந்திருக்கும்.

- சண் அங்கிள்.

# இழந்த நம்பிக்கைகளின் அவரோகணத்தோடு...

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், பெண்கள் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி சேகரிக்கும் நோக்கில் ''பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்'' என்னும் நாடகத்தை இன்று ஞாயிறு காலை 10.30 மணிக்கும் மாலை 3.30 மணிக் கும் கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றுகின்றது. அதை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

இந்தச் சமாதானம் நீடிக்கின்றது! ஏனோ திருப்திப்படமுடியவில்லை. மறுபுரம் அடுத்த யுத்த கண்டம் சூழ்கொண்டு விடுமோ என மனம் பேதலிக்கின்றது. சமாதானம் எதனை நிலை நிறுத்தியது. கடந்த காலங்களில் இழக்கப்பட்டவற்றிற்கு ஏதேனும் இறுதி நிலைத் திருப்திகள் பெறப்பட்டதா! அவை அப்படியே உள்ளங்களில் உறைந்து கிடக்கின்றன. உருக்கொண்டு ஆடிக்கழிப்பதற்கும் போதிய ஆற்றுப் படுத்தலும் இல்லை. அந்த ஆற்றுப் படுத்தல் முயற்சியைப் பல அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் தம்மளவில் முயன்று வருகின்றன. அவை உடனடிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, இடர்களிற்கான பின் புலங்களின் மீதாகத் தீர்வுகாண்பது, அரசியல் மீதான தாக்கப் புலத்தால் தீர்வுகாண்பது, இருக்கும், எதிர்கொள்ளும் பிரச்சினைக்குள்ளேயே மனரீதியாகத் தீர்வு காண்பது என விரிவுபட்டே செல்கின்றன.

இவற்றுள் பெண்கள் மீதான பார்வை முக்கியம் பெறுவதாக அல்லது முனைப்புப் பெறுவதாக அண்மைக்கால அரச சார்பற்ற நிறுவனங்களின் நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் அறிய முடிகின்றது. நீண்டகாலமாகத் தொடர்ந்து வந்த யுத்தம் வழங்கிய வடுக்களின் வெளிக்காயமற்ற வேதனைகளைப் பெண்கள் தாங்கி வந்தமையையும் அவற்றிற்கான தீர்வுகள் வேண்டப்படுவதையும் இவ்வாறான நிகழ்ச்சித் திட்ட அதிகரிப்புக்களிற்குக் காரணம் என்றே கூறலாம். போரின் இழப்புகள், பிரிவுகள் இராணுவக் கெடுபிடியின் பிரதி பலன்கள் எனச் சுமந்த சுமைகள், எமது கலாசாரப் பின்புலங்கள், சமூக நியமங்கள் காரணமாக வேதனைகளாக நெஞ்சுக் குழிக்குள்ளேயே நீறு பூத்துக்கிடக்கின்றன. எனினும், பெண்கள் 'பெண்களாகவே' இருக்க வேண்டிய நிலைமை அனைத்தையும் மௌனமாக்கி விடுகின்றது.

இந்நிலைமையில் சுமைதாங்கும் பெண்கள் தமக்குள் தாமாகவே கொடுத்தும் பெற்றும் சுமை தணிக்க வேண்டிய தேவை அவசியமாகின்றது. தங்களின் கூட்டுணர்வால், குழு முயற்சியால் வெல்லப்பட வேண்டிய விடயங்கள் உள்ளன. இவற்றில் பல நிறுவனங்கள் பல நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. அவற்றுள் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனம் என்றவகையில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் பெண்கள் தொடர்பான வேலைத்திட்டங்களை அண்மைக் காலத்தில் முனைப்பாக்கி வருகின்றது.

போரினால் அதிகளவில் பாதிப் படைந்த தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்களில் பெண்கள் தொடர்பான செயற்றிட்டங்களை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தி வருகின்றது. இத் திட்டத்தின் செயற்பாடுகள் பலவாக இருக்கின்றன. பெண்கள் எதிர்கொண்ட அல்லது எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைத் தணிப்பதற்கு அல்லது தீர்ப்பதற்குப் பல கட்டவிழ்ப்புகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக நிதி சேகரிப்பு நடைமுறைகள் குடாநாடு ரீதியாக நடைபெற்று வருகின்றன.

இதற்கான எம் மக்களின் ஒத்துழைப்பு மனதை நெகிழவைக்கிறது. கூடிக்குலாவிக் கொண்டும், கொடுத்தும் வாழ்ந்த எமது சமூகத்தின் வெளிப்பாடே அதுவாகிறது.

அதேவேளை, கொடுத்துதவி செய்யவேண்டிய மக்களின் கோலங்களை, அவர்களின் அடிவயிற்றுத் தீயைக் கண்டு, கதைத்துப் பகிரவேண்டியதும் இன்றியமையாததாகின்றது. இதற்கான களத்தை நாடக அரங்கு ஏற்படுத்திக் கொடுக்கிறது.

கிராமத்து இளம் பெண்கள் கடந்த பல மாதங்களாகத் தமது ஊரவர், உறவுகளுடன் மனம் பிணைத்துப் பகிர்ந்துகொண்டதால், அதன் உணர்வு வெளிப்பாடாக ஒருங்கிணைந்த வடிவமாக உருவாக்கம் பெற்றிருக்கிறது ''பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்'' என்னும் அரங்க ஆற்றுகை. இதனை எழுதி நெறிப்படுத்தியிருப்பவர் தே.தேவானந்த், இசையமைப்பு த.றொபேட், கவிதைகள் நா.சிவசிதம்பரம்.

செயல்திறன் அரங்க இயக்கம் இந் நாடகத்தை தயாரித்துள்ளது.




யுத்தத் தாண்டவத்தின் நீடித்த விளைவுகள் பல இனங்காணப்படுவதில்லை. அதன் காயத்தின் சீழ்வடிதல்கள் நிறுத்தப்பட முன்னர் கண்களை மறைத்துவிட்ட புதிய வாய்ப்புகள், புதிய வாழ்க்கை முறைகள்! ஆயினும், இன்னும் - பிரிவுகளுக்குக் கிடைக்காத பதில்கள், இடப்பெயர்வுகளுக்குக் கிடைக்காத பதில்கள், தொழில்களுக்குக் கிடைக்காத அனுமதிகள் என அனுபவிக்கும் யுத்த அநீதிகள் தொடர்கின்றன. மறுபுறத்தே இவையனைத்தும் மறுக்கப்பட்ட தோற்றப்பாடுகளாய் முக்கியம் பெறுகின்றன. இவற்றின் மத்தியில் யாழ். குடா நாட்டில் எங்கோ ஒரு கிராமத்தில், எங்கோ ஒரு மூலையில் ஒரு சிறு புள்ளியாக இருந்து பரி தவிக்கும் பெண்ணின் கதைகள் என ஒவ்வொரு பெண்ணுமே அனுபவித்துக் கொண்டிருக்கிற அவலங்கள் அரங்கினூடே வெளியே தெரியப்பட வேண்டியவை. அழுவதற்காக அல்ல, இனம்புரியாத, கண்ணுக்குப் புலனாகாத கவலைகள் ஒவ்வொருவரது மனத்தளத்திலும் தாண்டவமாடிக் கொண்டிருப்பதை நாம் கண்டுணர வேண்டும்.

பௌதீகக் கட்டுமானங்கள் மீளுருப் பெற்றுவரும் இவ்வேளையில் மன அபிவிருத்தி தொடர்பான வேலைத் திட்டங்களிலும் அனைவரது அக்கறையும் இருத்தல் வேண்டும். மீண்டும் சூழ்கொள்ளும் தமிழ்ச் சமூகம் தன்னை நிலைநிறுத்தச் செய்யவேண்டியவை பலவுள்ளன. மக்களிடம் செல்வதும், மக்களின் பிரச்சினைகளை அவர்களே முகங்கொள்ள வழி சமைப்பதும் சமூக அக்கறை கொண்ட அனைவரதும் பொறுப்புமாகிறது.

- இலக்கியா.

"தொலைந்து போன நெஞ்சத்தின் வேட்கைகள்
மகிழ்ச்சியில் மரணிக்கும்
நிறைவேறிய, நிறைவேறாத பணிகள்
மறந்ததாக நினைத்திருந்த
ஆனால், முற்றிலும் மறந்து போகாத
மறுபிறப்பெடுத்த வலி
இழந்த நம்பிக்கைகளின் அவரோகணத்தோடு
கடைசியாகக் கண்ணுறங்கி
தினமும் வேதனையோடு புத்துயிர்ப்புப் பெறும்
மறந்து போன பரவசம்.........."

ஆபிரிக்கக் கவிதைகள்
கவிஞர் சோ.பத்மநாதன்

# வெளிநாட்டு மோகம்:

வெளிநாட்டுமோகம் பிடித்து விமானம் ஏறுபவர்களும், வறுமையின் காரணமாக தொழில் தேடிச் செல்பவர்களும் எதிர்நோக்கும் அவலங்கள சொல்லில் அடங்காதவை. இவர்களில் சிலர் தாம் போகவேண்டிய இடத்திற்குச் சென்றுள்ளனர். வேறு சிலர் உரிய இடத்திற்குச் செல்லாது வேறு இடங்களில் இறங்கி கடும் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுபவர்களே வேறு நாடுகளில் தரையிறக்கப்பட்டு அவல வாழ்க்கைக்குத் தள்ளப்படுகின்றனர். ஐரோப்பிய நாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி அழைத்துச்செல்லப்பட்ட ஒருவர் தாய்லாந்தில் தரையிறக்கப்பட்டு உரிய இடத்திற்குச் செல்ல முடியாமல் அவலப்பட்டு நாடு திரும்பிய அனுபவத்தையும் அங்கு மேலும் கஷ்டப்படுபவர்களை நேரில் கண்ட அனுபவங்களையும் பகிர்கின்றார்.

திருமலையைச் சேர்ந்த கந்தசாமி ஜெயசீலன். - பிரித்தானியா, கனடா, பிரான்ஸ் என ஐரோப்பிய நாடுகளில் ஏதாவது ஒன்றுக்கு அனுப்புவதாகக் கூறிய இலங்கை முகவர் என்னைப்போன்ற சிலரை விமானத்தில் ஏற்றினார். தாய்லாந்தில் (பாங்கொங்) இறங்கியதும் விமான நிலையத்துக்கு வந்த முகவர் எங்களை அழைத்துச்செல்கின்றார். பாங்கொக்கில் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்க வைத்தார். நல்ல உணவுப் பரிமாற்றம் வரவேற்பு என்பன வழங்கப்பட்டன.

இரண்டு வாரத்தினுள் அனுப்புவதாகக் கூறியதும் நாம் சந்தோசப்பட்டோம். இரண்டு வாரம் முடிந்த பின்னர் ஹோட்டலிலிருந்து தமது பாதுகாப்பில் உள்ள அறைக்கு அழைத்துச் சென்றனர். அங்குபோன பிறகுதான் எம்மைப் போன்று ஏமாற்றப்பட்டவர்கள் பலர் அங்கு நிற்பதைக் காணமுடிந்தது. ஒவ்வோர் அறையிலும் குறைந்தது ஏழு பேர் அடைக்கப்பட்டனர். புதிதாக அந்த அறையில் விடப்பட்டவருடன் அடிக்கடி முகவர்கள் வந்து கதைப்பர். இன்று, நாளை விமானம் ஏற்றப்படும் என்ற ஆசை வார்த்தைகள் பேசுவர். அவசரமாக அனுப்பமுடியும் அதற்கு ஆயிரத்து ஐந்நூறு (1500) டொலர் தயார்ப்படுத்தவேண்டும் எனவும் கூறுவர். இதை நம்பி எப்படியும் ஆயிரத்து ஐந்நூறு டொலர் தயார் செய்து புறப்பட்டால் இறுதியில் மலேசியா, கொரியா, வியட்நாம், கம்போடியா போன்ற நாடுகளில் இறக்கிவிடப்படு கின்றனர். அப்போது ஜெயில் வாழ்க்கை உட் பட மேலும் அவலம் தொடர்கின்றது.

பாங்கொங்கில் ஒரு அறையில் தங்கவைக்கப்பட்டிருக்கும் ஏழுபேருக்கு ஒரு நாள் சாப்பாட்டுச் செலவுக்கு 'நூறுவாத்' (இலங்கை ரூபா 235) முகவர்களால் வழங்கப்படுகின்றது. இதில்தான் ஏழு பேரும் மூன்று வேளையும் சமாளிக்கவேண்டும். இப்பணம் ஒரு நாளைக்கு ஒருவருக்குக்கூடப் போதாது. காலையில் சாப்பிடாது மதியம் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு அதன் மீதியே இரவுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. இங்கு குடிதண்ணீர்கூட பத்து வாத் கொடுத்து (ஒரு வாத் 2.33சதம்) தான் குடிக்கவேண்டும். அறை பத்து அடி அகலமும் 15அடி நீளமும் உடையது. இதில் படுக்கை அறை, குளியல் அறை, சமையலறை, கழிப்பறை எல்லாம் அடங்கும். ஏழு பேரின் நிலை எவ்வாறிருக்கும்? இது குளிரூட்டப்பட்ட அறை எனினும், ஒரு மணித்தியாலம் மாத்திரமே அது அனுமதிக்கப்படும்.

## இன்னும் சீரழிகிறது...!!

எவரும் வெளியில் செல்வதற்கு அனுமதி இல்லை. முன் கதவு பாவிக்கமுடியாது. விஸா இருப்பவர் மாத்திரம் சந்தைக்குச் சென்று வரமுடியும். இங்கு தொலைபேசி இருந்தாலும் அதில் அழைப்பு எடுக்கவோ, பேசவோ முடியாது. அதற்குரிய இலக்கமும் வழங்கப்படவில்லை. எந்தத் தொடர்பும் கையடக்கத் தொலைபேசி மூலம்தான். விஸா இரண்டு மாதத்துக்குப்பிறகு காலாவதியாகிவிடும். முகவர்கள் புதுப்பித்துக் கொடுக்கமாட்டார்கள். அதனால் யாரும் பயத்தில் வீதியில் இறங்குவதில்லை. சிலர் தாம் அகதிகளாக இருக்கின்றோம் எனக் கூறிக்கொண்டு என்.எச்.சி.என். அலுவலகத்தில் முறையிட்டுப் புதுப்பிப்பதும் உண்டு. முகவர்களால் அழைத்துச்செல்லப்படுபவர்களின் விஸா இரண்டு மாதங்களில் முடிவுறும் தறுவாயில் கடவுச்சீட்டை வாங்கிச் சென்றுவிடுவர். இந்நிலையில் எமது பசியைப்போக்க அங்கிருக்கும் அம்மன் கோயிலை நாடுவதுமுண்டு.

இலங்கையிலிருந்து அழைத்துச் செல்லப்படுபவர்களிடம் குறிப்பிட்ட தொகைப்பணத்தையும் பெற்றுவிடுவார்கள். தாய்லாந்தில் ஒரு தொகையையும் கூறிய நாட்டுக்குச் சென்றால் மீதியும் கொடுக்கவேண்டும். உரிய நாட்டுக்கு அனுப்பப்படுவது அதிர்ஷ்டவசமான விடயம். வேறுநாடுகளில் சிக்கித்தவிப்பதே அநேகமான உண்மை. மற்றும்படி சிறை வாழ்க்கைதான். இவ்வாறு அவல வாழ்க்கையை அனுபவித்த வண்ணம் கடந்த இரண்டு வருடத்துக்கும் மேலாக 200 பேர்வரை அங்குள்ளதாகத் தெரிய வருகிறது. சில பெண்களும் இந்தக் கொடுமையை அனுபவித்து வருகின்றனர். ஆறு ஆண்களுடன் ஒரு பெண்ணும் தனியறையில் காலம்தள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது. தாயும் மகளும் என ஒரே குடும்பத்தவரும் இதற்கு ஆட்பட்டுள்ளனர்.

சில பெண்கள் கற்பையும் இழந்து நாடு திரும்பமுடியாமல் சீரழிந்து போவதாக நம்பப்படுகிறது. பாரிஸ் செல்ல எண்ணுபவர்களிடம் சுமார் 14 லட்சமும், லண்டன் செல்ல விரும்புபவர்களிடம் சுமார் 24 லட்சமும் முகவர்களால் கோரப்படுகிறது. இந்தச் சீரழிந்த வாழ்க்கையிலிருந்து விடுபட்டுவந்த ஜெயசீலன் ஒன்றரை வயது மகளின் தந்தை. இந்த வருடம் ஜூன் மாதம் 22ஆம் திகதி ஜேர்மன் செல்வதற்காக விமானம் ஏறினார். பாங்கொங்கில் கிடைத்த அனுபவத்துடன் மற்றவர்கள் சொன்னதையும் கேட்டு, சுத்துமாத்தைப் புரிந்துகொண்டவர். விடாப்பிடியாகத் தாயகம் அனுப்பவேண்டும் என வற்புறுத்தி ஒகஸ்ட் மாதம் 28இல் இலங்கை திரும்பினார். அதுவரை பட்ட அனுபவங்கள் அளப்பெரியது.

- மிதுஷனா

# உள்ளூர் வளங்களை நாமே பயன்படுத்துவோம்!

எமது வன்னிப் பிரதேசங்களில் ஏராளமான மூலவளங்கள் இருந்தபோதிலும் அவை தகுந்த முறையில் பயன்படுத்தப்படாமல் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. இவற்றை இனங்கண்டு ஆழமான ஆய்வுகள் பலதுறைகளிலும் நடத்தப்பட்டுப் பெறுபேறுகள் தகுந்தமுறையிலே உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

இவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட சான்றுகள் பின்னர் இந்த மூலவளங்களை எமது மக்கள் அனைவரும் தத்தமது தேவைகளுக்கேற்ப சூழல் பாதிப்புறாவண்ணம் பயன்படுத்தக்கூடிய முறையில் சிறந்த செயற்றிட்டங்களினூடாக உற்பத்தியில் ஈடுபடுத்தப்படல் அவசியமாகிறது. இச்செயற்பாடு எமது தாயகத்தில் மிகவும் அவசியமானதும் கூட.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் சோவியத்யூனியன் தனது பொருளாதாரம் சிதைக்கப்பட்ட நிலையில் கடுமையான பஞ்சத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தது. தகுந்த பொருளாதாரச் செயற்றிட்டங்களினூடாகவும் சமுதாய உணர்வு பெற்ற மக்களது விடாமுயற்சியாலும் அது துரித வளர்ச்சி பெற்று மக்களது வாழ்க்கைத் தரத்தைப் பன்மடங்கு உயர்த்தியதுடன், இன்று உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது பொருளாதார ரீதியில் உன்னத இடத்தைப் பெற்றுள்ளது.

1958இல் நடைபெற்ற புரட்சியின் பின்னர் கியூபா பலவகை பொருளாதார நெருக்கடிகளுக்கும் முதலாளித்துவ நாடுகளின் அச்சுறுத்தல்களுக்கும் எதிராகத் தாக்குப் பிடித்து இன்று தலைநிமிர்ந்து நிற்பதற்குக் காரணம் அந்நாட்டு மக்களின் விடா முயற்சியும் திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கைகளும் தகுந்த அரசியல் வழிகாட்டலுமேயாகும்.

எமது பிரதேசங்களில் பொருளாதாரத்தை நாம் திட்டமிட்டு நடைமுறைப் படுத்துவதன் மூலமே நமது எதிர்காலத்தை வளமாக்கமுடியும். துரதிர்ஷ்டவசமாக இவ்வகையான முயற்சி எம்மவர் மத்தியில் மிக அரிதாகவே காணப்படுகிறது.

எனவே, தற்போதைய எமது தாயகத்தின் தேவைகருதிப் பலரும் பல திசைகளில் தமது சிந்தனைகளைத் திருப்பித் தமது ஆற்றல்களைச் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையிலான செயற்பாடுகளில் செலுத்த வேண்டும்.

எமது பிரதேச வளங்களான பனை வளம், தென்னந்தும்பு, மட்பாண்டம் உற்பத்தி செய்வதற்கான மணல், பன்புல் என்பன எமது பிரதேசத்தில் தாராளமாகக் கிடைக்கின்றபோதும் அதனை எமது மக்கள் பயன்படுத்தாது வீணே தொழில் வாய்ப்பின்றி அலைகின்றனர்.

ஆகவே, தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தேவைகளை இனங்கண்டு அவற்றுக்கான செயற்றிட்டங்களை ஆரம்பித்து எமது மக்களுக்கான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதுடன் எமது தாயகம் பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைய தம் வறுமைநிலையினைப் போக்கவும் உள்ளூர் பயன்பாட்டை மேம்படுத்தவும் உதவுவோம்.

ஒட்டுசுட்டான்

# பண்பார்ந்த சொக்கன் பணி



அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மைசேர்
பண்புடனே மக்களெல்லாம் பாரினிலே - என்றும்
வாழ்ந்திடுதல் வேண்டி வளமான ஆக்கங்கள்
சூழ்ந்தளித்தான் சொக்கன் துணிந்து.

சிறுகதைகள் நாடகங்கள் சிந்தனையைத் தூண்டும்
செறிவுள்ள கட்டுரைகள் செய்யுள் - மறுமலர்ச்சிப்
பண்ணை எழுத்தாளன் பண்பார்ந்த சொக்கலிங்கம்
வண்ணத் தமிழ்க் கீந்தவை

நெஞ்சத்து நேர்மையுடன் நீதியை எஞ்ஞான்றும்
கொஞ்சும் தமிழ் நடையிற் கோத்தளித்தான் - பஞ்சமிலா
உள்ளத்தா லென்றும் உயர்ந்த சொக்கன்மேலோர்
உள்ளத்தில் வாழ்வான் உணர்.

- சிற்பி

# யாரொடு நோவோம்...?

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் சமூகக் குழுக்களுக்கு இடையிலான மோதல்கள் அதிகரித்துக் காணப்படுவதைப் பலரும் அதிருப்தியோடு பிரஸ்தாபித்து வருகின்றனர். பத்திரிகைகளை எடுத்துப் பார்த்தால் தினசரி குழு மோதல்களும், மறைந்திருந்து நடத்தும் தாக்குதல்களும், அவற்றினால் காயப்படுவதும், இறப்பதும் பற்றிய செய்திகளாக வந்தவண்ணமேயுள்ளன. சில சம்பவங்கள் வெளியுலகுக்குத் தெரியாமலே சிறு வட்டத்துக்கு மட்டுமே தெரிந்த சங்கதிகளாகப் புதைந்துள்ளன.

நீண்டதொரு யுத்தம் நடைபெற்ற மண்ணில், மக்களின் வாழ்வாதாரங்கள் சரிவரக் கட்டமைக்கப்படாத சூழலில் இடம்பெயர் அவல வாழ்வும், யுத்தம் தொலைத்த உறவுகளின் இழப்புணர்வும் பற்றி நிற்கும் கள நிலையில் இவ்வாறான மோதல்கள் பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக் கூடியன.

சமூகங்களுக்கிடையிலான பிரிவினையென்பது முன்னுரிமைப்படுத்த வேண்டிய பல விடயங்களைப் பின்னகர்த்தி விடுவதுடன் எதிர் நிலைமைகளையும் உருவாக்கிவிடும்.

உண்மையில் சிறுசிறு பிரிவினர்களுக்கிடையில், தவிர்க்கக்கூடிய சம்பவங்களின் பொறியிலேயே இந்த மோதல்கள் மூழ்கின்றன. சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் பொறுப்புடன் - நீதியுடன் - நடந்துகொள்வது என்பதே பிரச்சினைகள் ஏற்படாமல் தடுப்பதற்கான முதன்மையான வழியாகும். ஆனால், அவ்வாறு சமூகப் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளும் நிலையில் மோதல்களுக்குள் மூழ்கியவர்கள் - இளையோர் மற்றும் சில மூத்தவர்கள் - இல்லை.

அநேகமான குழுச்சண்டைகள் மதுவினால் விளைந்த போதை காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமான மோதல்களே. அதையடுத்து, பாலியல் தொடர்புகள் சார்ந்த பிரச்சினைகள் முதன்மைப்படுகின்றன. காணித் தகராறு, பகிடி மற்றும் சேஷ்டைகள் காரணமாகவும் மோதல்கள் ஏற்பட்டுள்ளன. இங்கு தீமைகளைத் தட்டிக்கேட்க முனைந்தவர்கள், தடுக்க முனைந்தவர்களே அதிகம் தாக்கப்பட்டுள்ளனர். ஆலயப் பிரச்சினைகளும் கூட ஒரு சில இடங்களில் குழு மோதல்களை உருவாக்கி உள்ளன.

அண்மையில் நடைபெற்ற திருநகர் - திருநகர் மோதல்கள், வட்டுக்கோட்டை மோதல்கள் என்பன பாரதூரமானவையாக அமைந்திருந்தன. மோதிக்கொள்ளும் இரண்டு தரப்பினரின் ஒரு தரப்பார் பொறுப்புடன் நடந்துகொள்ளாமை, இன்னொரு தரப்பு சிறு பிரச்சினையைத் தூக்கிப்பிடித்து பழிவாங்கல் உணர்வுடன் வன்முறையைக் கையில் எடுத்தமை என்பனவே மோதல்கள் மோசமடையக் காரணமாகின்றன. சிறு விவகாரங்களில் தொடங்கும் இந்த மோதல்கள் பூதாகாரமடைந்து சிவில் வாழ்வையே - இயல்பு வாழ்வையே - நிலைகுலையச் செய்துவிட்டன. பொது அமைதிக்குப் பாதகமாக நடந்துகொள்வோரை, மோதல்களுக்குக் காரணமான சம்பவங்களில் குற்றவியல் சட்டத்திற்குள் அடங்கும் குற்றங்களை இழைத்தவர்களைச் சட்டப்படி தண்டனைக்கு உட்படுத்தும்போது, இவ்வாறான பெரும் இரத்தக் களரிகளைத் தடுக்கலாம். இந்த இடத்தில் பொலீஸாரின் ஒழுங்குமுறையான - நீதியான - பக்கச்சார்பற்ற - நடவடிக்கைகள் முக்கியமாகும்.

பிரச்சினைகளைச் சட்டமுறையானதாக அல்லது தர்மப்படி தீர்க்கும் மனோபாவம் இருந்தால் வன்முறை வழிகளைத் தடுப்பது கடினமாக இருக்காது. யாழ். குடாநாட்டில் தடுக்கி விழுந்தாலும் சமாதான நீதிவான்களுக்கு முன்னாலேயே விழ நேரிடும். எனினும், ஊர்களின் சமாதானமும் நீதியும் நிலைநாட்டப்பாடமலேயே மோதல்களைச் சந்திக்க நேர்கிறது.

இத்தகைய குழு மோதல்களில் ஈடுபடுவதற்கென்றே தெரிந்து எடுக்கப்பட்ட சில ஊர்ச் சண்டியன்கள் உருவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. கொழும்பில் பாதாள உலகக் கோஷ்டியினரின் கைவரிசை போலப் பலமானதாக இல்லாவிடினும், குழு மோதல்கள் பலவற்றில் ஈடுபட்ட பட்டறிவும் வீரதீரமும் மிக்கவர்கள் ஆங்காங்கே இருப்பதாகப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மதுவும், சாப்பாடும், பணமும் பெற்று அடிதடிகளில் இறங்கும் சமூகத்துக்குப் பாதகமான இத்தகையோரை - அடியாள்களை - இனங்காண்பதும், அவர்களது விழலுக்கு இறைகும் வீரத்தினை ஒடுக்குவதும் கலாசாரத்தைப் பேணுவோரின் கடமையாகும்.

தமிழ்த்தேசியம் என்ற கருத்துருவாக்கத்திற்குள் பகைமைகளின் உச்சத்துக்கே சென்ற அரசியல் இயக்கங்கள் ஒன்றுபட்டு நிற்கும் சூழலில், சிவில் சமூகக் குழுக்கள் தமக்குள் முரண்பாடுகளை வளர்த்துக்கொண்டு, அடிதடிகளுக்குள் இறங்குவது அபத்தமானது. இதுதொடர்பான பொது விழிப்பு ஒன்றினை ஏற்படுத்துவது அவசியமானது. இதனை முன்னெடுப்பார் யார்?

- ஏகலைவன்.

# வானுலகிலும் இசையாய் இருப்பாய்

[redacted]



இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், இசைப் பேரரசி எம்.எஸ். சுப்புலட்சுமியின் இறுதி கிரிகைகளில் கலந்துகொள்வதற்காக சென்னை நோக்கி விமானத்தில் வந்து கொண்டிருந்த போது எழுதிய அஞ்சலிக் கவிதை இது.

யாழிசையில் பிறந்த இறையிசை
வானுலகிலும் இசையாய் இருப்பாய்
யாழிசையில் பிறந்த ஏழிசைக் கீதம் நீ
உன்னிசை கொடுத்ததோ அமைதியும் இனிமையும்
இசைச் செல்வத்தோடு பொருட் செல்வத்தையும்
எல்லோருக்கும் அள்ளி அள்ளிக் கொடுத்தாய்
மானிடக் குரலின் மகத்துவத்தை இறைவனும் வியந்திட வாய்ப்புமளித்தாய்
ஆயிரமாயிரம் மானிடரெல்லாம் உன் காவியக் கருணையில் நனைந்து மகிழ்ந்தோம்
செவியில் செல்வம் மனதில் மகிழ்ச்சி நெஞ்சில் நெகிழ்ச்சி அள்ளி வழங்கிய
உன் சங்கீதக் குரலின் இனிய நாதத்தில் கொழித்து மகிழ்ந்தது எங்கள் உள்ளம்
வசந்த பருவமாய் யாழிசை கீதமாய் எண்பது ஆண்டாய் இதயங்கவர்ந்த
ஏழிசை நாதம் நீ நிறைவுற்றாலும் என் நெஞ்சமெல்லாமும் நிறைந்தாய்
மத்தியமாவதியில் மாலைகள் சூடிய மங்கையர் திலகம்
ஸ்ரீ ராகத்தில் சிறப்புகள் செய்து பக்தி கீதத்தில் சாதனை படைத்த பாரத ரத்னம்
தான்சேன் கானத்தை நாங்கள் உணர்ந்திட காலந்தந்திட்ட மாபெரும் கொடை நீ
அன்னமாச்சாரியாக புரந்தரதாசர் அற்புதம் படைத்திட்ட ஏழிசை மூவர்
உள்ளங்கவர்ந்த தமிழிசையெல்லாம் உன் குரலாலே உயிர்பெற்று மலர
வாரி வழங்கிய வள்ளலாறு போல காலக்கடலில் நீ கலந்து விட்டாலும்
நீ போற்றி வளர்த்த இசைப் பயிர் எம் உள்ளம், உடல், உதிரத்தில் கலந்து
காலங்காலமாய் உயிர்பெற்று வளம் பெற்று உலகத்தில் வாழும்
இசைக்கு இசை கொடுத்த நீ இவ்வுலகை நீங்கி இறையுலகு ஏகினாலும்
கோடி கோடி உள்ளத்தில் உணர்வாய் வாழ்ந்த நீ வானுலகிலும் இசையாய் இருப்பாய்.

# எலிபண்ட் ஹவுஸ் நிறுவனத்தின் மூன்று புதிய ஐஸ்கிறீம்கள் அறிமுகம்

Ceylon Cold Stores அதன் Elephant House ஐஸ்கிறீமின் இலச்சினையை மாற்றி மூன்று புதிய ஐஸ்கிறீம் வகைகளைக் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் அறிமுக விழா இம்மாதம் மூன்றாம் திகதி கொழும்பு பிளாஸா ஹோட்டலில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய John Keells Group நிறுவனத்தின் உணவு மற்றும் குடிபான உற்பத்திப் பிரிவின் தலைவர் ஜுட் குணரட்ன கூறியதாவது:-

நாம் காலத்தின் சுவையை உணர்ந்துள்ளோம். வாடிக்கையாளர்கள் கொடுக்கும் பணத்திற்கு ஏற்ப பெறுமதியானவற்றையும், புதிய சுவை அனுபவத்தையும் அவர்களுக்கு வழங்குகின்றோம்.

இவ்வுற்பத்தியின் சந்தைப்பங்கை அதிகரிப்பதற்கும் இதனைத் தொடர்ந்து பராமரிப்பதற்குமே நாம் இதன் இலச்சினையை மாற்றினோம். இவ்விலச்சனை மாற்றம் மேலும் தரமான பொருட்களைக் கட்டியெழுப்பும் கம்பனியின் நடவடிக்கைகளில் ஒரு பகுதியே.

அண்மையில் எம்மால் அறிமுகப்படுத்தப்பட்ட கறுத்தக் கொழும்பான் மற்றும் மிக்ஸ் புரூட் மெக்ஸ் ஆகிய ஐஸ்கிறீம் வகைகளும் விற்பனையில் உச்சநிலையை அடைந்துள்ளன.

இதனையடுத்தே இம்மூன்று புதிய ஐஸ்கிறீம் வகைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 'Coffee Grande', 'Cookie Cream' மற்றும் 'Toffee Caramel' போன்றவையே இப்போது அறிமுகப்படுத்தப்பட்டிருப்பவையாகும். உலகின் மிகப்பெரிய தின்பண்ட உற்பத்தியாளர்களின் ஆலோசனையைப் பெற்று பல ஆய்வுகளை மேற்கொண்ட பின்பே இத்திட்டம் வெற்றியளித்துள்ளது.

எமது மொத்த ஐஸ்கிறீம் வகைகளை பதின்மூன்றாக அதிகரித்து இப்புதிய வகைகளும் மிகப்பிரபல்யம் அடையும் என்பது உறுதி. இவை மறுசீரமைக்கப்பட்ட சந்தையைக் குறிவைத்தே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இப்புதிய ஐஸ்கிறீம் வகைகள் சர்வதேசதரத்தில் வடிவமைக்கப்பட்ட பொதிகளில் கிடைக்கும். இது 'In Mold' எனப்படும் ஐரோப்பிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் செய்யப்பட்டதாகும். இலங்கையில் மாத்திரமன்றி தென்கிழக்காசியப் பிராந்தியத்திலேயே இன்னும் இத்தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவில்லை. நாம்தான் இதனை முதன்முதலில் இலங்கையில் அறிமுகப்படுத்துகின்றோம்.

இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட 'லேபல்' இந்தப் பொதியில் ஒட்டப்பட்டிருக்கின்றது. ஈரம் போன்றவற்றால் கழறாது. இப்பொதிகளை 'பீனிக்ஸ்' நிறுவனம் உற்பத்தி செய்கின்றது.

Elephant House இன் ஐஸ்கிறீம் வகைகள் முச்சக்கரவண்டி,லொறி மற்றும் ஒட்டோ போன்றவற்றில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளின் ஊடாகவும், கடைகளிலும் நாடு பூராகவும் கிடைக்கும்.

Elephant House இன் ஐஸ்கிறீம் வகைகள் 1935 ஆம் ஆண்டில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டன. அன்றிலிருந்து இன்றுவரை அதன் சந்தை சரியவில்லை.

உள்ளூர் ஐஸ்கிறீம் வகைகளும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஐஸ்கிறீம் வகைகளும் சந்தையில் உலாவருகின்ற போதிலும் Elephant House ஐஸ்கிறீம் வகைகள் 65 சதவீத சந்தைப்பங்கைக் கொண்டுள்ளன எனக் கூறினார்.

இதுவரையில் Elephant House Ice Crems பல விருதுகளைப் வென்றுள்ளன. The National Quality Award, Gold for Large Scale Manufacturing, The Energy Award for the financial Year ending 2003, The Productivity Award மற்றும் HACCP Award போன்ற விருதுகள் இவற்றுள் அடங்கும்.





# அகுபங்சரில் சிறுநீரகக் கல் மிக எளிதாக வெளியேறிய விந்தை

நான் கடந்த 5 வருடங்களாக சிறுநீரகக் கல் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்தேன். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, லேசர் சிகிச்சை செய்யப்பட்டது எந்த வித பயனும் ஏற்படாத நிலையில் சத்திரசிகிச்சை தான் இறுதிவழி என்று பரிந்துரைக்கப்பட்டது.திரும்பத் திரும்பக் கல் தோன்றும் சாத்தியம் இருப்பதனால் சத்திரசிகிச்சைக்கு மனமில்லாமல் அகு பாங்சர் சிகிச்சை க்குச் சென்றேன். அகுபாங்சர் சிகிச்சை பற்றிக் கேள்வியுற்று டாக்டர் நகுறாம் அவர்களிடம் சிகிச்சைக்குச் சென்றேன். அகுபாங்சர் சிகிச்சை பற்றிச் சிறப்பாக பின்வருமாறு விளக்கம் தந்தார்.

அதாவது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதன் மூலம் உடலினுள்ளேயே ஒரு விசை உருவாக்கப்பட்டு இயற்கையாக தானாகவே கல் வெளியேற்றப்படும். லேசர் கிகிச்சை, சத்திரசிகிச்சை போன்றவற்றில் விசைஉடம்பிற்கு வெளியே இருந்து வழங்கப்படுகிறது)

அகுபாங்சர் சிறப்புத் தத்துவப்படி,
சிகிச்சை நோய்க்கோ, நோய் அறிகுறிகளுக்கோ அல்ல உச்சி முதல் உள்ளங்கால் வரை நோயாளி என்கிற முழு மனிதனுக்கு (உடல் + மனம் (கோபம், ஏக்கம், கவலை, பயம் போன்றன)) த்தான் சிகிச்சை வழங்கப்படுகிறது.

Dont Treat the diseas and Symptom's"
"Treat the Patient" (Whole Body + Mind Abnormalities)

ஒரு குறித்த நோயாளியில் ஒரு மரத்தின் கிளைகள் போன்று பல அறிகுறிகள் இருந்தாலும் ஆணிவேரைப் போன்று இருப்பது ஒரேயொரு நோய்தான். அது உச்சி முதல் உள்ளங்கால் வரை சக்தி வடிவத்தில் நோய்ச்சக்தியாக பரந்திருக்கிறது. சிகிச்சை நோய்ச்சக்தியை முறியடிக்கும் விதத்தில் அமைந்திருக்கும்.

என்பது போன்ற பல விளக்கங்கள் அளித்து மிகச் செம்மையானதும், மிகத் துல்லியமானதுமான நாடிப்பரிசோதனையுடன் சிகிச்சை வழங்கப்பட்டது.

8மாத சிகிச்சையின் பின் ஏறத்தாழ (1cm x 1cm x 1cm) கனபரிமாணமுள்ள இரண்டு கற்களுமே மிக இலகுவாக வெளியேறிவிட்டன.

இந்த மகிழ்ச்சியான செய்தி புகழுக்காகவோ அல்லது விளம்பரத்திற்காகவோ பிரசுரிக்கப்படவில்லை. மக்கள் விழிப்படைய வேண்டும். எதிர்காலத்தில் அகுபங்சர் பல்கலைக்கழகம் யாழ்.மண்ணில் தோன்றி நிறைய அகு பாங்சர் டாக்டர்கள் உருவாக வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திற்காகப்பிரசுரிக்கப்படுகிறது.எல்லோரும் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் வாழ வேண்டும் என்ற டாக்டரின் ஆதங்கம் நிறைவேறும் காலம் வெகு தூரத்தில் இல்லை. நான் குணமாக கிருபை செய்த எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதகமலங்களில் நன்றிப்பூக்களைக் காணிக்கையாக்குகிறேன்.

அகுபங்சர்
ஊசி



சி.சிவலிங்கம்
கரவெட்டி தெற்கு, கரவெட்டி.



சித்தாலேப

# லக்பேயாவ பஸ்பங்குவவில் அடங்கியுள்ள மூலிகைகளின் தன்மைகள்

இஞ்சி: காய்ந்த இஞ்சியில் உள்ள "ஜின்ஜபரின்" எனப்படும் வாயுவாகும் தன்மையுடைய பதார்த்தம் இறுகிய சுவாசநாளங்களை தூய்மைப்படுத்தி சுவாசத்தை இலகுவாக்கும். வயிற்றுவலி,வயிற்றுப்பெறுமலை குணப்படுத்தும்.

கொத்தமல்லி: இனிமையான வாசனை நிறைந்த "லினலோல்" எனப்படும் இரசாயனம் இறுகிய சுவாச நாளங்களை தூய்மைப்படுத்தி சுவாசிப்பை இலகுவாக்கும்.

பத்படகம்: இதில் காணப்படும் "திரிடெபின்" எனப்படும் இரசாயனப்பொருள் தடிமனை ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கவல்லது. இதில் காணப்படும் எண்ணெய்த்தன்மை சுவாசநாளங்களில் ஏற்படும் வீக்கங்களைப் போக்கி சுவாசத்தை இலகுவாக்கும்

வெனிவல்: இதில் அடங்கியுள்ள "பெர்பரின்" எனப்படும் இரசாயனப் பொருள் பற்றீரியாக்களை, பங்கஸ்களை அழிக்கவல்லது. ஏற்பு நோய்க்கு சிறந்த மருந்தாகும். சரீர வலிகளை போக்கவல்லது. தடிமனை உண்டாக்கும் வைரசை அழிக்கவல்லது.

திப்பிலி: திப்பிலி விதைகளில் 15% - 20% "பீபரின்" எனப்படும் இரசாயனப்பொருள் காணப்படுகிறது. இது வாய், தொண்டை, காதுகளில் எரிச்சலை உண்டாக்கும் தன்மையுடையது. தடிமனின் போது ஏற்படும் குளிரை தடுக்கவல்லது. சுவாசக்குழாயில் ஏற்படும் தடைகளை நீக்கி சளியை வெளியேற்றி தொண்டையை தெளிவாக்கும் தன்மையுடையது.

சுண்டங்கத்திரி: "சொலசோடின்" எனப்படும் இராசயனப் பொருள் சளி இறுகளை நீக்கி சளியை வெளியேற்றும். இருமலை போக்கி சுவாசிப்பை இலகுவாக்கும். சுவாசப்பையில் காணப்படும் "ஹிஸ்டமின" அளவைக் குறைத்து வலிகளைக் குறைக்கும்.

தன்மை :காய்ச்சல், தடிமன், இறுமல், சோர்வு, தலைவலி, உடல்வலிகளை போக்கவல்லது.

பாவிக்கும் முறை: மூன்று மணித்தியாலத்திற்கு ஒருமுறை தொடர்ந்து குணமடையும் வரை பாவிக்கவும்.

தவிர்க்க வேண்டியவை: மதுபானம் பாவித்தல், நித்திரை விழித்தல், வெய்யில், மழை,காற்று, பனியில் செல்லல், நேரம் தவிர்ந்த நேங்களில குளித்தல், குளிரூட்டிய உணவுகளை உண்ணல்.

இவற்றை சரியான முறையில் பின்பற்றுவதன் மூலம் விரைவில் குணமடையலாம்.

இலங்கையிலுள்ள அனைத்து விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும்.




ஹெட்டிகொட இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிட்.
33/3, ஸ்ரீ தர்மராம வீதி, இரத்மலானை, இலங்கை.
தொலைபேசி: 2736910 தொலைநகல்: -2735465 மின்னஞ்சல்: siddalep@slt.lk

# வியக்கவைக்கும் 'லண்டன் ஐ'

இன்னும் சில ஆண்டுகளில் உலகில் எங்கும் போய்வரும் அளவுக்கு விமானக் கட்டணங்கள் நடுத்தர மக்களை ஈர்க்கும் அளவுக்கு குறைந்து விடும். அப்போது, கண்டிப்பாக சில நாடுகளை மறக்காதீர்கள். அதுவும் லண்டன் போகாமல் இருக்காதீர்கள் அங்கு பலரையும் வியக்கவைக்கும் அற்புதம் 'லண்டன் ஐ'.

லண்டனில் பார்க்க ஏகப்பட்ட வரலாற்றுப் பொக்கிஷங்கள் இருக்கின்றன. பிக் பென் கடிகாரம், சிட்டி ஹோல் எதுவும் மறக்கமுடியாதது தான். சமீபத்திய கவர்ந்திழுப்பு 'லண்டனை ஐ'. இது இராட்சத ராட்டினம்தான். ஆனால், நவீன உலகின் எல்லா தொழில்நுட்ப வசதிகளையும் கொண்ட ராட்டினம். இது நடு வானில் தொங்கும் சொர்க்கம் என்று கூறலாம்.

✱ கட்டடக்கலை வடிவமைப்பு நிபுணர்கள் டேவிட் மார்க்ஸ், ஜூலியா பேர்பீல்டு கடந்த 1993 ஆம் ஆண்டு, தங்கள் வீட்டில் உட்கார்ந்து யோசித்ததன் விளைவு 2000 ஆம் ஆண்டில் நனவானது.

✱ இந்த ராட்டினம் சாதாரணமானதல்ல. ஒரு நாளைக்கு 15 ஆயிரம் பேர் இதில் அந்தரத்தில் பயணித்து குஷிப்படுகின்றனர். ஐரோப்பிய நாடுகளின் பிரபலமான சுற்றுலா இடம் இது.

✱ இராட்சதவைபவங்கள் கொண்டாடுபவர்களும், தேனிலவு அனுபவிப்பவர்களும் தான் இங்கு அதிகம். அவர்கள் தான் முன்னதாகவே 'புக்' செய்து விடுகின்றனர். இவர்கள் 32 கண்ணாடிக் கூண்டுகளில் பயணிக்கின்றனர்.

✱ இந்தஇடத்தைச் சுற்றி ஆங்காங்கவே மோடி மஸ்தான் முதல் வேஷம்போட்டுதமாஷ் செய்து ஏதோ சில்லறை காசுவாங்குவோர்வரை ஆங்காங்கு முளைத்து விடுவர். பார்க்கவே பரவசமாகஇருக்கும்.

**வேறென்ன பார்க்கலாம்?**

லண்டனில் வெஸ்ட் மினிஸ்ட்டர் அபேயில் இருந்து வெஸ்ட் எண்ட் வரை பார்க்க எவ்வளவோ இடங்கள் உள்ளன.

✱ டவர் ஒவ்லண்டன்: 900 ஆண்டு கால பழமை வாய்ந்தது. இங்கு தான் விக்டோரியா ராணி அணிந்த கோகினூர் வைரம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அரச பரம்பரை அனுபவித்த மாளிகைகள் இங்குண்டு. சிறைவளாகம், இராணுவப் பாசறை, அரண்மனை எல்லாம் உண்டு. அது மட்டுமன்றி ஹைதி பார்க் வனவிலங்குப் பூங்காவும் பார்க்கலாம்.

✱ வெஸ்ட் மினிஸ்ட்டர் அபே: எங்கு பார்த்தாலும் கட்டடங்களின் அசாத்திய அழகு, நம்மை மறக்கச்செய்யாது. இங்குதான் மேடம்டுசாட் மையம் உள்ளது. மெழுகால் செய்யப்பட்ட அமிதாப் முதல் ஆர்னால்ட் சுவாஸ் நெக்கர் வரை பார்த்து ரசிக்கலாம். பொப் போன்ற இசை நிகழ்ச்சிகள் நடக்கும் லாயிட் வெப்பர்ஸ் 'தி பான்ட்டம் ஒவ் ஒபரா' கூடமும் இங்கு தான் உள்ளது.

பாண்ட் தெரு, ரீஜென்ட் தெரு, ஆக்ஸ்போர்ட் தெரு எல்லாம் ஷாப்பிங்குக்கு உகந்தவை. நாட்டிங்ஹில், ப்ரிக் லேன், காம்டென் பகுதிகளில் ஓரளவு மலிவான விவகாரங்கள் கிடைக்கும்.


✱ விம்பிள்டன் டென்னிசாகட்டும், லோர்ட்ஸ் கிரிக்கெட்டாகட்டும் வெஸ்ட் எண்ட் பகுதியில் களை கட்டும் சிறப்பம்சங்கள்.

✱ தெற்கு கென்சிங்டன் பகுதியில், க்யூ கார்டன் பார்க்க வேண்டிய, இயற்கை எழில் கொஞ்சும் பகுதி. இங்கு 40 ஆயிரம் விதவிதமான செடிகள் பார்ப்பவரை அதிசயப்பட வைக்கும்.

**லண்டனைப் பற்றி**

லண்டன், பிரிட்டனின் தலைநகர் என்பது உங்களுக்கு தெரிந்தது தானே. தெரியாத சில விஷயங்கள் இதோ:

601 சதுர மைல் பரப்பு கொண்டது. 72 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். ஆங்கிலம் தான் பேசும் மொழி. நீங்கள் தைரியமாக சமாளிக்கலாம். ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் தான் 18 சென்டிகிரேட் வெப்பம் இருக்கும். பெரும்பாலான சமயங்களில் 30 ஐ கூட தாண்டும். பனிக்காலத்தில் 6 சென்டிகிரேட்டுக்கு கீழே போகும்.




பண்டிகைக் கால பரிசு மழை!

அதிர்ஷ்ட சீட்டிழுப்பு

MMBL

500 grams GOLD

முதலாம் பரிசு - 50 கிராம் கோல்ட் பார்
மற்றும் 20 கிராம், 10 கிராம், 4 கிராம் பரிசுகள் 70 அதிர்ஷ்டசாலிகளுக்கு

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் அன்புக் குரியவர்களிடம் இருந்து வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்றத்தின் மூலம் பணத்தை இலங்கையின் அங்கிகாரம் பெற்ற MMBL உபமுகவர்கள் ஊடாக பெற்று பரிசுகளை வெல்லுங்கள்!

விபரங்களுக்கு MMBL முகவரை தொடர்பு கொள்ளுங்கள் 011 2372 333

ரூபாய் 250,000 ற்கு மேல் காசு பெறும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள்.

WESTERN UNION
பணப் பரிமாற்றம்
• நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்
• இச் சலுகை டிசம்பர் 2004, ஜனவரி 2005 மாதங்களில் பணப் பரிமாற்றம் செய்பவர்களுக்கு மட்டும்!

AUTHORISED AGENT
MMBL
Money Transfer (Pvt) Ltd.
300, Galle Road, Colombo 3.
(வெளிநாட்டு நாணயம் மாற்று முகவர்)
• அநேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்

FLEX Graphic
License No: C/130/2004





மேசைத் தொலைபேசி அதிரடி விலையில்

IDD லோக்கல் இணைப்புக்கள் உடன் எப்பிரதேசத்திற்கும் நேர்வான முறையில் வீடுகளில் பட்டிந்தரப்படும்.


IDD 25/= மட்டும்

ஒரு வருட உத்தரவாதம் உண்டு

14,000/= மட்டும்

| அழைப்புக்களுக்கான கட்டண விவரம் | |
|---|---|
| மாதாந்தக் கட்டணம் | 150/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (பகல்) | 11/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (இரவு) | 6/= |
| உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் அதன்பின்னர் (பகல்) | 4/= |
| உள்வரும் அழைப்பு (இரவு) | முற்றிலும் இலவசம் |

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் இணைப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்று முழுதான துணை நிறுவனம். மேலதி விவரங்களுக்கு:


பவர் செலூலர் ரேடிங் கம்பனி

Office: இல. 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 7070, 0712 399 220, 0777 281 521.

Shop: இல. 305, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பொருத்தமான பரிசு எது...?

ரூபா 500
ரூபா 1000
ரூபா 2500

அன்பளிப்பு வவுச்சர்கள்

டிசம்பர் மாதம்
தினமும்
10 முதல் 10 வரை
திறந்திருக்கும்

ODEL
MIND BODY AND SOUL

வாடிக்கையாளர் சேவை தொலைபேசி:
0777 420388, 0777 847867.